
# கல்கி

KALKI
24.6.2001
ரூ. 5.00





## வர்த்தமானன் பதிப்பகம்
### வழங்கும்
## மாபெரும் முன்வெளியீட்டுத் திட்டம்

சலுகை, சலுகை மேல் சலுகை, தவணை முறை ஆகிய அனைத்தும் உண்டு.

ஆழ்வார்களின் அமுதப் பாடல்களான

# நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

மூலமும் விளக்கவுரையுமாக - 9 தொகுதிகள்

| | |
|---|---|
| (4,500 பக்கங்களில்) விலை | ரூ. 1000.00 |
| வர்த்தமானன் அறக்கட்டளையினரின் உதவித்தொகை | ரூ. 250.00 |
| | ரூ. 750.00 |
| முன்வெளியீட்டுச் சலுகை | ரூ. 150.00 |
| **சலுகை விலை** | **ரூ. 600.00** |

'மயர்வற மதிநலம் அருளப் பெற்ற' ஆழ்வார்களால் திருமாலின் சிறப்பியல்புகளைக் குறித்துப் பாடப்பட்ட தெய்வப் பனுவல் தான் **'நாலாயிர திவ்வியப் பிரபந்தம்'** ஆகும். திருமாலின் உயர் நலங்களில் ஆழ்ந்தவரால் பாக்களாகப் பாடப் பட்டமையாலும், தெய்வத் தொடர்புடை மையாலும் இது திவ்வியப் பிரபந்தம் எனப்படுகிறது.

இந்நூலிற்கு உரைவகுத்த டாக்டர் இரா. வ.கமலக்கண்ணன் வித்துவான், பி.லிட், எம். ஏ (சிறப்புநிலை) பி.எட், பி.எச்.டி, முதலிய பட்டங் களைப் பெற்றவர். பல ஆண்டுகளாக மேல்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராகவும், பின்னர் தலைமையாசிரியராகவும் பணியாற்றிய அனுபவம் மிக்கவர். இவரின் 'உலகப் பெருங்கவிஞர் கம்பர்' என்னும் நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொகுத்து வரும் பேரகராதிக்கு 'முதலாழ்வார் பாசுரங்கள் முந்நூறுக்கும்' இவர் 'சொல்லடைவு' அமைத்துக் கொடுத்துள்ளார். திருமலை திருப்பதி தேவஸ்தான மாத வெளியீடான 'சப்தகிரி'யில் இவரது வைணவ சமயம் பற்றிய கட்டுரைகள் பல இடம் பெற்று வருகின்றன. 'ஆலய தரிசனம்' மாத இதழிலும் இவரது கட்டுரைகள் வெளிவருகின்றன.

இப்படியாக எழுத்தாற்றல் அனுபவமும், சென்னை வானொலியில் சமய இலக்கியப் பேருரைகள், பல வைணவ மாநாடுகளில் சிறப்புரையாற்றிய அனுபவமும், 40 ஆண்டுகளாக இவர் சேகரித்து வைத்த ஆய்வுச் செய்திகளுடன், சம்பிரதாய நூல்களை வல்லார் வாய்க் கேட்டும் பெற்ற அனுபவ அறிவும் சேர்ந்து உருவானது தான் இந்த நாலாயிர திவ்வியப் பிரபந்த விளக்க உரை.

**4000 பாடல்களுக்கும் விளக்கவுரை மற்றும் சிறப்புரையும் என்று அமைக்கப்பட்ட இந்நூலின் தொடக்கத்தில், உரையாசிரியர் எழுதிய ''நூலினைப்பற்றிய செய்திகள்'' என்னும் பகுதி விரிவான முன்னுரையாக, நூலிற்கு முத்தாய்ப்பாய் அமைகிறது.**

**தபாலில் பெற**

சலுகை விலையான ரூ.600 இல் ரூ.300 (M.O / DD) மட்டும் 7.7.2001 க்குள் அனுப்பிப் பதிவு செய்து கொள்க. 6.8.2001 லிருந்து பணம் வந்த வரிசைப்படி 9 தொகுதி களும் V.P.P.யில் அனுப்படும். மீதித் தொகை ரூ.300, தபால் மற்றும் கட்டுச் செலவு ரூ.50 சேர்த்து ரூ.350 மட்டும் தபால்காரரிடம் செலுத்தி 9 தொகுதிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

**நேரில் பெற**

எமது அலுவலகத்தில் ரூ. 300 மட்டும் செலுத்தி (7.7.2001 க்குள்) முன் பதிவு செய்து ரசீது பெற்றுக் கொள்க. ரசீதில் குறித்த தேதியில் மீதித் தொகை ரூ.300 மட்டும் செலுத்தி 9 தொகுதிகளையும் பெற்றுக் கொள்ளலாம். நேரம் : காலை 9.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை. ஞாயிறு விடுமுறை.

**முகவரி: வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.ஆர். காம்ப்ளக்ஸ், 141, வடக்கு உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை - 17. (பனகல் பார்க் அருகில்) ✆ : 8142377 .**

முக்கிய குறிப்பு : Cheque (Local உள்பட) ஏற்கப்படமாட்டாது M.O/DD அனுப்புவோருக்கு நூல்கள் தபாலில்தான் அனுப்பப்படும். நேரில் தரப்படமாட்டாது. ஒரே தடவையில் சலுகை விலையினைச் செலுத்துவோர்க்குச் சிறப்புச் சலுகை எதுவும் கிடையாது.



கல்கி-60
ஜொலிக்கும் வைர விழா கொண்டாட்டங்கள்!
ஒலிக்கும் உளிச் சப்தம் மயக்கும் சலங்கை சப்தத்துடன்
கல்கி
5.8.2001
ஆண்டு மலரில் ஆரம்பம்
வாசகர்களே, பல்சுவை விருந்துக்குத் தயாராகுங்கள்!
கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



# “எங்களுக்கு

அரசியல் காழ்ப்புணர்ச்சியினால் பதின்மூன்றாயிரத்து நாநூற்று அறுபது மக்கள் நலப் பணியாளர்கள், பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கிராமப் பஞ்சாயத்து நிர்வாகத்திற்கும், மக்களுக்கும் இடையில் தகவல் பாலமாகப் பணியாற்றி வந்த இவர்களால், உண்மையில் நன்மைகள் இல்லையா? செங்கல்பட்டு அருகிலிருக்கும் சில கிராமங்களுக்கு விரைந்து விசாரணையில் இறங்கினோம்.

வல்லம் கிராமத்தின் பஞ்சாயத்து தலைவர் வில்சன் சாம்ராஜ் சொன்னார்:

“வல்லம் பஞ்சாயத்துக்கு உட்பட்டு பதிமூன்று சின்ன சின்ன கிராமங்கள் இருக்கு. இங்கே சீனிவாசன் விக்டோரியான்னு இரண்டு மக்கள் நலப் பணியாளர்களை வேலைக்குச் சேர்த்தோம். இதுல சீனிவாசன் அ.தி.மு.க. உறுப்பினர். நான் தி.மு.க. பஞ்சாயத்துத் தலைவர். சீனிவாசன் ரொம்ப ஏழைன்னு ஊர்ல எல்லாருக்கும் தெரியும். பலரும் எடுத்துச் சொன்னதாலே அவர் அ.தி.மு.கன்னு தெரிஞ்சேதான் வேலை போட்டுக் கொடுக்க ஏற்பாடு செஞ்சோம். அதே மாதிரி பெண் மக்கள் நலப் பணியாளர் விக்டோரியா சுயநிதி உதவிக்குழு ஆரம்பிச்சு வெற்றிகரமா நடத்தினாங்க. அவங்க எந்தக் கட்சிலயும் சேர்ந்தவங்க கிடையாது. அரசுதிட்டம், பெண்கள் திட்டம் பற்றித் தெரிஞ்சுக்கனும்ன்னா அவங்களைக் கேட்டா போதும். விவரமாச் சொல்லுவாங்க. அதனால் அவங்களைப் போட்டோம். விக்டோரியா ஏற்கெனவே எண்ணூறு ரூபா சம்பளத்துக்கு வேலைக்குப் போய்க்கிட்டு இருந்தாங்க... மக்கள் நலப் பணியாளராகச் சேர்ந்த பிறகு அந்த வேலையை விட்டுட்டாங்க. சீனிவாசன் நிலைமை இன்னும் மோசம்... எழுநூற்று ஐம்பது ரூபாதான்னாலும் மாசாமாசம் கிடைச்சிடுதேன்னு இதை நம்பி குடும்பத்தை ஓட்டினார். இப்போ வேற வழியில்லாமல் ஏதோ ஒரு சிட்டுக் கம்பெனிக்கு ஐந்நூறு ரூபாய் சம்பளத்துக்கு வேலைக்குப் போறார்” என்ற



• செல்வகுமார்

• வில்சன் சாம்ராஜ்

## வழி சொல்லுங்க!"

வில்சனிடம் மக்கள் நலப் பணியாளர்கள் ஆற்றி வந்த பணிகள் குறித்துக் கேட்டோம்.

"என்னதான் பஞ்சாயத்துலே உதவியாளர் இருந்தாலும், இவங்களைப் போட்ட பிறகு, எந்த வேலையும் தாமதமானது கிடையாது. குடிநீர் வினியோகத்துல இவங்களுக்குப் பெரிய பங்கு இருந்தது. எந்த ஏரியாவுக்குத் தண்ணீர் போகலே, குழாய் உடைஞ்சிருக்குன்னு உடனே தகவல் கொடுப்பாங்க. கடந்த ஐந்து வருஷத்துலே ஒருநாள் கூட தெருவிளக்கு எரியலேன்னு புகார் வந்தது கிடையாது. எரியாத விளக்கா, உடனே மாத்திடுவாங்க. குறிப்பா உழவர் சந்தையைச் சொல்லணும். செங்கல்பட்டு உழவர் சந்தையைக் காலை நாலுமணிக்குத் திறந்து வெச்சு விவசாயிகளுக்கு டோக்கன் கொடுக்குறது இவங்கதான். இப்போ உழவர் சந்தை காலை ஏழு மணிக்குத்தான் தொடங்குது. இவங்க இல்லாதது இப்போ எங்க கையை ஒடிச்ச மாதிரி இருக்குங்கிறதுதான் உண்மை" என்கிறார் வில்சன்.

**வ**ல்லம் கிராமத்தின் பெண் மக்கள் நலப் பணியாளர் விக்டோரியாவைச் சந்தித்தோம்.

"மக்கள் நலப் பணியாளர் வேலை கிடைச்ச பிறகு பன்னிரண்டு சுயநிதி உதவிக் குழுவை அமைச்சிருக்கேன். வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு முறை தடுப்பூசி போடும் போது... ஒருத்தர் கூட விடுபடக் கூடாதுன்னு கஷ்டப் பட்டிருக்கிறேன். அரசாங்கத்துக்கிட்டேயிருந்து பெண்களுக்குக் கிடைக்கிற சலுகைகளை எடுத்துச் சொல்லி, அது கிடைக்க வேண்டியவர்களுக்கு எழுதிப் போட்டு முறையா வாங்கியிருக்கோம். பள்ளிக்கூடத்திலேர்ந்து நின்னுட்ட பிள்ளைகளுக்குக் கிளாஸ் எடுக்கிறேன்.. இப்படி சொல்லிக்கிட்டே போகலாங்க... குறைந்த சம்பளம்னாலும் நம்ம கிராமத்துக்காக உழைக்கிறோம்கிற திருப்தி இருந்தது. இப்போ ஏன் இவ்ளோ கஷ்டப்பட்டோம்ன்னு கசப்பா இருக்கு" என்கிறார்.



• விக்டோரியா

விக்டோரியா தாம் மேற்கொண்டு வந்த கிராமப் பணிகளை நிறுத்தி விட்டாலும், பெண்கள் வீடு தேடி வந்து உதவி கேட்கிறார்களாம்.

"மக்கள் நலப் பணியாளர்கள் அந்தந்த கிராமங்களைச் சேர்ந்தவர்களாகவே இருப்பதால், மக்கள் குறைகளை முதலில் அவர்களிடம் துணிந்து சொல்கிறார்கள்" என்கிறார் பாலூர் பஞ்சாயத்தில் மக்கள் நலப் பணியாளராக இருக்கும் செல்வகுமார்.

"பத்தாவது பாஸ் பண்ணியதற்கு இந்த வேலையாவது கிடைச்சுதேன்னு சந்தோஷப்பட்டேன். இந்த வேலையை நம்பித்தான் எனக்குப் பொண்ணு கொடுத்தாங்க. நானும் வேலைகளை இழுத்துப் போட்டுக்கிட்டு செஞ்சேன். அதுக்குச் சரியான பரிசு கொடுத்துருக்காங்க... எத்தனை நாளைக்கு இதையே நினைச்சுக்கிட்டு இருக்கிறதுன்னு இப்போ கட்டட வேலைக்குப் போறேன். ஏம்பா வர மாட்டேங்கிற, தண்ணி வரலே, விளக்கு எரியலேங்கிறாங்க. படிக்கிற பசங்க இனிமே லைப்ரரியைத் திறக்க மாட்டியான்னு கேட்குறாங்க. அவங்களுக்குப் பதில் சொல்ல சங்கடமா இருக்கு. எங்க பணி வேணுமா வேணாமான்னு இந்த அரசாங்கம் கிராம மக்கள்கிட்டே கேட்கட்டும். அவங்க சொல்லுவாங்க!" என்ற செல்வராஜ் "எங்களை வேலையை விட்டு எடுக்கிறதுக்கு முன்னால ஒரு வார்த்தை கேட்டிருந்தா எங்க நிலைமையை சொல்லியிருப்போம். அதுக்கு வாய்ப்பே கொடுக்கலே... எங்களுக்கு ஒரு வழி சொல்லணுமில்லே" என்கிறார்.

இந்த ஏழைப் பணியார்களை நடுத்தெருவில் நிறுத்திய பாவத்திற்கு மூன்று மக்கள் நலப் பணியாளர்கள் தற்கொலை செய்து கொண்டு மாண்டிருக்கிறார். பத்து பேர் தற்கொலைக்கு முயன்று காப்பாற்றப் பட்டிருக்கிறார்கள். இவர்களின் கண்ணீர் உலர்வதற்குள் மீண்டும் இவர்களைப் பணியில் அமர்த்துவதே மனிதாபிமானமாக இருக்கும். அதை முதல்வர் ஜெயலலிதாவிடம் எதிர்பார்க்கிறார்கள் இவர்கள்.

சந்திப்பு: **ஜெயந்தன்**

படங்கள்: **ராஜன்**

*கொதிக்கிறார்கள் மக்கள் நலப் பணியாளர்கள்!*





காதில் விழுந்தவை:

# சாட்டையால் தூக்குப் போட்ட பம்பரம்!


**க**லைஞர் பிறந்த நாள் விழா கொண்டாட்டங்களில் கவிதை பாட இந்த முறை பிரபல கவிஞர்களைப் பிடிப்பதற்கு மிகச் சிரமப்பட வேண்டியதாகிவிட்டதாம். கடந்த ஐந்து வருடங்களாக, "எனக்கும் வாய்ப்புக் கொடுங்கள்" என்று ஓடி ஓடி வந்து கேட்டவர்கள் இப்போது ஆளும் கட்சிக்குப் பயந்து கண்டும் காணாமலும் இருந்துவிட்டார்களாம். இப்படிப் பிரபல கவிஞர்கள் டபாய்த்ததால் புதியவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. அதிலும் கவிஞர் கபிலன் தம் கவிதை மூலம் கலைஞர் இதயத்தில் இடம்பெற்று விட்டார். "தேர்தலுக்கு முன் உங்களை ஒரு தமிழ்க்குடிமகன் தான் ஏமாற்றினார்; ஆனால் தேர்தலுக்குப் பிறகு 33 லட்சம் தமிழ்க்குடிமகன்கள் உங்களை ஏமாற்றி விட்டார்கள்." "ஒரு பம்பரம் சாட்டையினாலேயே தன்னைத் தூக்குப் போட்டுக்கொண்டது" - இவை கபிலனின் கவிதை பஞ்ச்கள்!


**ம**த்திய அரசின் சுற்றுச் சூழல் துறை உதவியுடன் சென்னையில் ஓடும் (?) அடையாறு, கூவம் ஆறுகளில் தூர் வாரி சுத்தப்படுத்தும் திட்டம் சென்ற ஆட்சியின் போது போடப்பட்டது. கோடிக்கணக்கில் நிதியும் ஒதுக்கப்பட்டு டெண்டரும் விடப்பட்டது. சிறிது வேலைகள் நடந்த நிலையில் ஆட்சி மாற்றம் வந்து விட்டதால், பணிகள் நிறுத்தப்பட்டன. இப்போது, சம்பந்தப்பட்டவர்களை டெண்டர் எடுத்தவர்கள் தளராமல் சந்தித்து 'கவனிக்க', மீண்டும் பணிகளைத் துவக்க க்ரீன் சிக்னல் கொடுக்கப்பட்டு விட்டதாம்!

**மூ**ன்று அமைச்சர்களுக்குக் கொடுக்கப்பட்ட கல்தா காரணமாக எல்லா அமைச்சர்களும் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். "நித்திய கண்டம்; பூரண ஆயுசு" என்று புலம்பினார் அமைச்சரின் உதவியாளர் ஒருவர். எது செய்தால் சரி, எதைச் செய்தால் பிரச்னை வரும் என்றெல்லாம் குழம்பி பல விஷயங்களில் முடிவெடுக்க முடியாமல் திணறுகிறார்களாம் அமைச்சர்கள். இதைச் சாதகமாக எடுத்துக் கொண்டு அதிகாரிகள் கோலோச்சுகிறார்களாம். அமைச்சர்கள் தங்கள் கருத்தை வலியுறுத்த, அதை விரும்பாத அதிகாரிகள் அம்மாவுக்கு "நோட்" போட வேண்டி வரும் என்று பயமுறுத்துகிறார்களாம். யாரைப் பார்த்தாலும் 'ஏதாவது பிரச்னை வருமோ' என்று சந்தேகத்தோடேயே பார்க்கிறார்கள் அமைச்சர்கள். "இந்தப் போக்கு ஒரு ஆரோக்கியமான நிர்வாகத்துக்கு உகந்ததல்ல." என்கிறார் கோட்டையின் மூத்த அதிகாரி ஒருவர்.

**ஜெ**யலலிதாவை எதிர்த்து அரசியல் நடத்த, தி.மு.க.வுடன் ஒத்துழைக்க சு. சுவாமி தயாராக இருந்தாலும், அவரது தோழமையை ஏற்றுக் கொள்வதில் தி.மு.க. பிரமுகர்களிடையே இரு வித கருத்துகள் இருக்கின்றன. "அவரை நம்ப முடியாது; நாளை அரசியல் காரணங்களுக்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ அவர் ஜெ.க்கு ஆதரவாக பல்டி அடிக்கக்கூடும் என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் வேறு பலரோ, "இப்போதைய நிலையில் ஜெயலலிதாவின் எதிர்ப்பாளர்களை ஒன்றுபடுத்தும் வேலையைத் தி.மு.க. செய்ய வேண்டும். அந்த அடிப்படையில் சுவாமியை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஜெ.க்கு எதிராக டெல்லியில் சில வேலைகளைச் செய்ய சுவாமியே சரியான ஆசாமி" என்கிறார்கள்.

— சஞ்சயன்




2001 ஜூன் 24
விஷு ஆனி 10
மலர் : 59
இதழ் : 47


# கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



## அரைகுறை டாக்டர்கள்!

பிரதமரின் முழங்கால் மூட்டு அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. இதற்கென டாக்டர் சித்தரஞ்சன் ரனாவத் என்ற நிபுணர் அயல்நாட்டிலிருந்து வரவழைக்கப் பட்டிருக்கிறார்.


நமது நிதியமைச்சர் யஷ்வந்த் சின்ஹா சிறுநீரக அறுவை சிகிச்சைக்கென அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் உள்ள மருத்துவமனையை நாடிப் போயிருக்கிறார்.

செல்வமும் செல்வாக்கும் உடையவர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கென அயல்நாடு செல்வதோ அல்லது அங்கிருந்து நிபுணர்களை வரவழைத்துக் கொள்வதோ சாத்தியம்.

நம் நாட்டு மத்தியதர வர்க்கமும் ஏழை எளியவர்களும் உள்நாட்டு மருத்துவர்களையும் மருத்துவ வசதிகளையும்தான் நாட முடியும்.

ஆகவே, மருத்துவக் கல்லூரிகளில் படித்து பட்டம் பெறுவோர் முழுக்க முழுக்க தகுதி அடிப்படையிலேயே எடை போடப்பட்டு அட்மிஷனும் பட்டமும் பெற வேண்டும் என்பது மிகவும் முக்கியமாகிறது.

ஆனால், மருத்துவக் கல்லூரி பட்ட மேற்படிப்பு நுழைவுத் தேர்வுகளில் ஷெட்யூல்ட் வகுப்பினர், பழங்குடியினர் ஆகிய இரு பிரிவு மாணவர்களுக்கு மட்டும் மதிப்பெண்களில் சலுகை காட்டப்பட வேண்டும் என்றொரு கோரிக்கை மத்திய பிரதேச முதல்வரிடமிருந்து எழுந்திருக்கிறது!




இதற்கு முதல்வர் திக்விஜய் சிங் கூறும் காரணம் இதுதான்: மத்திய பிரதேச மாநிலத்தில் 16 சதவிகிதத்தினர் ஷெட்யூல்ட் வகுப்பினர், இருபது சதவிகிதத்தினர் பழங்குடி மக்கள். நாகரிகத்தின் சுவடு பதியாத கிராமப் பகுதிகளிலிருந்து வரும் இவர்களுக்கு அறிவும் ஆற்றலும் இருந்தாலும் நவீன விஞ்ஞான முன்னேற்றம் குறித்த பரிச்சயம் இருக்க வாய்ப்பு இல்லை. ஆகவே இவர்களை இதர மாணவர்களோடு சேர்த்து சமமாக எடைபோடலாகாது; மருத்துவ பட்டமேற்படிப்புக்கான நுழைவுத் தேர்வில் இவர்கள் பெற வேண்டிய மதிப்பெண்களில் சலுகை காட்டப்பட வேண்டும்.

இந்தக் கருத்தை மத்திய பிரதேச முதல்வர் கடிதமாக்கி, பிரதமருக்கும் குடியரசுத் தலைவருக்கும் அனுப்பியிருக்கிறார். பிரதமர் தரப்பிலிருந்து பதில் ஏதும் வரவில்லை. ஆனால் திக்விஜய் சிங்கின் கடிதத்துக்கு, குடியரசுத் தலைவர் ஒரு சர்ச்சைக்குரிய பதிலை எழுதியிருக்கிறார். சிங்கின் கருத்துகளோடு தாம் ஒத்துப் போவதாகவும் பிரதமருக்கு இவ்விஷயத்தை எடுத்துக் கூறவிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார் கே.ஆர். நாராயணன்!

இது விஷயமாக, மாநில முதல்வர் ஒருவர், குடியரசுத் தலைவருக்கு எதற்காக கடிதம் எழுத வேண்டும் என்ற கேள்வி எழுகிறது.

திக்விஜய் சிங் தரப்பு வாதம் என்னவென்றால், நமது அரசியல் சாசனமானது ஷெட்யூல்ட் வகுப்பினரையும் பழங்குடியினரையும் சமுதாய அநீதிகளிலிருந்து காக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது. கல்வித் தேர்வுகளில் மதிப்பெண்கள் வழங்குவதிலும் இப்பிரிவினருக்குச் சலுகை காட்டப்படலாம் என்று அரசியல் சாசனத்தின் 335வது ஷரத்து அனுமதிக்கிறது.

இந்தப் பிரச்னை தொடர்பான ஓர் உச்சநீதிமன்றத் தீர்ப்பு (1999) ஷெட்யூல்ட் பிரிவினருக்குச் சலுகை காட்டப்பட வேண்டும் என்றே கூறுகிறது. எவ்வளவு மதிப்பெண் சலுகை தரலாம் என்பதை நிர்ணயிக்கும் உரிமையை இந்திய மெடிகல் கவுன்சில் போன்ற அமைப்புகளிடம் விட்டிருக்கிறது. ஆனால், மெடிகல் கவுன்சில் இந்தத் தீர்ப்புக்கு மதிப்பு




தராமல், மருத்துவ பட்டமேல் படிப்பு நுழைவுத் தேர்வில் குறைந்தபட்ச மதிப்பெண் ஐம்பது சதவிகிதமிருக்க வேண்டும் என்று ஒட்டு மொத்தமாக நிர்ணயித்துள்ளது.

அரசியல் சாசன ஷரத்துகளும் உச்ச நீதிமன்ற தீர்ப்பும் சம்பந்தப்பட்டிருப்பதால் திக்விஜய் சிங், குடியரசுத் தலைவரின் கவனத்துக்குப் பிரச்னையை எடுத்துப் போயிருக்கிறார். குடியரசுத் தலைவரும் பிரதமரிடம் பேசுவதாகத் தெரிவித்துவிட்டார்.

அப்படியானால், அனைத்திந்திய மெடிகல் கவுன்ஸில் போன்ற அமைப்புகளின் அதிகாரம் என்ன?... மருத்துவத் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் எடுக்கும் முடிவு அரசியல் காரணங்களுக்காக கேள்விக்குள்ளாக்கப்படுவதும் மேலிடத்துத் தலையீடினால் மாற்றப்படுவதும் அனுமதிக்கப்பட்டால், மருத்துவத் துறையே கெட்டுக் குட்டிச்சுவராகிவிடும் அபாயம் இருக்கிறது.

ஷெட்யூல்ட் வகுப்பினரும் பழங்குடியினரும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதில் இரண்டாவது கருத்தே கிடையாது. அதற்கு உதவும்படியாக அரசு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யலாம். சிறந்த ஆசிரியர்களை நியமித்து, நேரத்தையும் உழைப்பையும் அதிகமாக வழங்கி அப்பிரிவினர் முன்னேற வழிவகுக்கலாம். தரமான அடிப்படை கல்வியை இப்பிரிவினருக்கு உத்தரவாதம் செய்ய பல நடவடிக்கைகள் எடுக்கலாம். ஆனால், பொறியியல், மருத்துவம், ராணுவம், ரயில்வே போன்ற சில துறைகளில், ஒரு கட்டத்துக்குப் பிறகு தகுதி மட்டுமே அடிப்படையாக அமைவது அவசியம். அதிலும் மருத்துவம் போன்ற உயர்கல்வி நுழைவுத் தேர்வுகளில் சலுகைகள் வழங்குவது மிக மிக அபாயகரமானது.

நாட்டு மக்களின் உயிரையும் ஆரோக்கியத்தையும் பணயம் வைக்கிற இந்தக் காரியத்துக்கு ஒரு மாநில முதல்வர் குரல் கொடுப்பதும் குடியரசுத் தலைவர் அதை எதிரொலிப்பதும் விபரீத விளையாட்டு!

திக்விஜய் சிங்கின் கடிதம் உயர்கல்வியின் தரத்துக்குச் சவால் விடுகிறது என்றால், குடியரசுத் தலைவரின் பதில் அதற்குச் சமாதி கட்டவே அவசரம் காட்டுகிறது! ○

# அழைத்துக் கொண்டது

## கல்கி - டயானா வொர்ல்ட் ட்ராவல் இணைந்து வழங்கிய

**முதல் பரிசு**

**அமெரிக்க பயணம் :**
**ரா. ஷங்கர்,**
67/3, லட்சுமி குடியிருப்பு, கலெக்டர் நகர், அண்ணா நகர், சென்னை - 600 101.

**இரண்டாம் பரிசு**

**ஐரோப்பா பயணம் :**
**சி.எஸ். ரமணி,**
ஃப்ளாட் 2-சி, ஷியாம் நிவாஸ், புது எண் 2, இரண்டாவது கிரெஸண்ட் பார்க் ரோடு, காந்தி நகர், அடையாறு, சென்னை - 600 020.

**மூன்றாம் பரிசு**

**சிங்கப்பூர் பயணம் :**
**பி. ஹரிகிருஷ்ணன்,**
10டி, எம்.ஐ.ஜி. ஃப்ளாட், சென்ட்ரல் அவென்யூ, எம்.கே.பி.நகர், சென்னை - 600 039.

**ஆறுதல் பரிசாக கல்கி நூல்கள் :**

**வி. வித்யா,**
10, நரசிம்மன் தெரு, 18, ஸ்வாதி ஃப்ளாட், மே. மாம்பலம்,
சென்னை - 600 033.

**எஸ்.கந்தசாமி,**
ரங்கபாளையம் அஞ்சல்,
(வழி) சின்னதாராபுரம் - 639 202.

**எஸ்.ஆர். சேகர்,**
813, தெற்குத் தெரு, ஸ்ரீராம் நகர்,
ஆழ்வார்பேட்டை,
சென்னை - 600 018.



* எமது அலுவலகத்தில் சம்பத்குமார், ஜி.எஸ்.எஸ். (படம் : ஸ்ரீஹரி)

## அமெரிக்காவை அசைத்த பெருமூச்சு!

'இருபத்து ஆறு வாரங்கள். வாரம் ஆறு கேள்விகள். தயாரித்துத் தர முடியுமா?' என்று கல்கி ஆசிரியர் கேட்டபோது 'ஏன் முடியாது!' என உற்சாகத்துடன் ஒப்புக் கொண்டேன். ஆனால் அப்போது நான் உணரவில்லை சிறப்பாகச் செய்ய வேண்டியது தயாரிப்பு மட்டுமல்ல நடிப்பும்தான் என்று.

நான்தான் குவிஸ்மாஸ்டர் என்பது தெரியாமல் என் அக்கா 'ஏண்டா, அமெரிக்காவிலே ஸ்ரீதரும் சுதாகரும் இருக்காங்க. சிங்கப்பூரிலே பானு இருக்கா. இந்தப் போட்டியிலே நீ கலந்துக்கிட்டா அங்கேயெல்லாம் போக நல்ல சான்ஸ்' என்றாள். 'வேண்டாம். இரண்டாவது பரிசு கிடைத்து விட்டால் என்ன செய்வது?' என்றேன். (ஐரோப்பாவில் தற்போதைக்கு எங்கள் உறவினர்கள் யாரும் இல்லை.)

கணிசமானவர்கள் 'நீதான் இந்த க்வெஸ்டன்லை செட் பண்ணறியா?' என்று நேரடியாகவே கேட்டு விட்டனர். 'இல்லை' என்ற போதும் அதைப் பலர் நம்பவில்லை. 'இந்தக் கேள்வி ரொம்ப கஷ்டமானதா இருக்கே. இப்படியா ஸில்லியாகக் கேப்பாங்க?' என்றெல்லாம் அவர்கள் காதில் விழுவது போல் சொல்லி நம்ப வைக்க வேண்டியிருந்தது.

அப்படி நம்பியவர்களால் வேறுவித அவஸ்தைகள். கேள்விகளுக்குப் பதில் கேட்க ஆரம்பித்தார்கள். 'என்ஸைக்ளோபீடியாவில் இருக்குமே' என்கிற மாதிரி பொதுப்பட

# அமெரிக்கா!

## விடைகள்

## குவிஸ் போட்டி முடிவுகள் :

இருபத்தாறு வாரங்களுக்கு நீடித்த இப்போட்டியில் 'விடேன் தொடேன்' என்று வீரமுடன் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான வாசகர்களுக்கு முதற்கண் ஆயிரமாயிரம் நன்றி!

குவிஸ் போட்டிக் கூப்பன்களை, கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு திருத்தியதில் ஆசிரியர் குழுவில் அனைவருக்கும் விடைகள் மனப்பாடமாகி கனவிலும் நனவிலும் ஒப்பிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது.

அத்தனை வாசகர்களுள்ளும் அனைத்து விடைகளையும் சரியாக எழுதியவர் ஒருவரும் இல்லை என்பது சற்று ஏமாற்றம்தான். எனினும் மிக அதிகமான விடைகளைச் சரியாக எழுதிய ரா.ஷங்கர், சி.எஸ். ரமணி (இரண்டு தவறுகளைச் செய்திருந்தனர்) ஆகிய இருவருள் குலுக்கலில் முதல் பரிசுக்குரியவரைத் தேர்வு செய்தோம். ரா.ஷங்கர் அமெரிக்க பயணப் பரிசு பெற, இரண்டாவது பரிசான ஐரோப்பா பயணம் சி.எஸ். ரமணி பெற்றார்.

மூன்றாவது பரிசுக்குரிய நபரையும் குலுக்கல் முறையில்தான் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. மூன்று விடைகளை மட்டும் தவறாக எழுதியிருந்த நால்வருள் பி. ஹரிகிருஷ்ணனுக்கு அடித்தது அதிர்ஷ்டம். குவிஸ் கேள்வி - பதில்களைத் தொகுத்துத் தந்து, பரிசிலனையிலும் உதவி, நடுவராகவும் செயல்பட்ட **ஜி.எஸ்.எஸ்., சம்பத்குமார் (தென்னிந்திய நிருபர் - பி.பி.சி.)** ஆகியோருக்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். பங்கேற்ற அனைவருக்கும் மிகப்பெரிய நன்றி.

- ஆர்.

### குவிஸ் போட்டி–1

1. புகழ் பெற்ற டென்னிஸ் வீராங்கனைகளான வில்லியம்ஸ் சகோதரிகளில் ஒருவர் செரினா, மற்றவர் யார்? – *வீனஸ்*
2. ராமபிரானின் இரு மகன்களில் ஒருவன் லவன். மற்றவன் யார்? – *குசன்*
3. 1993ல் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற தென்னாப்பிரிக்கர்களில் ஒருவர் டி கிளெர்க். மற்றவர் யார்? – *நெல்சன் மண்டேலா*
4. பிரபல இந்தித் திரைப்பட இரட்டை இசையமைப்பாளர்களில் ஒருவர் சங்கர். மற்றவர் யார்? – *ஜெய்கிஷன்*
5. *(கேள்வி போட்டியிலிருந்து நீக்கப்பட்டது)*
6. சண்டிகரைத் தலைநகரமாகக் கொண்ட இரு மாநிலங்களில் ஒன்று பஞ்சாப். மற்றது எது? – *ஹரியானா*

### போட்டி–2

1. ரோமன் எண் வகையில் V என்பது '5' என்ற எண்ணையும், X என்பது '10' என்ற எண்ணையும் குறிக்கிறது அல்லவா. அதேபோல் Dஎன்ற எழுத்து குறிக்கும் எண் எது? – *500*
2. சந்திரனில் மனிதன் முதன் முதலில் காலடி வைத்த ஆண்டு எது? – *1969*
3. ஒரே ஓவரில் பிரபல கிரிக்கெட் வீரர் காரிசோபர்ஸ் எடுத்த அதிகபட்ச ரன்கள் எவ்வளவு? – *36*
4. பாக்யராஜ்–அம்பிகா நடித்த திரைப்படம் பெயரில் இடம் பெற்ற எண் எது? – *7*
5. 1948 ஜனவரியில் காந்திஜி எந்த தேதியில் இறந்தார்? – *30*

→

*யான பதில்களாகத் தந்து அவர்கள் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டேன்.*

*'ஒரே தீம் கொண்டதாக ஒவ்வொரு வாரக் கேள்வியும் அமைந்தால் அது சுவையாக இருக்கும்' என்று சுயதீர்மானம் செய்ததில், ஆனந்தத்தோடு அவஸ்தையும் தொடர்ந்து வந்தது. பலமுறை ஐந்து கேள்விகளைச் சற்றே எளிதாக உருவாக்க முடிந்தும், ஆறாவது கேள்விக்காக மணி நேரங்கள்கூட மண்டையைக் குடைந்து கொண்டதுண்டு.*

*வாசகர்கள் இந்தப் போட்டிக்காக 'ஞானிகள் அருளிய மார்க்கம்' ஒன்றை நிறையவே கடைப்பிடித்திருப்பது புரிந்தது : 'தேடல்'! பாம்பே ஜயஸ்ரீ தமிழ் சினிமாவில் பாடிய முதல் பாட்டு எது என்று அறிய அவர் வீட்டுக்கே நூற்றுக்கணக்கில் வாசகர்கள் ஃபோன் செய்திருக்கிறார்கள்!*

*ஒய்.எ.சி.எம். ஆரம்பிக்கப்பட்டது எந்த ஆண்டு என்று அறிய இசைக் கலைஞர்களை இரவு - பகலென்று பாராது டெலிபோனில் துரத்தி விடைபெற்றிருக்கிறார்கள்.*

*இருபத்தாறு வாரங்கள் முடிந்ததும், என் நடிப்பைக் கைவிட்ட நிம்மதியில் நான் விட்ட பெருமூச்சு அமெரிக்காவிலுள்ள சுதந்திரதேவியையே அசைத்துவிட்டதாக நியூயார்க் டைம்ஸிலும் வாஷிங்டன் போஸ்டிலும் முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டிருந்தார்களே, படித்தீர்களா?*

**- ஜி.எஸ்.எஸ்.**



• ஜி.எஸ்.எஸ்.

6. சிட்னி ஒலிம்பிக்ஸ், அட்லாண்டா ஒலிம்பிக்ஸ் இரண்டிலுமாகச் சேர்த்து இந்தியா பெற்ற பதக்கங்களின் எண்ணிக்கை எவ்வளவு? – *2* (லியாண்டர் பயஸ், மல்லேஸ்வரி)

## போட்டி–3

1. ஜேசுதாஸ் பாடிய முதல் தமிழ்ப் படம் எது? – *பொம்மை*
2. திருமாலின் கடைசி அவதாரம் என்று எதைக் கூறுவார்கள்? – *கல்கி*
3. 'திருமுருகாற்றுப்படை'யை எழுதியவர் யார்? – *நக்கீரன்*
4. ராமனின் எந்த நகையை அனுமன் அசோக வனத்திலிருந்த சீதைக்குக் காண்பித்தான்? – *கணையாழி*
5. மணிமேகலைக்குக் கிடைத்த அட்சய பாத்திரத்தின் பெயர் என்ன? – *அமுதசுரபி*
6. கண்களைக் கட்டியபடி உள்ள நீதிதேவதையின் கையில் உள்ள பொருள் எது? – *தராசு*

## போட்டி–4

1. 'காந்தி' திரைப்படத்தில் யாருடைய வேடத்தை ரோகிணி ஹட்டங்காடி ஏற்று நடித்தார்? – *கஸ்தூர்பா*
2. 'வீரபாண்டிய கட்டபொம்மனில்' வி.கே. ராமசாமி எந்த பாத்திரமாக நடித்தார்? – *எட்டப்பன்*
3. 'ஹே ராம்' படத்தில் நசிருதீன் ஷா ஏற்ற வேடம் யாருடையது? – *காந்தி*
4. 'கப்பலோட்டிய தமிழன்' திரைப்படத்தில் எஸ்.வி. சுப்பையா யாராகத் தோன்றினார்? – *பாரதியார்*
5. 'தியாக பூமி' திரைப்படத்தை இயக்கியவர் யார்? – *கே. சுப்பிரமணியம்*
6. 'பாரதியார்' படத்தில் தேவயானி ஏற்ற வேடம் எது? – *செல்லம்மா*

## போட்டி–5

1. மியான்மார் என்று இப்போது அழைக்கப்படும் ஆசிய நாட்டின் அதற்கு முந்தைய பெயர் என்ன? – *பர்மா*
2. மகாபாரதத்தில் வரும் பீஷ்மரின் இயற்பெயர் என்ன? – *தேவவிரதன்*
3. யு.எஸ்.ஸின் தற்போதைய தலைநகரம் வாஷிங்டன் டி.ஸி. அதற்கு முன் அந்த நாட்டின் தலைநகரம் என்னவாக இருந்தது? – *ஃபிலடெல்பியா*
4. சினிமாவில் நுழைவதற்கு முன் ரஜினிகாந்தின் பெயர் என்னவாக இருந்தது? – *சிவாஜி ராவ்*
5. 63 நாயன்மார்களில் ஒருவரான காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் எது? – *புனிதவதி*
6. கவிஞர் கண்ணதாசனின் இயற்பெயர் என்ன? – *முத்தையா*

## போட்டி–6

1. ஐ.நா. சபையில் நம் பெருமையை நிலை நாட்டிய, ஜவாஹர்லால் நேருவின் சகோதரி யார்? – *விஜயலட்சுமி பண்டிட்*
2. 'நாட்டியப் பேரொளி' பத்மினியின் தங்கையின் பெயர் என்ன? – *ராகினி*
3. 'பொன்னியின் செல்வன்' கதையில் ஆதித்த கரிகாலனின் பிரபல தங்கை யார்? – *குந்தவை*
4. லட்சுமணனால் மூக்கறுபட்ட ராவணனின் தங்கை யார்? – *சூர்ப்பனகை*
5. திருநாவுக்கரசரை சமண மதத்திலிருந்து மீண்டும் சைவ மதத்துக்கு மீட்கப் பெரும் முயற்சிகள் எடுத்துக் கொண்ட அவரது சகோதரியின் பெயர் என்ன? – *திலகவதி*
6. 'பாசமலர்' படத்தில் சிவாஜி கணேசனின் தங்கையாக நடித்தது யார்? – *சாவித்திரி*

## போட்டி–7

1. சுதந்திர இந்தியாவின் இரண்டாவது பிரதம மந்திரி யார்? – *லால்பகதூர் சாஸ்திரி*
2. சந்திரனில் காலடி வைத்த இரண்டாவது மனிதனின் பெயர் என்ன? – *எட்வின் ஆல்ட்ரின்*
3. ராணி இரண்டாம் எலிசபெத்தின் கணவரின் பெயர் என்ன? – *இளவரசர் பிலிப்*
4. 'சயாம் இரட்டையர்கள்' வெகுபிரபலம். அவர்கள் பிறந்த நாட்டின் தற்போதைய பெயர் என்ன? – *தாய்லாந்து*
5. நோபல் பரிசு பெற்ற இரண்டாவது இந்தியர் யார்? – *சி.வி. ராமன்*
6. எவரெஸ்ட் சிகரத்தை முதலில் ஏறிய டென்சிங்கோடு கூடச் சென்று அந்த சாதனையைப் புரிந்தவர் யார்? – *ஹில்லரி*

## போட்டி–8

1. தனக்குக் கிடைத்த எந்த கனியை ஔவை யாருக்கு அளித்து அதியமான் அழியாப் புகழ் தேடிக் கொண்டான்? – *நெல்லி*
2. ஒரு பழத்தின் ஆங்கிலப் பெயர் இந்திய மாநிலம் ஒன்றின் பெயர் கூட. அது என்ன? – *கோவா*
3. கவுண்டமணி–செந்தில் சம்பந்தப்பட்ட எந்த 'இன்னொரு' பழக் காமெடி வெகு பிரபலமானது? – *வாழைப்பழம்*

4. பண்ருட்டி எந்தப் பழத்துக்குப் பேர் போனது? – *பலா*
5. எந்தப் பழம் மரத்திலிருந்து விழுவதைக் கண்டு ஐஸக் நியூட்டன் புவியீர்ப்பு விதிகளைக் கண்டறிந்ததாகச் சொல்வார்கள்? – *ஆப்பிள்*
6. ஹைதராபாதில் எந்தப் பழத் தோட்டத்திற்கு ஜெயலலிதா உரிமையாளராக உள்ளதாகப் பிரபலமாக அறியப்படுகிறார்? – *திராட்சை*

## போட்டி–9

1. சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் எந்த மன்னனின் சிலை உள்ளது? – *மனுநீதிச் சோழன் (சமநீதி கண்ட சோழன் என சிலையில் பொறிக்கப்பட்டுள்ளதால் அவ் விடையும் ஏற்கப்பட்டது)*
2. 'ஜஸ்டிஸ் ஜகன்னாதன்' என்ற பிரபல நாவலை எழுதிய அமர எழுத்தாளர் யார்? – *தேவன்*
3. தவறிழைத்ததால் "யானோ அரசன்? யானே கள்வன்" என்றபடி இறந்து தனக்குத்தானே நீதி வழங்கிக் கொண்ட மன்னன் யார்? – பாண்டியன் நெடுஞ்செழியன்
4. கேரளாவில் "பொது இடங்களில் புகை பிடிப்பதைத் தடை செய்ய வேண்டும்" என்று உத்தரவிட்ட நீதிபதி யார்? – *நாராயண குருப் (நாராயண குருப்தான் இத்தடைக்கு காரணமானவர் என்ற போதிலும் கையொப்பமிட்ட நீதிபதி லக்ஷ்மணன் பெயரும் சரியான விடையாக ஏற்கப்பட்டுள்ளது.)*
5. கே. பாலசந்தர் இயக்கிய எந்தப் படத்தில் சிவாஜி கணேசன் நீதிபதியாக நடித்திருக்கிறார்? – *எதிரொலி*
6. கம்பன் கழக விழாக்களில் பெரும்பங்கு வகித்த முஸ்லிம் நீதிபதியின் பெயர் என்ன? – *இஸ்மாயில்*

## போட்டி–10

1. "இளமை ஊஞ்சலாடுகிறது", ரஜினி, கமல் இருவரும் நடித்த படம். இதை இயக்கியவர் யார்? – *ஸ்ரீதர்*
2. "இளைய பாரதத்தினாய் வா வா வா" என்ற கவிதை வரியை எழுதியவர் யார்? – *பாரதியார்*
3. கர்நாடக இசைத்துறையில் இளம் கலைஞர்களை ஒருங்கிணைக்கும் அமைப்பு ஒய்.ஏ.சி.எம், செயல்படுகிறது. இது எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது? – *1985*
4. இளைய தலைமுறைக்காக ஹிந்து நாளிதழ் வெளியிடும் இணைப்பு இதழின் பெயர்...? – *யங் வொர்ல்ட் ('சைன் போஸ்ட்' என்ற விடையும் ஏற்கப்பட்டுள்ளது.)*
5. சமீபத்தில் சான்டியாகோவில் நடைபெற்ற உலக ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் தங்கத்தை வென்றார் நம் நாட்டைச் சேர்ந்த சீமா அந்தில். எந்த விளையாட்டுப் பிரிவில் இவர் இந்தச் சாதனையைச் செய்தார்? – *வட்டெறிதல் (டிஸ்கஸ்)*
6. தமது சிகாகோ உரையால் உலகப்புகழ் பெற்ற அவர், இளைஞர்களின்மீது பெரும் நம்பிக்கை கொண்டிருந்தார். அந்த இந்தியர் யார்? – *விவேகானந்தர்.*

## போட்டி–11

1. சச்சின் டெண்டுல்கரின் மனைவியின் பெயர் என்ன? – *அஞ்சலி*
2. "கண்ணா, உன் ஆனந்த மோகன வேணுகானமதில்" என்று தொடரும் கர்நாடக இசைப் பாடலின் தொடக்கத்தில் இடம் பெறும் வார்த்தை விடுபட்டுள்ளது. அது என்ன? – *அலைபாயுதே*
3. பிரிட்டனின் தேசிய மலர் எது? – *ரோஜா*
4. தாதர், மாதுங்கா, செம்பூர் போன்ற பகுதிகள் அமைந்த நகரின் இதற்கு முந்தைய பெயர் என்ன? – *பம்பாய்*
5. ரவீந்திரநாத் தாகூரின் எந்தப் படைப்புக்காக அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது? – *கீதாஞ்சலி*
6. மன்னன் அலெக்சாண்டரிடம் செல்யூகஸ் நிகேடர் வகித்த பதவி எது? – *தளபதி*

## போட்டி–12

1. முருகப் பெருமானின் கையிலுள்ள கொடியில் இடம்பெற்ற பறவை எது? – *சேவல்*
2. வான்கோழி 'தானும் அதுவாக' பாவிக்கிற பறவை...? – *மயில்*
3. 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்ற பாரதிதாசன் பாடல் இடம் பெற்ற திரைப்படத்தின் பெயர் (ஒரு பறவையின் பெயர் கொண்டது) என்ன? – *பஞ்சவர்ணக்கிளி*
4. அலகில் ஆலிவ் கிளையைச் சுமந்தபடி சமாதானத்தின் சின்னமாகக் கருதப்படும் பறவை எது? – *புறா*
5. அன்டார்டிக் பகுதியில் வாழும் இந்தப் பறவையின் பெயரில் ஒரு பிரபல ஆங்கில நூல் பிரசுரமும் உண்டு. அது எந்தப் பறவை? – *பெங்குவின்*
6. சனீஸ்வரனின் வாகனம் எது? – *காகம்*

*(மற்ற விடைகள் அடுத்த வாரம்)*



* ரேவதியை வரவேற்கும் மீண்ட சிறுவர்கள்

**மா**லை ஐந்து மணிக்கே அலங்கார மின் விளக்குகளின் ஒளியில் ஜொலிக்கத் தொடங்கிய மருத்துவ மனையில், ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியோர் என்று சுமார் இரண்டாயிரம் பேர் குழுமினார்கள். அத்தனை பேர் முகத்திலும் வாழ்வின் விளிம்பிலிருந்து மீண்டு வந்த சந்தோஷம். எல்லோருக்கும் ரோஜா மலர்களைக் கொடுத்துக் கனிவோடு வரவேற்ற அந்த நாள், 'கேன்சர் சர்வைவர் டே' - புற்று நோயிலிருந்து மீண்டவர்களின் நாள். அங்கே குழுமியிருந்த அத்தனை பேரும் புற்று நோயிலிருந்து மறுபிறவி எடுத்தவர்கள். அதற்குக் காரணமாக இருந்த அந்த மருத்துவ மனை, சென்னை அடையாறு கேன்சர் இன்ஸ்டிடியூட்.

பத்தாண்டுகளுக்கு முன்புவரை இப்படியொரு நாளை, விழிப்புணர்ச்சித் திருநாளாகக் கொண்டாட முடியும் என்று யாருமே நினைத்திருக்க முடியாது. புற்றுநோய் சிகிச்சையில் ஒவ்வொரு நாளும் ஏற்பட்டு வரும் முன்னேற்றமும், அதைக் குணப்படுத்த முடியாது என்ற நம்பிக்கையையும் தவிடு பொடியாக்கி இருக்கிறது அடையாறு கேன்சர் இனஸ்டிடியூட். அதற்கு வாழும் சாட்சிகளாக வந்திருந்தார்கள் அந்த இரண்டாயிரம் பேர்.

ஏ.வி.எம். சரவணன், ரேவதி, எஸ்.வி.சேகர், தீபா வெங்கட், விஜய் ஆதிராஜ், அஜய் ரத்தினம் என்று

* தீபலட்சுமி அம்மா கௌரியுடன்



# மீண்டும்



* டெல்லி ராவ்



* டாக்டர் சாந்தா

சினிமா சின்னத்திரை நட்சத்திரங்கள் சிறப்பு விருந்தினர்களாகத் திரண்டு வந்திருந்த விழாவில், புற்று நோய் குறித்து டாக்டர் சிவகுமார் நிகழ்த்திய சின்ன உரை அங்கே வந்திருந்திருந்த அத்தனை பேரையும் அமைதியில் உறையச் செய்தது.

''புற்று நோய் நம் உடலிலுள்ள செல்களின் வினோத மாற்றத்தினால் ஏற்படும் நோய். நம் உடல் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் செல்கள், ஒரே சீராக வளர்ச்சி பெற்று இயங்க வேண்டும். ஆனால் புற்று நோய் செல்கள் கட்டுக் கடங்காதபடி தன்னிச்சையாக வளர்ச்சி

பெற்று உடலின் மற்ற பாகங்களுக்கும் பரவுகின்றன.

"புகையிலையைத் தவிர்ப்பது பிறப்பு உறுப்புகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவது, நாம் உண்ணும் உணவை மிதமாக வைத்துக் கொள்வது போன்ற வற்றை பொறுப்புணர்வோடு கடைபிடித்தால் ஐம்பது சதவீதம் புற்று நோய் வராமல் தடுக்க முடியும்." என்றார்.

நடிகை ரேவதி, இருபது வருடங்களுக்கு முன்னால் தன் பள்ளிப் பருவ தோழி சீமா, புற்று நோயின் தீவிர தாக்குதலுக்கு ஆளா னதை நினைவு கூர்ந்தபோது எல்லோரது கண்களிலும் நீர்த்தேக்கம்.

"எங்கள் நிறுவனம் தயாரிக்கும், தொலைக் காட்சித் தொடர்கள், திரைப் படங்களில் இனி புகைப் பிடிப்பது மாதிரியோ மது அருந்துவது போன்றோ காட்சிகள் இடம் பெறாது" என்று உறுதி கூறி அனைவரது கரவொலியையும் அள்ளிக் கொண்டார் பட அதிபர் ஏவி.எம்.சரவணன்.

சிறப்பு விருந்தினர்களைக் காட்டிலும் நம்மை வசீகரித்தவர்கள் விழா நாயகர்கள்தான். அவர்கள் புற்று நோயிலிருந்து மீண்டு, அங்கே குடும்பத்தோடு வந்து விழாவைக் கொண்டாடிக் கொண்டிருந்தவர்கள். அவர்களில் ஐந்து பேரோடு பேசினோம்.

தமது நான்கு வயது மகள் தீபலட்சுமியுடன் வந்திருந்தார் கௌரி. "என் மகள் சாப்பிட்டது செரிமானமாகாமல் அடிக்கடி வாந்தி எடுத்துக் கொண்டிருந்தாள். கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் இங்கே கல்லீரல் புற்று நோய் என்று உறுதி செய்தார்கள். சிகிச்சை கொடுத்து முழுவதும் குணமாக்கி விட்டார்கள்.



* மீண்டவர்கள்



# பிறந்தோம்!

இன்னும் என்னால் நம்ப முடியவில்லை. தீபா இப்போ எல்.கே.ஜி.யிலிருந்து முதல் வகுப்பு போகப் போறா. ரொம்ப உற்சாகமா இருக்கா." ஆனந்தத்தில் அழுதே விட்டார்.

திருமதி கீதா தாஸ் - ஆசிரியராகப் பணியாற்றும் இவருக்குக் கடந்த நவம்பரில் மார்பகப் புற்று நோய் இருந்ததை இங்கே உறுதி செய்து கொண்டிருக்கிறார். உடனடியாக அறுவை சிகிச்சையும் கதிர்வீச்சு சிகிச்சையும் செய்து கொண்டு, இப்போது முழுவதுமாக மீண்டு வந்துவிட்டார். "பாதிக்கப்பட்டவுடன் மார்பகப் புற்று நோய் ஒரு பொருட்டே அல்ல என்று என் கணவரும், குழந்தைகளும் எனக்கு உற்சாகமூட்டிக் கொண்டே இருந்தார்கள். ஒரு



பக்கம் சிகிச்சை என்றால் இன்னொரு பக்கம் எனது குடும்பத்தின் ஆதரவுதான் என்னைக் குணமாக்கியது" என்கிறார் சீதா தாஸ்.

தன் இரத்த புற்று முற்றிலும் குணமாகி விட்டது என்ற வியப்பிலிருந்து இன்னும் விலக வில்லை. நாற்பது வயது டெல்லி ராவ். "1987ல் எனக்குக் கன்ஃபார்ம் ஆச்சு. அப்போ எனக்கு வெறும் அறுநூறு ரூபாய் சம்பளம். சிகிச்சைக்கு ஐம்பதாயிரம் தேவைப்பட்டது. அலுவலகத்தில் கைவிரித்துவிட்டார்கள். வெறும் இருபதாயிரம் ரூபாயோடு கேன்சர் இன்ஸ்டிடியூட் வந்தேன். பரவாயில்லை மீதிப் பணத்தை நாங்கள் போட்டுக் கொள்கிறோம் என்று அம்மா (டாக்டர் சாந்தா) சொன்னார்கள். அவர் என்னை ஈன்றெடுக்காத தாய். எனக்கு ஐம்பத்தாறு முறை ரத்தமாற்று சிகிச்சை நடந்தது. தொடர்ந்து 90 மணி நேரம் தீவிர கண்காணிப்புப் பிரிவில் வைத்து என்னைக் காப்பத்தினாங்க. அதை நான் மூச்சு இருக்கிற வரை மறக்க மாட்டேன். அப்போ என்னால் கேட்ட பணம் கொடுக்க முடியவில்லை. இப்போ ஐயாயிரம் நன்கொடை கொடுக்கிறேன். ஒவ்வொரு வருஷமும் கொடுப்பேன்" என்கிறார்.

இருபது வயது அபிராமி நான்கு வயது சிறுமியாக, இரத்தப் புற்று நோயோடு இந்த இன்ஸ்டிடியூட்டுக்கு வந்து குணமாகிச் சென்றவர். இப்போது ஸ்டெல்லாமேரிஸ் கல்லூரியில் மூன்றாமாண்டு மாணவி. என் உயிரை மீட்டுக் கொடுத்த நன்றிக் கடனாக ஒவ்வொரு வருடமும் அம்மாவுடன் இங்கு வருகிறேன்." என்று சந்தோஷமாகச் சொல்கிறார்.

இருபத்தேழு வயது டீ மாஸ்டர் ராமசாமி ஒரு குடிசைவாசி. "நாலு வருஷத்துக்கு முன்னாடி கழுத்துல கட்டி மாதிரி வந்துச்சு.. இங்கே இருபதாயிரம் கட்டினேன். மீதி செலவு முழுக்க அம்மாதான். என் உயிரைக் காப்பாத்தி விட்டுட்டாங்க. என் டீகடை ஓனர் இது தொற்று நோய்ன்னு நினைச்சு, கடைக்கு வரவேண்டாம்ன்னு துரத்தி அடிச்சிட்டார். ரொம்ப சிரமப்பட்டேன். இப்போ மறுபிறவி கிடைச்சிருக்கு. வர்ற தை மாதம் எனக்கு கல்யாணம்" என்கிறார்.

இன்ஸ்டிடியூட்டின் தலைவர் டாக்டர் சாந்தாவைச் சந்தித்தோம்.

"ஆண்டுக்கு ஐந்து லட்சம் பேர் இந்தியா முழுவதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆரம்பத்திலேயே இங்கு வந்துவிட்டால் எளிதாக குணப்படுத்த முடியும். புற்று நோய்ச் சிகிச்சையில் நாளுக்குநாள் வளர்ச்சி ஏற்பட்டு வந்தாலும், நோய் குறித்த விழிப்புணர்வு இருந்தால் எழுபத்தைந்து சதவீதம் புற்று நோய் வராமல் தடுக்க முடியும். இந்தப் பணிக்காகவே 'சாங்கவரி' என்ற புதிய அமைப்பைத் தொடங்கியிருக்கிறோம். இதற்கு எல்லோரும் உதவலாம்" என்கிறார்.

**- சக்கரத்தாழ்வார்.**

படங்கள் : **ஜரிஸ்**

# திருவரசுவின் புதிய புத்தகங்கள்

## கட்டுரைகள், இலக்கியம், அறிவியல், ஆன்மிகம், வாழ்வியல் நூல்கள்

| நூல் | ஆசிரியர் | விலை ரூ.பை. |
|---|---|---|
| அருள்வாக்கு | – ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் | 80.00 |
| சிதம்பரம் நடராஜர் திருக்கோயில் - (வரலாறு – படங்களுடன்) | கே.கே. ராமலிங்கம் | 65.00 |
| திருக்குறள் உரைக்களஞ்சியம் (960 பக்கங்கள்) - பரிமேலழகர் உரை, தெளிவான பதவுரை, இலக்கணக் குறிப்பு, ஆங்கிலம், தமிழ் உரையுடன் | | 180.00 |
| பெண்ணின் பெருமை | திரு.வி.க. | 60.00 |
| ரசிகமணி டி.கே.சி. கட்டுரைகள் | ரசிகமணி டி.கே.சி. | 20.00 |
| அரும்பிய முல்லை | தே.சி. தீத்தாரப்பன் | 40.00 |
| விண்வெளி 2057 | (அறிவியல் கட்டுரை)—நெல்லை சு. முத்து | 55.00 |
| இளையராஜாவின் சிந்தனைகள் | இளையராஜா | 70.00 |
| மகாபாரதத்தில் அரசியல் சிந்தனை | கா.காசிம் ஐ.பி.எஸ். | 70.00 |
| வாதாபி விஜயம் (பயணநூல்) | விக்கிரமன் | 24.00 |
| தமிழ் இலக்கிய வரலாறு | கிராக்கி | 40.00 |
| இடுக்கண் வருங்கால் நகுக (கட்டுரை) | கிராக்கி | 60.00 |
| எளிய தமிழ் இலக்கணம் | டாக்டர் வை. தட்சிணாமூர்த்தி | 50.00 |
| தமிழைத் திருத்தமாக எழுதுவது எப்படி | சொ. ஞானசம்பந்தன் | 25.00 |
| பொது அறிவுச் செய்திகள் | திரு. சம்பந்தம் | 30.00 |
| என் கேள்விக்கு என்ன பதில் | வி.மா. பாரதி & திருஞானசம்பந்தன் | 20.00 |
| கம்பனில் மனிதம் | பாவலர் மணி சித்தன் | 40.00 |
| வள்ளுவர் வழங்கிய வாழ்க்கை நெறி | பொன். பரமகுரு | 25.00 |
| அறிஞர்களின் பொன் மொழிகள் | கவிஞர் தே. ப. பெருமாள் | 40.00 |
| வள்ளலார் வாழ்வும் வாக்கும் | திரு. சம்பந்தம் | 50.00 |
| மகளிர் மாண்பு | சு. லலிதாம்பாள் | 40.00 |
| அழகு உங்கள் கையில் (அழகுக் கலை நூல், படங்களுடன்) | ராஜசியாமளா | 40.00 |
| மணப்பெண்ணே உனக்காக (பரிசு நூல்) | கீதா தெய்வசிகாமணி | 100.00 |

பதிவுத் தபாலில் பெற புத்தக விலையுடன் ரூ. 17/- சேர்த்து M.O. செய்யுங்கள். வி.பி.பி. மூலமும் பெறலாம். வி.பி.பி. தபால் செலவு தனி.

விவரங்களுக்கு

## திருவரசு புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு, தியாகராய நகர்,
சென்னை – 600 017.
தொலைபேசி எண். 4342810



# புது வசந்தம்

தங்களுக்கிடையே எழுந்த மனவேறுபாடுகள், நெருங்கிய நண்பிகள், யார் முக்கியமானவர் என்ற ஈகோ போன்ற எந்தத் தடைக்கல்லும் அவர்கள் பயணத்தைத் தடுக்கவில்லை. இறுதிச் சுற்றில் செக் நாட்டு வீரர்களுக்குச் செக் வைத்துவிட்டு, பிரெஞ்சு ஓபன் கோப்பையைக் கைப்பற்றியிருக்கிறார்கள் லியாண்டர் பூபதியும், மகேஷ் பயஸூம் (அந்த அளவுக்கு ஒத்துழைப்போடு ஓ-இன்-ஒன்னாக ஆடியிருக்கிறார்கள்) அவர்கள் உயர்த்திப் பிடித்தபோது உயர்ந்தது கோப்பை மட்டுமல்ல, இந்தியாவின் கௌரவமும்தான்.

பிரெஞ்சு ஓபன் கோப்பை அவர்களுக்குப் புதிதல்ல. 1999லேயே கைப்பற்றியதுதான். ஆனால் இப்போதைய வெற்றிக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. unseeded என்கிற சற்றே அகௌரவமான நிலையில் நுழைந்து, கோப்பையை வென்றிருக்கிறார்கள்.

சொல்லப் போனால் லியாண்டர் பயஸ் பட்டுக் கொண்ட இரு அடிகளினால்தான் இந்த ஜோடி உருவானதும் பிற்காலத்தில் வென்றதும் சாத்தியமானது! கால்பந்து விளையாட்டில் பெரும் ஆர்வம் காட்டி வந்த லியாண்டர் பயஸ் தமது முழங்காலில் ஏற்பட்ட காயத்திற்குப் பிறகு கால்பந்தை விட்டு டென்னிஸூக்கு மாறினார். அது மட்டுமல்ல; பிற்காலத்தில் அவரும் பாட்ரிக் ராஃப்டரும் இணைந்துதான் இரட்டையர் ஆட்டங்களில் தொடர்ந்து ஆடுவார்கள் என்ற நிலை ஏற்பட்டது. அப்போது டாஸ்மேனியாவில் ஆடும்போது இடுப்பில் பலத்த அடிபட்டுக் கொண்டார் பயஸ். தொடர்ந்து கொஞ்ச காலம் அவரால் விளையாட முடியாமல் போக, ராஃப்டர் கூட்டாளியை மாற்றிக் கொண்டார்.

1995ல், 'இவரே எனது டென்னிஸ் ஜோடி' என மகேஷைத் தேர்ந்தெடுத்தது பயஸ்தான். அப்போது மகேஷ் அவ்வளவாகப் பிரபலமாகாதவர். ஆனால் டேவிஸ் கோப்பை மற்றும் ஏ.டி.பி.டூர் போட்டிகளில் ஏற்கெனவே புகழ் பெற்றவர் பயஸ்.

இவர்கள் 1996ல் இணைந்துதான் பெரும்பாலானப் பந்தயங்களில் பங்கேற்றனர். பிறகு சில மனக்கசப்புகள். 1997ல் சென்னையில் நடந்த கோல்ட் ஃப்ளேக் ஓபன் பந்தயத்தில் மீண்டும் இணைந்தனர். அதற்குப் பிறகு கோலாகலம்தான்! 1996ல் நடந்த நான்கு பிரபல கிராண்ட் ஸ்லாம் பந்தயங்களிலும் இறுதிச் சுற்றை அடைந்ததோடு பிரெஞ்சுக் கோப்பை மற்றும் விம்பிள்டன் இரட்டையர் கோப்பைகளையும் கைப்பற்றினர்.

'கர்ணம்' அடிக்க வேண்டியிருக்கிறது, உலக அரங்கில் இந்தியா 'ஆனந்த்'த கௌரவம் பெற. போதாக்குறைக்குக் 'கனவான்களின் ஆட்டத்'தில் சூதும் வாதும் வேதனை தந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் இந்த இருவர் தொடர்ந்து காட்டும் ரிதம் உண்மையிலேயே புதுவசந்தம் தான்!

— குல்லூ

● கு. கணேசன், மறைமலைநகர்.

*? அ.தி.மு.க. கூட்டணியில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட 27 இடங்கள் மிகவும் குறைவானவை என்று டாக்டர் ராமதாஸ் இப்போது குறைபட்டுக் கொள்கிறாரே...?*

! தேர்தல், அதன் முடிவுகள் தொடர்பாக அவர் நினைச்சது ஒண்ணு; நடந்தது வேறொண்ணு. தாகம் தீராதபோது விக்கல் எடுக்கத்தான் செய்யும்.

● சா. சொக்கலிங்க ஆதித்தன்,
ரோஸ்மியாபுரம்.

*? எந்த அணியுடனும் தற்போது எங்களுக்குக் கூட்டணி இல்லை என்கிறாரே ஜெயலலிதா...?*

! பின்னே, சாப்பாட்டுக்கு மணம் கூட்டியது என்பதற்காக கருவேப்பிலையை மடியில் கட்டிக் கொள்ளவா முடியும்? தூக்கி எறியத்தானே வேண்டும்!

● அஸ்வதிமணாளன்,
சென்னை - 91.

*? இவர், வாழ்க்கையில் வெற்றி பெற்றவர் என்பதை நிர்ணயிப்பதற்குரிய அளவுகோல் என்ன..?*

! பர்ஸ் ஓரளவுக்கும் மனஸ் பெருமளவுக்கும் நிரம்பியிருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

● ஈ. சிதம்பரம்,
சிவகாசி (மேற்கு)



• வீழ்ந்த இமேஜ்!

# ஜெ. இமேஜ் உயர்ந்திருக்கிறதல்லவா?

*? அரசு அனுமதியில்லாவிட்டாலும், கலைஞரின் ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் ஒயின்கடைகளில் பார் நடந்தது. ஜெ. ஆட்சியில் இந்த அவலம் நீங்குமா...?*

! தலை உள்ளவரை வலி, மூக்குள்ளவரை ஜலதோஷம், மதுக்கடை உள்ளவரை 'பார்'! பூரண மதுவிலக்குதான் தீர்வு.

● எஸ். சாந்தி, காட்பாடி.

*? வழக்கத்துக்கு மாறாக, மூப்பனார் கலைஞருக்கு இவ்வாண்டு பிறந்த நாள் வாழ்த்து கூறவில்லையே...?*



• நெகிழ்த்தும் வித்தை!

! நமது அலுவலகத்தில் 'கம்யூனிகேஷன் கேப்' என்ற மூப்பனாரின் விளக்கம் வழிசல். அதற்குப் பதிலடியாக கருணாநிதி சொன்ன 'ராங் நம்பர்' ஜோக் சுபீர்!

● அ. சங்கரன், பெங்களூர்-16.

*? மனத்தைத் தொட்டுச் சொல்லுங்கள்- அ.தி.மு.க. கட்சியினரை அடக்கி ஆளும் திறமை, கூட்டணி கட்சித் தலைவர்களை எதிர்கொள்ளும் திறமை- இவற்றால் 'ஜெ'வின் இமேஜ் உயர்ந்திருக்கிறதல்லவா...?*

! அமைச்சரவை நிறுவி ஒரு மாதத்துக்குள் மூன்று அமைச்சர்கள் மாற்றப்படுவதும், அதிகாரிகள் கட்டாயக் காத்திருப்புக்குப் பிறகு பந்தாடப்படுவதும், தி.மு.க. ஆட்சியில் டெல்லிக்கு அனுப்பப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற நீதிபகள் நியமனப் பட்டியலை முழுவதும் மாற்ற முற்படுவதும்.. இமேஜ் உயரவில்லை; வீழ்ச்சி அடைகிறது.

● வைகை வளவன், மதுரை-17.

*? 'கவர்னரைத் திரும்ப அழைக்கும் எண்ணமே மத்திய அரசுக்குக் கிடையாது' என்று சொல்லி தி.மு.க, தமிழக பி.ஜே.பி. தலைவர்களின் முகத்தில்*



• பிசகிய கவனம்!

# நீங்கள் கேட்டவை — தராசு

*கரியைப் பூசிவிட்டாரே பிரதமர்- இது எப்படி இருக்கு தலைவா..?*

! அதுதான் கட்சிக்கும் ஆட்சிக்கும் உள்ள வேறுபாடு. கட்சி என்ன தீர்மானம் வேண்டுமானாலும் நிறைவேற்றலாம். ஆனால் ஆட்சியில் இருப்போர் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். அதுவும் வழக்கு உச்சநீதிமன்றத்தில் இருக்கும்போது மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். கட்சிக் கண்ணோட்டத்துடன் தேர்தலின்போது பேசியாகிவிட்டது.

● ச. பாரதி ராஜா, குரும்பகரம்.

*? பள்ளியில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் டியூஷன் நடத்தக் கூடாது என்ற தமிழக அரசின் சட்டம் குறித்து...?*


! அரசு டாக்டர்கள் தனிப்பட்ட முறையில் பிராக்டீஸ் செய்யக்கூடாது என்பது எத்தனை தூரம் நடைமுறையில் உள்ளதோ அந்த அளவுக்கே இதுவும் நடைமுறை சாத்தியம்.




• 'மறந்த...'



• ...நான்!



• தீராத தாகம்!



• 'வெய்ட்டான' பதவி!

● சி. மகேஷ், சென்னை - 26.

*? பாரதி சானலில் மகேந்திரனின் 'உதிரிப்பூக்கள்' சினிமா (10.6.01) அன்று பார்த்து நெகிழ்ந்தேன். அது போன்ற தமிழ்ப் படங்கள் தற்பொழுது வராததற்கு என்ன காரணம்...?*

! திரைப்படத்தை வியாபாரமாக மட்டுமின்றி கலைப் படைப்பாகவும் கருதும் நபர்கள் குறைந்து வருவதுதான் காரணம்.

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

*? காவிரியில் உடனடியாக 1.48டி.எம்.சி. தண்ணீரைத் திறந்துவிட வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை, கர்நாடக அரசு நிராகரித்துள்ளதே...?*

! பருவ மழையும் பொய்த்து விட்டால், உண்ணாவிரத நாடகத்துக்கு இன்னொரு சான்ஸ். யார் அங்கே! மெரீனாவில் ஸெட் போடத் தயாராகுங்கள்.

● வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சாவூர்.

*? காஞ்சிப் பெரியவர் ஜெயந்தியன்று ஆயிரம் பிராமணர்களுக்கு அன்னதானம் வழங்குவதாகச் செய்தி படித்தேன். அன்னதானத்திலும்கூட ஜாதி வேற்றுமையா...?*

! கடல் கடந்து போகக் கூடாது என்பது போன்ற மரபுகளை மீறத் தயாராகி வரும் ஜெயேந்திரர் இதையும் சற்று கவனிப்பாராக.

● கு. நாகராஜன், குருசாமிபாளையம்.

*? ஜெயலலிதா அரசில் பழிவாங்கும் நடவடிக்கை நடைபெறுகிறதா இல்லையா?*

! கேள்வியே சரியில்லை. 'பழிவாங்கும் நடவடிக்கை தவிர வேறெதாவது நடக்கிறதா?' என்றிருக்க வேண்டும்.

● வி.எஸ். கோவிந்தன், மதுரை-7. *

*? காளிமுத்துவுக்குச் சபாநாயகர் பதவி கொடுத்திருப்பது வாய் பூட்டா அல்லது நல்ல வாய்ப்பா...?*

! எதிர்க்கட்சியினருக்கு வாய் பூட்டு போட நல்ல வாய்ப்பு!

● கோ. குப்புசாமி, நெய்வேலி-2.

*? கடன் அன்பை முறிக்குமா...?*

! பல சமயங்களில் எலும்பையும் சேர்த்து!

● எஸ்.ஈ.தாஸ், சென்னை - 12. ☐

*? பத்திரிகைகளில் எழுதப்படும் தலையங்கம், வரையப்படும் கேலிச்சித்திரம், வழங்கப்படும் பதில்கள்-இவற்றால் ஒருவரின் புகழையும் செல்வாக்கையும் தடுத்து, மக்கள் மனத்தையும் மாற்ற முடியும் என்று நம்புகிறீர்களா...?*

! மனசாட்சிக்கு விரோதமின்றி உண்மையென்று கருதுவதை எழுதி வாசகர்களைச் சிந்திக்க வைப்பதுதான் நோக்கம். வாசகர்கள் மனம் மாறுவதும் மாறாததும் அவரவர் விருப்பம். கருத்துச் சுதந்தரம் பத்திரிகைக்கு உள்ளதுபோல் வாசகருக்கும் உண்டு.

☐ ரூ. 50 பரிசு பெறுபவர்:
எஸ். ஈ. தாஸ்,
19, புதுக்குளக்கரை சாலை,
ஓட்டேரி,
சென்னை — 600 012

* ரூ. 25 பரிசு பெறுபவர்:
வி.எஸ். கோவிந்தன்,
16, கற்பக நகர்,
16வது தெரு,
மதுரை— 625 007

# பட்டுத் தெறிக்கிற கவிதை!

அதைக் குயில்தோப்பு என்கிறார்கள். 'கனவுகளோடு இந்தத் தோப்புக்கு வரும் குயில்கள் நனவுகளோடுதான் பறக்கின்றன' என்கிறார் இந்தத் தோப்பில் தங்கியிருந்த ஒரு கவிஞர். திரைப்பட இயக்குனர்களாக, பாடலாசிரியர்களாக, இசையமைப்பாளர்களாக இன்று உலாவரும் சில குயில்களுக்கு இந்த தோப்புதான் ஆரம்பப் பள்ளி!

அந்தக் குயில் தோப்பு - கவிஞர் அறிவுமதியின் அலுவலகம்!

"இரும்புக் கோட்டை மாதிரிதான் திரைப்படத்துறை இருந்தது. இளையராஜா, பாரதிராஜா, வைரமுத்து ஆகியோர் வந்துதான் இந்தக் கோட்டையை உடைத்தெறிந்தார்கள். கிராமத்திலிருந்து வந்த இவர்கள் இவ்வளவு பெரிய வெற்றியைப் பெறும்போது 'நம்மாலும் ஏன் முடியாது?' என்ற நிலையில் பல கிராமத்து இளைஞர்கள் திரைப்படத் துறைக்காகச் சென்னை நோக்கி வருகிறார்கள். அவர்களுக்கு முதலில் தேவை ஓர் இருப்பிடம். 'அமிழ்தமே கிடைத்திடினும் தனித்து உண்ணமாட்டோம்' என்று புறநானூற்றுப் புலவன் பாடிய மண்தானே இது. அதைப் போல்தான் என்னைச் சூழ்ந்தவர்களும் நன்றாக இருக்கவேண்டுமென்று நான் நினைத்தேன்.

"இங்கே கவிஞர்கள் இருந்திருக்கிறார்கள்; இசையமைப்பாளர்கள் இருந்திருக்கிறார்கள்; அவர்களிடம் இசைக்குப் பாட்டெழுத பல கவிஞர்கள் பயிற்சி



எடுத்திருக்கிறார்கள். இந்த ஒரு குயில் தோப்பு மட்டுமல்ல; சென்னையில் இதுபோல் நிறைய தோப்புகள் இருக்கின்றன."

- பட்டுத் தெறிக்கிற கவிதை மாதிரி இனிமையான தமிழில் தெளிவாகப் பேசும் அறிவுமதி, ஆங்கில கலப்பில்லாமல் பாடல் எழுதுவதை வாழ்க்கை இலட்சியமாகவே வைத்திருக்கிறார்.



**"எப்படி வந்தது இந்த இலட்சியம்?**

"என் தந்தை அய்யன் திருவள்ளுவன் படிப்பகம் நடத்தியவர். அங்கு எனக்குக் கிடைத்த பாரதிதாசன், கண்ணதாசன், தென்றல், முரசொலி போன்ற பத்திரிகைகள், திராவிட இயக்கத் தலைவர்களின் பேச்சுகள் என் தமிழார்வத்தை வளர்த்தன. அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் தமிழ் இலக்கியம் படித்தபோது வ.சு.ப. மாணிக்கத்தின் மாணவன் நான். பிறமொழி கலப்பில்லாமல் பேச, எழுதத் தூண்டியவர் அவர்.

"அதுமட்டுமின்றி எந்த ஒரு மொழியாலும் தமிழின் தனித் தன்மையை அழிக்க முடியாத நிலையில், ஆங்கிலத்தைக் கொண்டு திட்டமிட்டே தமிழை அழிக்க நினைக்கிறார்கள். ஆங்கில தலைப்பு, ஆங்கில சொற்கள் அதிகம் கலந்து எழுதும் சூழல்தான் இன்றைக்குக் கவிதையில்கூட வளர்ந்து கொண்டிருக்கிறது. ஓர் இனத்தின் அடையாளத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றால் அதன் மொழித் தன்மையைக் காப்பாற்ற வேண்டும். இந்தச் சூழலில்தான் என் மொழியில் ஆங்கிலக் கலப்புக் கூடாது என்ற தீவிரத்தில் ஈடுபட்டேன்.

"வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் ஆங்கிலம் கலந்து பேசும் நமது தமிழைக் கேலி பேசுகிறார்கள். நமது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் வரும் தமிழைக் கேட்டு அவர்கள் குழந்தைகள் கெட்டுவிடுமோ என்று அச்சப்படுகிறார்கள். அவர்கள் இதை என்னிடம் சொல்லும்போது என்னை அடிப்பது போலிருக்கிறது. எல்லோருக்குமான அந்த அடியை நான் வாங்கி வருகிறேன். 'தமிழர்களிடம்தான் வணிகம் செய்கிறீர்கள்; தமிழர்களின் பணம் வேண்டும்; அவர்களின் தமிழ் வேண்டாமா? என்கிறார்கள் அவர்கள். இது சரியா? தப்பா?

"புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ்ப் பள்ளிகள் பெருகி வருகின்றன. நார்வேயில், இலண்டனில் தமிழ் மீதான ஆர்வம் அதிகரித்து வருகிறது. அங்கு வாழும் தமிழர்கள் தங்கள் குழந்தைகளைத் தமிழ்நாட்டுக் குழந்தைகள் போல் வளர்க்கின்றனர். ஆனால் இங்கேயுள்ள தமிழர்கள் தங்கள் குழந்தைகளை மேல்நாட்டுத் தன்மையுடன் வளர்க்க

நினைக்கிறார்கள். இனி சரியான தமிழ் என்பதே புலம் பெயர்ந்த நாடுகளில்தான் கிடைக்கும்போல் இருக்கிறது.

"தமிழ் மொழியில் பேசினாலே இழிவு என்று நினைக்கிற மனோபாவம் அதிகரித்து வரும் நிலை என் மனத்தைப் பாதித்தது. அதனால்தான் பிறமொழிக் கலப்பின்றி எழுதத் துவங்கினேன்."

- இடைவெளியின்றி கொட்டும் அருவிபோல் வார்த்தைகள் விழுந்த அறிவுமதியிடம், **"ஆங்கில கலப்பின்றி பேசுவது, பாடல் எழுதுவதை எப்படி எதிர்கொள்கிறார்கள்?"** என்றால் சன்னமாகச் சிரித்து விட்டுத் தொடர்கிறார்.

"பன்னிரண்டு வருடமாகத் திரைப்படத் துறையில் இருக்கிறேன். வெறும் நூற்றிஐம்பது பாடல்கள்தான் எழுதியிருக்கிறேன் என்றால் நம்புவீர்களா? சில இயக்குனர்களிடம் இதற்காக வாய்ப்பை இழந்திருக்கிறேன்; இதற்காகவே சிலரிடம் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். சிலரிடம் போராடியிருக்கிறேன். இயக்குனர் வி. சேகர், இசையமைப்பாளர்கள் ஏ.ஆர்.ரஹ்மான் வித்யாசாகர், எஸ்.ஏ. ராஜ்குமார் போன்றோர் என்னைத் தமிழுக்காக உற்சாகப்படுத்துகிறார்கள். நான் ஆங்கில கலப்பின்றி எழுதுவதைப் பார்த்து சில பாடலாசிரியர்களும் தங்களை இதில் இணைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுவே மகிழ்ச்சியாக இருக்கிறது."

**உங்கள் தோப்பிலிருந்து வந்தவர்கள் உட்பட இன்று ஏகப்பட்ட இளம் பாடலாசிரியர்கள் புயலெனப் புறப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பாடல்கள் எப்படியிருப்பதாக நினைக்கிறீர்கள்?**

"இளம் பாடலாசிரியர்கள் எல்லோருக்குமே ஒரு தேடல் இருக்கிறது. சிந்தனைகள் நன்றாக இருக்கின்றன. முயற்சியும் அதற்கான உழைப்பும் இருப்பதைப் பார்க்க முடிகிறது. ஆனாலும் நல்ல தமிழில் எழுதப்படுகிற பாடல்கள் மட்டுமே நிலைத்து நிற்கின்றன. நிற்கும். வைரமுத்துவின் ஆங்கில கலப்பில்லாத பல பாடல்களிலிருந்து கவிஞர் தாமரையின் சமீபத்திய 'வசீகரா' வரை கலப்பில்லாத தமிழ்ப் பாடல்கள் மட்டுமே நிலைத்து நிற்கின்றன. இதற்கு எத்தனையோ உதாரணங்களைச் சொல்ல முடியும். புதியவர்கள் இதை உணர வேண்டும்.

ஓர் ஆய்வு முடிவு மாதிரி சொல்லும் இவரிடம், **"பிறமொழி கலப்பின்றி பாடல் எழுத வேண்டும் என்று யாரையும் கட்டாயப்படுத்த முடியாத நிலையில் என்ன செய்யலாம் என்று நினைக்கிறீர்கள்?"** என்றோம்.


"திரைப்படத் துறையில் அதிக பாடலாசிரியர்கள் இருக்கிறார்கள். ஆனால் இப்படித்தான் எழுதுவேன் என்று சொல்லுவது நான் மட்டும்தான். இதேபோல் மற்றவர்கள் வர வேண்டும். தமிழ்த் திரைப்பட உலகமும், 'ஆங்கிலம் கலந்து தலைப்பு வைக்க மாட்டோம். பாடல் கேட்க மாட்டோம்' என்று தீவிரமான முடிவெடுத்தால் நிச்சயம் நல்ல தமிழ் கிடைக்கும்."

**- செ. ஏக்நாத்**

படங்கள் : **யோகா**

## அம்மா காலில் விழாத எம்.எல்.ஏ.!

**தி**ருநெல்வேலி மாவட்டம் கடையம் அருகிலுள்ள மைலப்பப் புரத்தில் வைகாசி திருவிழா. விழாவை முன்னிட்டு நடன நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒரு பாட்டுக்காக எம்.ஜி.ஆர். ஜெயலலிதா வேடமிட்ட இருவர் ஆடிக் கொண்டிருந்தனர். ஆட்டம் முடிந்ததும் மேடைக்கு ஓடிச் சென்ற அம்பாசமுத்திரம் தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. சக்திவேல் முருகன், 'எங்க தலைவர் மாதிரியே அசத்திட்டீங்களே.' என்று பொத்தென்று ஆடியவரின் காலில் விழ, புல்லரித்துப் போய்விட்டார் அவர்.



மொத்தப் பார்வையாளர்களும் ''அட இங்க பார்றா...'' என்று ஷாக் ஆகி நிற்க, எதுவுமே நடக்காதமாதிரி திரும்பினார் அந்த எம்.எல்.ஏ.! 'அம்மா கால்ல ஏன் விழலை' என்பது பார்வையாளர்கள் சிலரின் முணுமுணுப்பு.

**- கடனாநதி**

**கோ**விலில் பதுங்கிக் கொண்டிருந்த அழுகைத் துளிகள் வீட்டிற்குள் வந்ததும் கடகட வெனத் தங்களைப் பகிரங்கப் படுத்திக் கொண்டன.

ஆனந்த் கை நழுவிப் போய் விட்டான். வாழ்வின் மொத்த ஆனந்தமுமோ?

உஷாவை அவன் வீட்டு வாசலில் இறக்கிவிட்டு வரும் வழியில் மாமி கூறினாள். 'இவ எந்த விதத்தில் உன்னை விட உசந்தவன்னு நேக்குத் தெரியல்லே.'

சிவப்ரியா மருகினாள். 'என்னைவிட உயர்வாகவே பலரும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் என்னைத் தவிர வேறு யாரையுமே ஆனந்த் எப்படி மணக்கலாம்?'

தான் அழகி என்பது சிவப்ரியாவுக்கு நன்றாகவே தெரியும். தள்ள, கவிதைகளின் மீதே வெறுப்பு ஏற்படத் தொடங்கியது சிவப்ரியாவுக்கு.

ஆனந்த் ஒருமுறை தன்னைச் சுயவிமரிசனம் செய்து கொண்டபோது 'ஒரு கவிதை கூட எழுதத் தெரியாத காதலன் நான்' என்றிருக்கிறான்.

'உன்னை நான் விரும்ப அதுவே ஒரு காரணம்' என்று சிவப்ரியா நகைக்க, அதை ரசித்துவிட்டுப் பிறகு மெல்லக் கேட்டான் ஆனந்த்: "நிஜமாகவே சொல்லு ஷிவ், பல ஆம்பிளைங்களும் உன்னைச் சுத்திச் சுத்தி வரும்போது உன் அழகைப் பத்தி உனக்குப் பெருமையாயில்லே?"

சில கணங்கள் மௌனமாக இருந்து விட்டுத் தன்னை வெளிப்படுத்தினாள் சிவப்ரியா.

அவலட்சணமுள்ளவளாக இருப்பது மட்டுமல்ல அதிக அழகியாக இருப்பதும் கூட ஒரு விதத்தில் வேதனைதான். எங்கு சென்றாலும் பலரது பார்வை படும் என்பதால் இயல்பாக இருக்க முடியாத ஒரு சூழல். அதிலிருந்து மீண்டுவர அவளுக்குப் பல

# மனம், மணமறிய ஆவல்...



அந்த எண்ணத்தை அவளுக்குக் கண்ணாடி தந்தது என்பதைவிட உயர்நிலைப் பள்ளிப் பருவத்திலிருந்தே அவளுக்கு வந்த காதல் கடிதங்கள் உணர்த்தின. அத்தனை பேரும் கவிதை என்ற பெயரில் கிறுக்கல்களை எழுதித்

11

அருண் சரண்யா

நாட்கள் பிடித்தன. தெருவில் நடக்கும்போது தனது ஒவ்வொரு அடியையும் கண்காணிக்கும் காமக் கண்கள் நிறைய என்பது அவளைப் பொறுத்தவரை அமைதியின்மையையே அளித்தது. அதுவும் தனது இலக்கைத் தெளிவாக நிர்ணயித்துக் கொண்டு அதற்கேற்ப தினசரி நிரலை அமைத்துக் கொண்ட அவளுக்கு அது வெறுக்கத்தக்க இடையூறு. மனத்தில் எந்த சலனமும் ஆழ் நிலையை எட்டிவிடாமல் மேற்பரப்போடு அகன்றுவிட, அவளுக்கு விவேகானந்தரிலிருந்து திருமூலர் வரை பலரும் கைகொடுத்தார்கள். அமைதிக்கு ஆன்மிகத்தைவிட மருந்து ஏது?


இப்போதும் அவர்களது நூல்களைப் புரட்டி மனத்தை அவற்றில் பதிய வைத்தாள். கலக்கம் குறைந்தது போலிருந்தது. என்றாலும் ஆனந்தைப் பற்றிய எண்ணங்கள் மறையவில்லை. மரத்தை மறைத்தது மாமத யானை!

தன்னை உதறியவனின் நினைவுகளைத் தான் உதற வேண்டாமா? முடியவில்லை.

ஆனந்த் அடிக்கடி கற்பனைகளிலும் கனவுகளிலும் சஞ்சரிப்பவன். "நேத்து என் கனவிலே நீ வந்தே. நாங்கள் நிறைய பேர் உட்கார்ந்திருக்கோம். அத்தனை பேரையும் விட்டுட்டு நீ என் கழுத்திலே அதைப் போடறே."


வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தபடி சிவப்ரியா கேட்டாள். "அதை என்ன அதை. மாலைன்னு சொல்லேன்."

"நோ. நீ என்



## அரசு அனுமதியுடன் பிக்பாக்கெட்!

நரிக்குறவர்களைப் பற்றி ஆராய நரிக்குறவர்களாக மாறலாம். ஆனால், பிக்பாக்கெட் அடிப்பவர்களைப் பற்றி ஆராய பிக்பாக்கெட்காரராக மாற முடியுமா?



முடியுமென்று நிரூபித்திருக்கிறார் பிலாஸ்பூர் மத்திய சிறைச்சாலையின் உயர் அதிகாரி கே.கே. குப்தா. பிக்பாக்கெட்காரர்களைப் பற்றி ஆராய்வதற்காக மத்தியப்பிரதேச மற்றும் இந்திய அரசின் விசேஷ அனுமதியைப் பெற்று இப்படி பிக்பாக்கெட்காரராக மாறியுள்ளார்.

தமது ஏழு வருட பிக்பாக்கெட் அனுபவத்தில் நூற்றுக்கணக்கான பிளேடுகளை விழுங்கியிருக்கிறாராம். கையும் களவுமாகப் பிடிபடும் பிக்பாக்கெட்காரர்கள், சாட்சியங்களை அழிப்பதற்காக, கையிலுள்ள பிளேடுகளை விழுங்கி விடுவது வழக்கமாம்! அடப்பாவமே!

நன்றி : ஹிந்துஸ்தான் டைம்ஸ்
தகவல் : ராஜலட்சுமி முரளீதரன்

கழுத்திலே போட்டது மாலையை இல்லே."

"பின்னே என்ன மலைப்பாம்பையா?"

"இந்த மாதிரி பதிலே என் கழுத்தை நெரிக்கிற மாதிரி இருக்கு. மூணு சான்ஸ் தரேன். சரியாக யூகிச்சுடு பார்க்கலாம்."

சிறிது நேரம் எடுத்துக் கொண்டாலும் முதல் யூகமே சரியான விடையாக அமைந்து விட்டது. 'ஸ்டெதெஸ்கோப்.'

எண்ணிப் பார்த்தபோது சிவப்ரியாவுக்கு வேடிக்கையாக இருந்தது. ஆனந்த்தும் சிவப்ரியாவும் ஒருவருக்கொருவர் ஸ்டெதெஸ்கோப்பை மாற்றிக் கொள்ள, 'ஸ்டெத்தை மாற்றினாள் கோதை; ஸ்டெத்தை மாற்றினான்' என்று நாதஸ்வரக்காரர் வாசிக்க, திடீரென்று நாதஸ்வரத்துக்குப் பதிலாக அவர் வாயில் தெர்மாமீட்டர்!

'ஆனந்த், நீ என்னையும் பைத்தியமா அடிச்சுக்கிட்டிருக்கே' என்றாள். சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் அவளது மூக்கு நுனி சிவந்தது.

'அது சரி, என் கனவு பற்றி என்ன நினைக்கிறே ஷிவ்?'

'உனக்குத் தூக்கம் போதாது ஆனந்த். ரொம்ப ரெஸ்ட்லெஸா இருக்கே. அதனாலே தினமும் ராத்திரி ஒரு ட்ரிகாவோ ஆன்க்ஸிட்டோ எடுத்துக்க. நல்லா கும்பகர்ணனாட்டம் ஆயிடுவே. அப்புறம் உனக்கு இந்த ராவண நினைப்பெல்லாம் வராது.'

'ரொம்பத் தேவைதான் எனக்கு. உன்னைக் காதலிச்சதுக்கு என்னை ராவணனாக்கிட்டியே. நான் என்ன சாமியார் வேஷத்திலே வந்தா உன்னைக் கவர்ந்துட்டேன்?'

இப்போது யோசிக்கும்போது கிட்டத்தட்ட ஒரு சாதுவின் வேஷத்தில்தான் அவன் தன்னைக் கவர்ந்தானோ என்ற எண்ணம் தலைதூக்கிற்று. அவனைக் கேட்டால் 'நீ வேஷம் போட்டதால்தான் நான் விலகும்படி ஆனது' என்பான். திரைப்பட வேஷம்.

ப்ரி-வியூ நிகழ்ச்சிக்குச் சென்றபோது ராஜ மரியாதை கிடைத்தது. அனைத்தும் திடீரென மாறி தேவதை போலான சின்ட்ரெல்லாவாக அவள் உணர்ந்தாள். திரையுலகில் நுழைந்தபிறகு இந்த உணர்வு அடிக்கடி எழுகிறது.

ஆனால் அந்தக் கதைக்கு மாறாக, இளவரசனை இழந்துவிட்ட தேவதை. அதுவும் சின்ரெல்லா ஆன காரணத்தினாலேயே!

திரையில் தனது பெயர் காட்டப்பட்டபோது எழுந்த சன்னமான கைதட்டலே கூட அவளைக் கூச்சமடையச் செய்தது. தனது அறிமுகக் காட்சியே அழுத்தமாக அமைந்ததில் ஒருவித சிலிர்ப்பு ஏற்பட்டது. இலண்டன் காட்சிகளைக் கண்டபோது டாக்டர் மாலியின் நினைவு வந்தது. க்ளோஸப்பில் காதல் பாவத்தை வெளிப்படுத்திய போது இவ்வளவுச் செயற்கையாகத் தனது உணர்வை ஆனந்திடம் வெளிப்படுத்தியிருக்க மாட்டோம் என்று தோன்றி மனம் வாடியது.

தன்னிடம் ஒரு வித்தியாசமான வசீகரம் இருப்பதை உடையலங்கார நிபுணர் மேதை

மையுடன் வெளிப்படுத்தியதில் ஒரு பரவசமும் உண்டானது.

"இந்தப் பரவசத்தை இன்றே ஒட்டுமொத்தமாக அனுபவித்துவிடலாம். ஆனந்த் விஷயத்தில் ஏற்பட்ட மனப்புண்ணுக்கு இது மாற்றாக அமையட்டும். நாளையிலிருந்து ஆனந்த், திரையுலகு இரண்டிற்குமே மொத்தமாக முழுக்குப் போட முயற்சிப்போம்."

திடீரென்று வில்லனின் முகம் க்ளோஸ்-அப்பில். 'அந்தக் குட்டி மட்டும் இங்கே இருந்தா?' என்று அவன் விகாரமாகச் சிரிக்க, அடுத்த கணம் அந்தப் பின்னணியில் சிவப்ரியாவின் முகம் தோன்றியது.

இதுபோன்ற செட்டின் பின்னணியில்தான் தோன்றியதாக நினைவில்லையே? சிவப்ரியா குழம்பிக் கொண்டிருக்க, அந்தக் குழப்பம் அதிர்ச்சியாக விரைவில் மாறியது.

வக்கிரமான அசைவுகளைக் காட்டியபடி வில்லனைச் சுற்றிச் சுற்றி வந்து இசைக்கேற்ப ஆடிக் கொண்டிருந்தாள் சிவப்ரியா திரையில். ஒரு துணை நடிகைக்கு அவளைப் போன்றே வேடமிட்டு ஆட வைத்து, க்ளோஸ்-அப்பில் மட்டும் சிவப்ரியாவின் முகத்தைக் காட்டி, மொத்த நடனமும் அவளால் ஆடப்பட்டதுதான் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும் காட்சி! வேணுவின் வக்கிர எண்ணத்திற்குக் கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் கலையும் கைகொடுத்திருந்தது.

ஏமாற்றுவேலை. துரோகம். 'மிஸ்டர் வேணு' கையைச் சொடக்குப் போட்டபடி அவனை நோக்கிக் கத்தினாள் சிவப்ரியா தன்னை மறந்து.

அடுத்த நிமிடம் திரைப்படம் நின்றது. விளக்குகள் உயிர் பெற்றன. மொத்தப் பார்வையாளர்களும் அவர்கள் பக்கம் திரும்பினர். சிவப்ரியா முழுவதுமாகத் தன்னிலைக்கு வந்தாள்.


வேணுவுக்கருகே சென்று சற்றே குரலைத் தழைத்து 'ஒரு நிமிஷம் வெளியே வாங்க' என்றாள். சமாதானத்துக்கு வார்த்தைகளை மனத்தில் அசைபோட்டபடி நுழைவாயிலுக்கருகே சென்றான் அவன்.

"அது வந்து..."

"எதுவும் பேசவேணாம். உங்களை நீதிமன்றத்திலே சந்திக்கிறேன். தயாரா இருங்க."

கர்ஜித்தபடி சிவப்ரியா முகம்சிவக்க வெளியேற, அவளது குரல் வேணுவையும் தாண்டிச் சிலரது காதுகளில் விழுந்தது.

(தொடரும்)



# குறும்பு சாமிகள்...!

**குறும்பு பண்ணாம குழந்தைகள் உண்டா? டீ.வி பெட்டியை உடைச்சிட்டு கம்முனு உட்கார்ந்துக்கிறது; பக்கத்து வீட்டுப் பையனின் புது ட்ரஸ்ஸைக் கிழித்து விட்டு நல்ல பிள்ளை மாதிரி மௌனம் காப்பது என்று ஏகப்பட்டது இருக்கும். ''இது மாதிரி குறும்புசாமி வேலை ஏதாவது பண்ணியிருக்கீங்களா?''ன்னு சில வி.ஐ.பிகளிடம் கேட்டோம்.**

**மாது பாலாஜி:**

வீட்ல டேபிள் ஃபேன் இருந்தது. அதை என்னோட சகோதரி அவங்க பக்கம் திருப்பி வச்சுக்கிட்டு இருந்தாங்க. காற்றே வரலை. என் பக்கம் திருப்பச் சொன்னேன். மாட்டேன்னுட்டாங்க. இதனால ரெண்டு பேருக்கும் ஒரே சண்டை. எவ்வளவோ முரண்டு பிடிச்சும் முடியலை. இதுக்கு ஏதாவது பண்ணனுமேன்னு யோசிச்சேன். ஃபேன் வயரைக் கட் பண்ணினா அவளுக்குக் காத்து வராதேன்னு நினைச்சு கத்திரியால சத்தம் போடாம கட் பண்ண... ஷாக்... 'ஆ...'ன்னு அலறல்! அப்புறம் எல்லாரும் விழுந்தடிச்சு ஓடி வந்து என்னைக் காப்பாத்தி முதுகுல இரண்டு குடுத்தாங்க...

**லேனா தமிழ்வாணன்:**

சின்ன வயசுல எனக்குக் காது குடையற பழக்கம் உண்டு. காது குடையறதுன்னா கையில என்னெல்லாம் கிடைக்குதோ அதையெல்லாம் காதுல விட்டுக் குடைவேன். அதாவது ஆணி, கம்பி உட்பட. ஒருமுறை கம்பியை வச்சு குடைஞ்சு இரத்தம் வந்துடுச்சு. அப்பா, அம்மாகிட்டே சொல்ல பயம். மறைச்சுட்டேன். அப்புறம் காது புண்ணாகி, செப்டிக் ஆகற லெவல்ல வந்தப்போ வீட்ல வேலை பார்த்த மீனாட்சி அக்கா பார்த்துட்டாங்க. ''ஐயையோ இதென்னாச்சு''ன்னு அலறி பெற்றோருக்கு விஷயம் தெரிஞ்சு, ஆஸ்பத்திரி கூட்டிட்டுப் போனாங்க. அங்க டாக்டர் சொன்ன விஷயம் இப்பவும் காதுல ரீங்கார மிடுது. 'இப்பவாவது பையனைக் கூட்டிட்டு வந்தீங்களே... இல்லைனா காது செவிடாகும் நிலை வந்திருக்கும்.'

**செல்லக்குமார் (த.மா.கா) முன்னாள் எம்.எல்.ஏ:**

ஏழாவது படிச்சிட்டிருந்தேன். தாத்தா கொல்லத்துல இருந்தாங்க. விடுமுறைக்காக அங்க போயிருந்தேன். நல்ல பெரிய வீடு.

அந்தக் காலத்து கார் ஒன்று இருந்தது. எனக்குக் கார் ஓட்டறதுன்னா ரொம்ப இன்டரஸ்ட். ஒருநாள் யாருக்கும் தெரியாம ஷெட்டில் இருந்த வண்டியை வெளியில எடுத்தேன். வேகமாக ரிவர்சில் வந்த கார், அங்க இருந்த பெரிய மரத்தில 'டமார்'னு மோத... கார் டிக்கி பாதிக் காலி. வீட்டுக்குத் தெரிஞ்சா ஒரு வழி பண்ணிடுவாங்கன்னு நினைச்சு யார்ட்டயும் சொல்லாம சொந்த ஊரான கன்னியாகுமரிக்கு வந்துட்டேன். காரை யார்






இடிச்சாங்கன்னு அங்க பெரிய பிரச்னையாகி ஊருக்குத் தாத்தா ஃபோன் பண்ண... அப்புறமென்ன அப்பா, அம்மா வறுத்து எடுத்துட்டாங்க.

**ஸ்வர்ணமால்யா:**

சின்ன வயசுல எனக்குப் பிளாஸ்டிக் பிரேஸ் லட் போட்டிருந் தாங்க. விளை யாடிக் கிட்டு இருக்கும்போது அது உடைஞ்சிட்டுது. ஐயையோ அப்பா அம்மாவுக்குத் தெரிஞ்சா திட்டுவாங்களேங்கற பயத்துலே கண்ணீர் வந்துட்டுது! வீட்ல என்னை ரொம்ப நேரமா காணலையேன்னு தேடினாங்க. நான் என்ன பண்ணினேன்னா கழுத்துல கிடந்த மூணு கிராம் தங்கச் சங்கலியை கடிச்சு கடிச்சு சாப்பிட ஆரம்பிச்சுட்டேன். அப்புறம் என் னடா பீரோவுக் குள்ள இருந்து சத்தம் வருதுன்னு பாத்துட்டு அம்மா கதவைத் திறந்தா... உள்ளே நான்! சங் கிலியில இருந்த நாலைந்து துண்டு வயித்துல போயிருந்தது. அப்புறம் என்ன ஏதுன்னு விசாரிச்சு, இப்படியா பண்ணு வேன்னு செல் லமா திட்டி அணைச்சுக் கிட்டாங்க.



— சலாம்ஜி

# மும்பை மசாலா



* மாமியாரை மொத்திய மருமகள்! (நடுவில்)

**கா**ற்றிலே ஒரு சிலுசிலுப்பு, மனசிலே ஒரு கிளுகிளுப்பு. மேனியைத் தொடும் துளிகள் தரும் ஜிலுஜிலுப்பு. க்யூட்டான கைப்பிடிகளுள்ள புதுக் குடைகளை ஏந்திக் கொண்டு, "ஹே... மான்சூன் ஆகயா"என்று ஹிங்லிஷில் சிறகடிக்கத் துடிக்கும் நெஞ்சுகளை தரையிறக்க வென்றே BMC, MTNL போன்ற "சேவை" நிறுவனங்கள் ஒரு ரோடு, ஒரு சந்து பொந்து விடாமல் எல்லாவற்றையும் தோண்டிப் போட்டிருக்கிறார்கள். ஆகாசத்தில் பறக்க நினைத்து பாதாளத்தில் விழுவது நமக்கொன்றும் புதிதல்லதான்; வெளிச்சம் வாங்கப் போய் இருளில் மூழ்கிய கதையாக "என்ரான்" ஆட்டம் காட்டவில்லையா? மராத்திய அரசு சுமுகமான முடிவெடுக்கவில்லை என்றால், ஜனநாயக முன்னணிக்கு ஆதரவு நீட்டிப்பென்பதும் தகராறான விஷயம்தான் என்பதாகப் பயமுறுத்தி வருகிறார் தேசியவாதக் காங்கிரஸ் கட்சிக்காரரான (என்.சி.பி.) பவார்.

'பவர்' விஷயத்தில் முடிவெடுப்பதில் மிகவும் 'பவர் ஃபுல்'லாகத்தான் இருக்கிறார் மனிதர்! பாருங்களேன்... என்.சி.பி.யின் மும்பை அணியில், தலைவர்கள் எண்ணிக்கை பெருத்துக் கொண்டே போய், 'உறுப்பினர்களைக் காட்டிலும் தலைவர்கள் அதிகம் போலிருக்கிறதே?' என்று ஜோக்கடிக்கும் நிலைமை ஏற்பட, தலைவர்களின் எண்ணிக்கை '90'ஐத் தொட்டதும், "பவர்-கட்" என்று அறிவித்துவிட்டார் பவார். ஆம்! மும்பை அணிக்கே மூடு விழா நடத்தி விட்டார்! என்.சி.பி.காரர்களுக்குப் பயங்கர 'ஷாக்'!

**வ**ரவர தினசரிகளைத் திறந்தாலே 'ஷாக்' கடிக்க வைக்கும் செய்திகள்தான். மாமியார்கள்தானே மருமகள்களை மண்ணெண்ணெய் விட்டுக் கொளுத்துவார்கள்? இப்போது மருமகள்கள் மாமியார்களை அடித்தே கொல்லும் காலம் வந்துவிட்டது. முலுண்டில், சர்வோதயா நகர் கொஞ்சம் 'பாஷ்' காலனிதான். அங்கே வசிக்கும்

## ஷாக்...

காஞ்சன் (புது மாட்டுப் பெண்ணல்ல. 50 வயதான பழைய, பழகிய மருமகள்தான்) தன் வயதான மாமியாரைச் சுத்தியால் அடித்தே முக்தி கொடுத்துவிட்டாள். காரணம்... மதியச் சாப்பாடுக்கு என்ன செய்வதென்பதைப் பற்றிய தகராறு! நம்ப முடிகிறதா?

**ஹூ**ம்... நேபாள இளவரசர் தன் குடும்பத்தையே ஒழித்துக் கட்டினார் என்பதையே இன்னும் முழுமையாக நம்ப முடியவில்லை. அதற்குள் அவர் காதலியான தேவயானியைத் திருமணம் செய்து கொண்டு விட்டார் என்று "நியூஸ் வீக்"கும், தேவயானி ரஷ்ய மாஃபியாவைச் சேர்ந்தவர், இந்தக் கொலைகளின் பின்னாலிருந்து இயக்கிய 'சக்தி' அவர்தான் என்று வேறு சில இதழ்களும் தெரிவிப்பதை எப்படி நம்புவது?

ஆனால் இதே மாதிரி தன் குடும்பம் 1990ல் அழிந்த கதையை, நடிகர் கமல் சதனா நினைவுகூரும் போது, நம்பித்தான்

# ஷாக்!

ஆக வேண்டியிருக்கிறது. முன்னணிக்கு வந்து கொண்டிருந்த இந்த இளம் நடிகரின் தந்தை ப்ரிஜ் சதனா ஒரு ப்ரொட்யூசர். ஏற்கெனவே கடன் தொல்லை. இதில், இவரே ஒரு இஸ்லாமியரை மணந்ததற்கும், தன் பெண்ணையும் ஒரு இஸ்லாமிய இளைஞனுக்கு மணமுடிக்க நிச்சயித்திருந்ததையும் வைத்து குடும்பத்தில் ஏக தகராறு! கடைசியில் கமலின் பிறந்த நாளன்று, எக்கச்சக்கமாகக் குடித்துவிட்டு, தன் பாந்த்ரா இல்லத்தில், எல்லோரையும் சுட்டுக் கொன்று, தன்னையும் சுட்டுக் கொண்டுவிட்டார். கமலுக்குக் கழுத்தில் குண்டு பாய்ந்திருந்ததால், தெய்வாதீனமாகத் தப்பியிருக்கிறார்.

சில நடிகர்களின் அனுபவம் சோகமயமானதென்றால், சிலரின் அனுபவம் ஒரு காமெடி நாடகம் அமைக்குமளவுக்கு நகைச்சுவை மிக்கதாக இருக்கிறது. ஷத்ருகன் சின்ஹா தமது பிஜேபி வாழ்வில் மம்தாவுடனும் அம்மாவுடனும் மாட்டிக் கொண்டு தவித்த சுவையான அனுபவங்களை இடைச் செருகி, 'பதி பத்னி அவுர் மை" என்றொரு நாடகத்தை மேடை ஏற்றினார். 'ஒரு மனிதன் மணமானவனாக இருக்கலாம் அல்லது சந்தோஷமானவனாக இருக்கலாம்" என்ற தமது கருத்தை மையமாக்கி ஒரு காதல், மணமானபின் கசந்த கதையை ஹாஸ்ய நாடகமாக்கியிருக்கிறார். சூத்திரதாரரான சின்ஹா, காதலர்களை இணைத்த கையுடன் காங்கிரஸ் பி.ஜே.பி.யையும் இணைத்த பெருமையும் சேர்த்துக் கொண்டார் - மேடையில் விலாஸ்ராவ் தேஷ்முக்கும் அத்வானியும் கோரஸாக சின்ஹாவைப் புகழ்ந்து தள்ளினார்களே!

மற்றொரு வி.வி.ஐ.பி. பிரிதொரு நடிகரின் முயற்சியைப் போற்றியிருக்கிறார். வாஜ்பாயிதான். ஆமீர்கானின் 'லகானை' ஓஹோ என்று பாராட்டியிருக்கிறார். அதை விரிவாகப் பார்க்கலாமே.... (அடுத்த வாரம்)

**- ஜெயஸ்ரீ ராஜ்**

• மலர்ந்த நினைவுகள்



• அரசியல் மேடையல்ல; நாடகமேடை



# தாத்தா, பாட்டிகளின் தனிக்குடித்தனம்!





நாநூறு சதுர அடியில் சின்னதாக ஒரு ஃபிளாட். படுக்கை அறை, வரவேற்பு அறை, பாத்ரூம், கேபிள் கனெக்ஷனுடன் டி.வி., டெலிபோன், ஏ.சி. என்று ஏகப்பட்ட வசதிகள். ஆனால் நோ கிச்சன். பொதுவாக ஒரு சாப்பாட்டு அறை. அங்கே போய்க் காலை டிபன், டீ, இரவு உணவு என்று தேவைப்படி சாப்பிட்டுக் கொள்ளலாம். இருபத்திநாலு மணி நேரமும் ஒரு டாக்டர் டியூட்டியில் இருப்பார். அவசர மருத்துவ உதவி தேவை என்றாலும் பிரச்னை இடையாது. மாடி ஏற சௌகரியமாய் லிஃப்ட். கரண்ட் கட் ஆனாலும் கவலை வேண்டாம். ஜெனரேட்டர் வசதி உண்டு.

இத்தனையும் எங்கே என்று அறிய ஆவலாக இருக்கிறதா? சென்னை அருகில் உள்ள சோளிங்க நல்லூரில்தான்.

நீங்கள் இங்கே வசிக்க விரும்பினால் சில கண்டிஷன்கள் உண்டு. உங்கள் பிள்ளை அயல் நாட்டில் சம்பாதித்துக் கொண்டிருக்க, வயதான காலத்தில் நீங்கள் தனியாய் வசிப்பதற்குச் சிரமப்படுகிறவராக இருக்க வேண்டும். அல்லது, ரிடையர்டு லைஃபை நிம்மதியாய்க் கழிக்க விரும்புபவராகவும் இருக்கலாம். அப்படியென்றால், நீங்கள் ஒளாசிக் பிரமோட்டர்ஸ் நிறுவனம் உருவாக்கத் திட்டமிட்டிருக்கும் இந்தக் ஒளாசிக் குடும்பத்தில் உறுப்பினராகலாம்.

நீங்கள் தனிமனிதராக (ஆண் அல்லது பெண்) அல்லது, தம்பதியராக இருக்கலாம். தலைக்கு மூன்று லட்சம் ரூபாய் செலுத்தினால், இருவருக்கு ஒரு ஃபிளாட் என்று ஒதுக்கப் பட்டுவிடும். தவிர, மாதம் தலைக்கு ரூ. 3500 ரூபாய் செலுத்தினால் வாழ்நாள் முழுவதும் அங்கே தங்கி, சாப்பிட்டு நிம்மதியாகக் கழிக்கலாம்.

"மொத்தம் எண்பது ஃபிளாட்கள். நூற்று அறுபது பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். கோவில், கிளப், இன்டர்நெட் மையம், உடற்பயிற்சி மையம், நீச்சல் குளம், தியான மண்டபம், கேரம், செஸ், ப்ரிட்ஜ் போன்றவை விளையாட இடம், பேங்க், சூப்பர் மார்க்கெட் என்று அனைத்து வசதிகளும் உண்டு.

"இந்தத் திட்டத்துக்கு நாங்கள் சூட்டியுள்ள பெயர் ஒளாசிக் குடும்பம். சென்னையில் பிரம்மாண்டமான பங்களாவில் வசிக்கும் வசதிபடைத்த தம்பதியின் மகன் அமெரிக்காவில். இங்கே இவர்களால் பெரிய வீட்டை பராமரிக்கக் கூட முடியாமல் சங்கடப்படும் இன்றுள்ள காலகட்டத்தில், தனித்து வாழும் முதியவர்களுக்குப் பாதுகாப்பான சூழ்நிலை உருவாக்கித் தருகிறோம். தாத்தா பாட்டிகள் இங்கே தனிக்குடித்தனம் வருவதாகச் சொல்வதுதான் சரி!" என்கிறார் ஒளாசிக் குடும்பத் திட்டத்தை செயல்படுத்தி வரும் பாபா சங்கர்.

— கௌதம் ராம்

# டிக்... டிக்...

திருவள்ளூர்
என்.சி. ஸ்ரீதரன்

"டேய்! நம்ப ஷைனியை 'மில்க் கிவே'கிட்டே பார்த்தேன்டா... ப்ளூ சுரிதார்ல, புது பஜாஜ் ஸ்பிரிட்டை ஓட்டிக்கிட்டுப் போனா. புதுசா ரிம்லெஸ் கண்ணாடிப் போட்டிருந்தா. டென்னிஸ் விளையாடப் போறா போலிருக்கு. ராக்கெட் வெச்சிருந்தா. முடியை ரொம்பக் குட்டையா வெட்டி, கிரண்பேடி மாதிரி இருந்தாடா! ரொம்ப அழகா இருந்தா"... இது ஆர்ட்ஸ் காலேஜில் படிக்கும் அழகரசன், தன் நண்பர் குழாமிடம் பகிர்ந்துக் கொண்டிருந்த விஷயத்தின் சிறு பகுதி...

காலை நேர பரபரப்பில், எத்தனையோ டூ விலர்களில், யார் யாரோவெல்லாம் கடந்து போய்க் கொண்டிருக்க, சில விநாடிகள் மட்டுமே தென்பட்ட ஷைனியை மட்டும் எப்படி அவ்வளவு உன்னிப்பாய் அழகரசனால் வர்ணிக்க முடிந்தது?





கவனம்! விருப்பமான ஒரு விஷயத்தின் மீது ஏற்படும் கான்ஸன்ட்ரேஷன்!

ஒரு தகவலையோ, விஷயத்தையோ உன்னிப்பாகவும், நமது கவனம் சிதறி விடாதபடி ஒருங்கிணைத்தும் பார்த்தால், அவை நமது மனத்தில் நன்றாகப் பதியும்.

தற்போது நமக்கிருக்கும் பிரச்னைகளால், நம்மால் ஒரே இடத்தில் கவனம் செலுத்தி முழு ஈடுபாட்டுடன் இருக்க முடிவதில்லை. ஒரு வேலையைச் செய்து கொண்டிருக்கும் போது, வேறு வேலையைப் பற்றிய சிந்தனை வருகிறது. பாதியில் கழன்று வேறு ஏதோ நினைவுகள் புகுந்து குழப்பும். நாம் சிலரைப் பார்த்திருக்கலாம். நாம் அவரோடு பேசிக் கொண்டிருக்கும் போது, அவருடைய எண்ணங்கள், நாம் பேசும் பேச்சில் முழுமையாக இல்லாததை நன்றாக உணர முடியும். "என்ன சொன்னீங்க? நான் ஏதோ



"மாப்பிள்ளை! என் மகளும் நீங்களும் எப்படி இருக்கீங்க?"

"போலீஸும், எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.வும் போல இருக்கோம் மாமா!"

— ஞா. ஞானமுத்து

மூடுல இருந்துட்டேன்" என்பார்கள். நமக்கே இது போன்ற அனுபவங்களும் ஏற்பட்டிருக்கலாம். ஒரு விழாவிலோ அல்லது வேறு சந்தர்ப்பங்களிலோ நமக்குப் பலரை அறிமுகப்படுத்தி வைப்பார்கள். அவர்களுடைய பெயர்களைச் சொல்லும்போது, நமது கவனம் குவிந்து ஓரிடத்தில் இல்லாமல் போவதால், பலருடைய பெயர்கள் நமது நினைவில் நிற்பதில்லை.

"ஆமாமா! ராமச்சந்திரனோ, அய்யப்பனோ, மகேந்திரனோ என்னவோ பேர் சொன்னாரே..." என்று நெற்றிப் பொட்டைத் தடவிக் கொண்டு நிற்பது சகஜம்தான்.

நமது கவனத்தை எப்படி ஒரே இடத்தில் செலுத்துவது: நம்மால் முடியுமா? கண்டிப்பாக முடியும். இதற்குத் தேவை மனப் பயிற்சிதான்.

நமது முன்னோர்களும், தவமுனிவர்களும் மனத்தைக் கட்டுப்படுத்தி, நினைவுகளை ஒரு நிலைப்படுத்தி, பல சாதனைகள் புரிந்ததாகப் படித்திருக்கிறோம். அதை நம்மால் செய்ய முடியாதா?

முடியும்.

மனத்தை ஒரே இடத்தில் செலுத்த, பிரத்யேக 'கவனப் பயிற்சி' இருக்கிறது. ஆனால் அதைச் செய்யும் முன், நாம் நம்முடைய இப்போதைய நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டும். மனத்தை அலைபாய விடாமல், நம்முடைய நினைவுகளை ஒரே புள்ளியில் சிராக்கி, கவனம் முழுவதையும் ஒரே இடத்தில் அதிகபட்சமாக எவ்வளவு நேரம் செலுத்த முடியும் என்று சோதித்துப் பார்க்க கீழ்க்கண்ட பயிற்சியைச் செய்து பாருங்கள்.

பயிற்சியை ஆரம்பிப்போமா?

முதலில் தனிமையான இடமொன்றைத் தேர்ந்தெடுங்கள். உங்களை யாரும் தொந்தரவு செய்யாத இடமாக அது இருக்கட்டும். உங்கள் வேலைகளையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் பொருத்து, தனிமையான நேரத்தையும் தேர்ந்தெடுங்கள். பகல் நேரத்தில் இது போன்ற சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைக்காது என்று கருதினால், அதிகாலையிலோ, பின்னிரவு நேரத்தையோ தேர்ந்தெடுங்கள். வினாடி முள்ளுடன் அமைந்த ஒரு கைக்கடிகாரத்தை உங்கள் முன் வைத்துக் கொள்ளுங்கள். நீண்ட பெருமூச்சை இழுத்து, சுவாசக்காற்றைச் சில வினாடிகள் உங்களுடைய நுரையீரல்களுக்குள் அடக்கி வையுங்கள். பிறகு மிகவும் மெதுவாக, மெள்ள மெள்ள சுவாசத்தை வெளியிடுங்கள். இது போன்று மூன்று தடவை செய்ய வேண்டும்.

நீங்களும் உங்களுடைய கைக்கடிகாரமும் தவிர, வேறொன்றும் இந்த உலகத்தில் இல்லை என்பது போல கற்பனை செய்து கொண்டு, மற்ற எல்லா நினைவுகளையும் வலுக்கட்டாயமாக அகற்றுங்கள். செய்தாயிற்றா? உங்களுடைய கைக்கடிகாரத்தின் வினாடி முள்ளை மட்டும் சற்று உன்னிப்பாகப் பாருங்கள். எவ்வளவு அழகாகவும், நேர்த்தியாகவும் சுறுசுறுப்பாகவும் அந்த முள் இயங்குகிறது என்று பாருங்கள். உங்களுடைய கவனம் முழுவதும் அந்த வினாடி முள்ளின் ஓட்டத்திலேயே இருக்கட்டும். டிக்...டிக்...டிக்... உங்களுடைய எண்ணம், வேறு எந்த விஷயத்தைப் பற்றியாவது நினைக்குமேயானால், மீண்டும் அதை உங்களுடைய கைக்கடிகாரத்தின் வினாடி முள்ளுக்குக் கொண்டு வாருங்கள்... வேறு எதையும் நினைக்காதீர்கள். டிக்...டிக்...டிக்... அந்த வினாடி முள் கடிகாரத்தை இரண்டு முறை முழுமையாகச் சுற்றி வரும் வரை பொறுமையாக உங்களுடைய கவனத்தை ஒரே இடத்தில் செலுத்துங்கள். உங்களுடைய கவனம் இடையில் கலையுமானால் மீண்டும் முதலிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

இந்தப் பயிற்சியைத் தினமும், ஒரு குறிப்பிட்ட இடத்தில், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தவறாமல் செய்து வாருங்கள். முதலில் இரண்டு நிமிடம் உங்களுடைய கவனத்தைச் சிதறாமல் ஒரே இடத்தில் வைப்பது என்பது சிரமமாக இருக்கலாம். ஓரிரு முறை தோல்வியும் அடையலாம். ஆனால் பயிற்சியின் விளைவாக உங்களுடைய கவனத்தின் மீது உங்களுக்கே ஒரு மாற்றமும் நம்பிக்கையும் ஏற்படும். இரண்டு நிமிடம் மட்டும் உங்களுடைய கவனத்தை ஓரிடத்தில் செலுத்திய உங்களால், மூன்று நிமிடம் ஐந்து நிமிடம் என்று படிப்படியாக முன்னேற்றத்தைப் பார்க்க முடியும்.

இந்த 'டிக்...டிக்...டிக்...' பயிற்சியால் கவனம் சிதறாமல் இருக்கப் பழகலாம். கவனம் அதிகமாக, அதிகமாக, நினைவாற்றல் அதிகமாவதை நாளடைவில் நீங்களே உணருவீர்கள். ○

# உதவி

யோகி

சண்முகம் எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு பஸ் ஸ்டாப்புக்கு வந்த போது இரண்டு மணியாகிவிட்டது. வயிறு பசித்தது. எப்போதும் பன்னிரண்டரைக் கெல்லாம் மதியச் சாப்பாடு சாப்பிட்டு விடுவான். சாப்பிடும் போதே, "இவனெல்லாம் என்ன வேலை பார்த்துக் கிழிச்சான்னு இந்நேரமே சாப்பிட உட்கார்ந்துட்டான். நீயும் அவனுக்குக் சாப்பாடுப் போடு'' என்பார் அப்பா.

அப்பா தங்க நகை செய்பவர். வீட்டு வராண்டாவில் தங்கப்பட்டறை வைத்திருக்கிறார். அவனுக்கு ஆரம்பம் முதலே தங்க வேலையில் எந்த ஈடுபாடும் இல்லை. படித்து வேறு நல்ல வேலைக்குப் போக வேண்டும் என்று விரும்பினான். இல்லை வேறு தொழில் செய்ய வேண்டும் என்று நினைத்தான். "பிஸினெஸ் பண்ணப் போறியா. அதுக்கெல்லாம் பணம் தர முடியாது. பத்து பைசா செலவு இல்லாம நீயா ஒரு வேலையத் தேடிக்கோ; இல்ல என் கூட பட்டறையில் உட்காரு" என்று கூறிவிட்டார் அப்பா. கொஞ்சம் நிலமும் உண்டு. விவசாயத்தில் கவனம் செலுத்தலாம் என்று இப்போது நிலத்துக்குப் போக ஆரம்பித்து இருந்தான்.

இப்போது கூட டவுனுக்கு உரம் வாங்கவே வந்தான். உரம் வாங்கி பஸ்ஸில் ஏற்றி அனுப்பி விட்டு, அப்பா செய்து கொடுத்த நகையை நகைக் கடையில் கொடுத்துவிட்டுப் பஸ் ஸ்டாண்டுக்கு வந்தான். பஸ்ஸில் கூட்டம் இல்லை. வெயில் மண்டையைப் பிளந்தது. கொஞ்ச நேரத்தில் பஸ் நிறைந்து கிளம்பியது.

சண்முகம் உட்கார்ந்து இருந்த சீட்டிற்கு எதிர் சீட்டில் ஒரு குழந்தை தலையை மட்டும் இவனுக்குக் காட்டிக் கொண்டு சிரித்தது. அது ஆண் குழந்தையா, பெண் குழந்தையா என்று தெரியவில்லை. அதன் உடுப்பு தெரிந்தால் என்ன குழந்தை என்று சொல்லலாம். கொஞ்ச நேரம் கழித்து சீட்டின் மேல் ஏறி நின்றது. கவுன் போட்டிருந்தது.

கண்டக்டர் "டிக்கட், டிக்கட்'' என்று வந்தார். "இந்தப் பாப்பாவுக்கு டிக்கட் எடுக்கணும். யாரு பாப்பா இது?'' என்று கண்டக்டர் தொண்டைக் கிழிய கத்தினார். "எங்க பாப்பா இல்ல... எங்க பாப்பா இல்ல...'' என்று ஆளுக்காள் சொன்னார்கள். "யார் குழந்தை இது?'' கண்டக்டர் கேட்டார். "இதென்னடா வம்பாப் போச்சு'' புலம்பினார்.

"பாப்பா நீ யாரு கூட வந்தே''– கண்டக்டர் கேட்டார். "நா யாரு கூடவும் வரல" என்று கொஞ்சிக் கொஞ்சிப் பேசியது. "எங்க ஏறிச்சுன்னு தெரியுமாப்பா''– டிரைவர் முன்னால் இருந்து கேட்டார். குழந்தை திடீர் என்று 'அம்மா...அம்மா' என்று அழ ஆரம்பித்தது.

சின்னக் குழந்தைதான். ஆனால் பெரிய தொண்டை...!

"குழந்தையை என்னய்யா பண்றது?''– கண்டக்டர் டிரைவரிடம் கேட்டார். எங்கு ஒப்படைப்பது என்று விவாதித்தனர். "போலீஸ் ஸ்டேஷன்ல விட்டுடுவோமா...''

சண்முகம் குழந்தையை நெருங்கினான். அவனுக்குக் குழந்தைகள் என்றால் ரொம்பப் பிடிக்கும். குழந்தைகள் உலகம் அழகானது. பெரிய கனவுகள் இல்லாதது. ஒரு பிஸ்கட் அல்லது ஒரு ஐஸ்கிரீம் என்ற அளவில் ஆசைகள், தேவைகள் எல்லாம் முடிந்துவிடக் கூடியது. நான்கு குழந்தைகளோடு சேர்ந்து உட்கார்ந்தால் நாமும் ஒரு குழந்தையாகி விடுவோம். அந்த நேரத்தில் நம் கவலைகளுக்குச் சற்றே நாம் ஓய்வு கொடுத்தவர்கள் ஆவோம்.

"உங்க வீடு எங்க இருக்கு பாப்பா–'' என்று கேட்டான். குழந்தை அரை குறையாக ஏதாவது ஒரு இடம் சொன்னால் கூட வீட்டைக் கண்டுபிடித்து விடலாம் என்று நம்பினான். 'பஸ் ஸ்டாண்ட்... பஸ் ஸ்டாண்ட்!'' என்றது.




"கண்டக்டர் சார்... என்ன முடிவு பண்ணி இருக்கீங்க குழந்தையைப் பத்தி..." என்று கேட்டான்.

"போலீஸ் ஸ்டேஷன்ல சேர்க்கலாம்னு நினைச்சோம். அப்புறம் அடுத்த ட்ரிப்புக்கு லேட்டாகும். அதனால் டைம் கீப்பரிடம் விட்டுடுவோம். யாராவது வந்து குழந்தையைக் கேட்டா தரட்டும். இல்ல சாயங்காலத்துக்கு மேல போலீஸ்கிட்ட ஒப்படைக்க சொல்லலாம்" என்றார்.

"குழந்தைகிட்ட வீடு எங்க இருக்குன்னு

கேட்டேன். பஸ் ஸ்டாண்ட், பஸ் ஸ்டாண்ட்ன்னு சொல்லுது. அப்பா அம்மா பேரை அழகா சொல்லுது- கண்ணன்-வித்யான்னு. நா வேணும்னா வர்ற ஸ்டாப்ல இறங்கி- திரும்ப பஸ் ஸ்டாண்ட் போயி பெத்தவங்களை தேடிக் குழந்தையைக் கொடுத்துடறேன்" என்றான் சண்முகம். கண்டக்டரும் சண்முகமும் ஒரே ஊர்க்காரர்கள். தெரிந்தவர்தான். "அப்படியே செய்ங்க... எங்களுக்கு ஒரு தொல்லை விட்டுச்சு" என்றார். சண்முகம் அடுத்த ஸ்டாப்பில் இறங்கினான். இனி கிளம்பிய இடத்திற்கே செல்ல வேண்டும். பசி வயிற்றைக் கிள்ளியது. எதிர்த்த பிளாட் பாரத்துக்கு வந்து பஸ்ஸுக்குக் காத்திருந்தான்.



"என்னைப் பார்த்ததும் 'மாமழை போற்றுதும்', 'மாமழை போற்றுதும்'னு குஷியா படுறீங்களே... ஏன்?"

"பலத்த மழையினாலே நேத்து உங்க கச்சேரி கேன்ஸல் ஆயிருச்சே!"

– தஞ்சை தாமு

பஸ் ஸ்டாப்பை ஒட்டி இளநீர் விற்றார்கள். "எனக்கு வேணும்" என்று இளநீரைக் காட்டியது குழந்தை. ஒரு இளநீரை வாங்கினான். குழந்தை ருசித்து குடித்தது. இளநீரை வெட்டச் சொல்லி தேங்காயை வாங்கினான். 'எனக்கு வேண்டாம்' என்று கூறிவிட்டது. அடுத்து- 'எனக்கு மிட்டாய் வேணும்' என்றது. வாங்கிக் கொடுத்தான்.

"நீ எந்த கிளாஸ் படிக்கிறே-?" என்று கேட்டதற்கு 'பா...பா... பிளாக்ஷீப்' என்று தத்தி, தத்தி ரைம்ஸ் சொன்னது. பஸ் ஸ்டாண்ட் செல்லும் பஸ் வந்தது. ஏறிக் கொண்டனர். குழந்தையின் வீடு பஸ் ஸ்டாண்டை ஒட்டி இருக்கலாம்; இல்லை வேறு எங்குமா? என்று தெரியவில்லை. குழந்தை, தூக்கச் சொன்னது. தூக்கிக் கொண்டான். திடீர் என்று சட்டை ஈரமாகவே- பார்த்தான். குழந்தை மூச்சா போய் இருந்தது. இவன் என்ன சொல்வானோ என்று நினைத்து அழுதது. "நா ஒண்ணும் சொல்ல மாட்டேன், அழக் கூடாது."

சிரித்தது. குழந்தைக்கு நன்றாக வியர்த்திருந்தது. துடைத்தான். பஸ் ஸ்டாண்ட் வந்துவிட்டது. இறங்கினான். குழந்தையைத் தரையில் இறக்கிவிட்டான். கூட்டம் அகன்றது. எங்கிருந்தோ ஒரு பெண்மணி வந்தாள். கூடவே ஒரு ஆண். "ஏய் குட்டி எங்கடி போனே"- என்று அந்த பெண் ஓடி வந்து குழந்தையைப் பிடித்து இழுத்து முதுகில் அடித்தாள். பஸ் ஸ்டாண்டை ஒட்டிய வீடு. சின்ன ஊர் என்பதால் பஸ் ஸ்டாண்ட் மைதானம் போல் இருக்கும். விளையாட வரும் குழந்தைகள் பஸ்ஸில் ஏறி அமர்ந்து கொள்ளும். அப்படி இந்தக் குழந்தை பஸ்ஸில் ஏறி விளையாடிய போது பஸ்ஸை எடுத்து விட்டனர்.

குழந்தை அலறியது. காணாமல் போன குழந்தை கிடைத்திருக்கிறது. அதற்காக சந்தோஷப்படாமல் அடிப்பதா? அந்தப் பெண் ரொம்பக் கோபக்காரியாக இருக்க வேண்டும் போலும். இவன் விவரம் சொன்னான். மிகவும் சாதாரணமாக 'அப்படியா?'- என்றனர். நன்றி கூட சொல்லவில்லை. நன்றிக்காக இந்தக் காரியம் செய்யவில்லையாயினும் சாதாரணமாய் எடுத்துக் கொண்டது வருத்தமாய் இருந்தது.

குழந்தையைத் தரதரவென்று இழுத்து கொண்டு போனாள். இவன் இந்தப் பக்கம் திரும்பி நடந்தான். பசித்தது. வீட்டிற்குப் போக நாலு மணியாகிவிடும். 'போயிட்டு அரைமணில வந்துடலாம். இவன் ஒரு பொழுது ஆக்கிட்டான். ஊர் சுத்தறப்பய' என்று அப்பா திட்டலாம். திடீர் என்று திரும்பவும் அந்தப் பெண்ணின் சப்தம்.

"ஏங்க அந்தாளைப் பிடிங்க... பிடிங்க... குழந்தை காதுல இருந்த தோடைக் காணோம். எடுத்தானா பார்த்தானான்னு கேளுங்க?" என்றாள்.

அப்பாவின் வசவுகூட மேலென்று தோன்றியது. ○

# தெய்வத்திற்கு உணவை



## நைவேத்தியமாகப் படைப்பது . ஏன் ?



மிக அண்மையில் தோன்றியவரும் ஆலய வழிபாடு செய்துவந்தவருமான ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர் இதற்குச் சாட்சி ஆகிறார்.

தூய அன்புடனும் பூரண விசுவாசத்துடனும் தெய்வத்துக படைக்கப்படும் நைவேத்தியத்தை மூர்த்தியினிடமிருந்து அருட்ஜோதி ஒன்று கிளம்பி வந்து ஸ்பரிசிக்கிறது.

அத்தகைய அருள் ஸ்பர்சம் ஆன பின்பே. அது பிரசாதமாகின்றது. ஈசுவரப்பிரசாதமாக அன்பன் அதை ஏற்றுக் கொள்கின்ற பொழுது அவனுடைய அந்தக்கரண சுத்திக்கு அது பேர் உதவிபுரிகின்றது.

ஆதாரம் : தர்மசக்கரம்

# பொன்னியின் செல்வன்

எண்பத்து ஏழாம் அத்தியாயம்

## புலவரின் திகைப்பு

அருள்மொழி வர்மருக்குத் திருமுடி சூட்டு விழா நெருங்க நெருங்க, சோழ நாடு முழுவதும் ஒரே கோலாகலமாகி வந்தது. பொன்னியின் செல்வருக்குப் பொன்முடி சூடுவது குறித்து மக்களிடையில் மாறுபட்ட அபிப்பிராயமே காணப்படவில்லை. சோழ நாட்டு ஆண்கள், பெண்கள், வயோதிகர்கள், குழந்தைகள், நகர மாந்தர், கிராமவாசிகள், வர்த்தகர்கள், உழவர்கள் அனைவரும் ஒருமுகமாகப் பொன்னியின் செல்வருக்கு முடி சூட்டுவதைக் குதூகலமாக வரவேற்றார்கள். அவர் பிறந்த வேளையைப் பற்றியும், அவர் முகத்தின் களையைப் பற்றியும், அவருடைய இனிய குண நலங்களைப் பற்றியும், குடிமக்களிடம் அவர் கலந்து பழகும் அருமைப் பண்பைப் பற்றியும் அனைவரும் சொல்லிச் சொல்லி வியந்து மகிழ்ந்தார்கள்.

இராமருக்குப் பட்டாபிஷேகம் செய்து வைக்கத் தசரதர் முடிவு செய்து விட்டார் என்று அறிந்ததும் அயோத்தி மக்கள் எல்லாரும் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தார்கள் என்பதை இராம காதை நன்கு வர்ணிக்கிறது.

வயது முதிர்ந்த பெண்மணிகள் எல்லாரும் கோசலையைப் போல் ஆகிவிட்டார்களாம். தத்தம் புதல்வர்களுக்கே மகுடாபிஷேகம் ஆகப் போவதாக எண்ணி மகிழ்ந்தார்களாம். இளம் பெண்கள் எல்லாரும் சீதா தேவி அடைந்த ஆனந்தத்தைத் தாங்களும் அடைந்து, தத்தம் கணவன்மார்களுக்கே முடி சூட்டப் போவதாகக்

**அமரர் கல்கி**

கருதித் தங்களை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக்கொண்டார்களாம். அயோத்திமா நகரத்தில் வாழ்ந்த முதிய பிராயத்து ஆண் மக்கள் எல்லாரும் தசரதனைப் போல் ஆகிவிட்டார்களாம்.

**மாதர்கள் வயதின்மிக் கார்**
**கோசலை மனத்தைஒத் தார்;**
**வேதியர் வசிட்டன்ஒத் தார்;**
**வேறுள மகளிர்எல் லாம்**
**சீதையை ஒத்தார்; அன் னாள்**
**திருவினை ஒத்தாள்; அவ் வூர்;**
**சாதன மாந்தர் எல் லாம்**
**தயரதன் தன்னை ஒத் தார்.**

என்று அயோத்தி மக்களின் மனோநிலையைக் கம்ப நாடர் அற்புதமாகச் சித்திரித்திருக்கிறார்.

அவ்வாறு அயோத்தி மக்களின் உள்ளன்பையும் நன்மதிப்பையும் அடைவதற்கு இராமர் என்ன அருள் செயல் புரிந்திருந்தார்? அவருடைய கோதண்டத்தின் மகிமையெல்லாம் பிற்காலத்தில் அல்லவா வெளியாவதற்கு இருந்தது? இராவணன் முதலிய ராட்சதர்களை வதம் செய்து மூன்று உலகங்களுக்கும் பயத்திலிருந்து விடுதலை அளித்த பெருமை பின்னால் அல்லவா அவரைச் சேர்வதாக இருந்தது? விசுவாமித்திர முனிவரோடு சென்று அவருடைய யாகத்தைப் பூர்த்தி செய்வித்துவிட்டு வந்தார் என்பது அயோத்தி மக்களுக்கு அவ்வளவாக இராமருடைய பெருமையை உயர்த்திக் காட்டியிராதல்லவா? ஏன்? விசுவாமித்திரர் திரும்பி அயோத்திக்கு வந்து அதைச் சொல்லக்கூட இல்லையே?

இந்த உலகில் சிலர் செயற்கரிய வீரச் செயல்களும், பரோபகாரச் செயல்களும் புரிந்து மக்களின் உள்ளத்தைக் கவர்கிறார்கள். இன்னும் சிலர் இசை பாடியும், நடனம் ஆடியும், கவிதை புனைந்தும், சித்திர சிற்பக் கலைகளில் அற்புதங்களை அளித்தும் பிறருடைய போற்றுதலுக்கு உள்ளாகிறார்கள். வேறு சிலர் கருவிலேயே திருவுடையோராய், பிறக்கும்போதே சிறப்புடையோராய்ப் பிறந்து விடுகிறார்கள். குறிப்பிட்க் கூடிய காரணம் எதுவும் இன்றிப் பார்ப்பவர்களுடைய உள்ளங்களையெல்லாம் கவர்ந்து வசீகரிக்கக் கூடிய சக்தியை இயற்கை அன்னை அவர்களுக்கு அளித்து விடுகிறாள். ஆகா! இயற்கை அன்னை மிக்க பாரபட்சம் உடையவள் போலும்! ஆனாலும் நாம் என்ன கண்டோம்? இயற்கை அன்னை அத்தகைய வசீகர சக்தியை அவர்களுக்கு அளிக்கும்போது அதற்கு இணையாக வேறு என்ன பிரதிகூலமான அம்சங்களையும் அளித்திருக்கிறாளோ, நமக்கு என்ன தெரியும்?

அவ்வளவு தூரம் அயோத்தி மாந்தரின் உள்ளன்பைக் கவர்ந்து, அவர்களுடைய போற்றுதலுக்கு உரியவராயிருந்த இராமர், . உலகில் சாதாரண மனிதர் யாரும் அடையாத துன்பங்களையெல்லாம் அடைய வேண்டியிருந்ததல்லவா? நாட்டைத் துறந்து, காட்டுக்குச் சென்று, காதல் மனைவியைப் பறி கொடுத்து, சொல்லுவதற்கு இயலாத மனவேதனைப் பட வேண்டி நேர்ந்ததல்லவா?

அருள்மொழி வர்மர் இயற்கை அன்னையின் பட்சபாதமான சலுகைக்குப் பாத்திரமானவர். அவருடைய தோற்றமே அவரைப் பார்த்தவர்கள் அனைவர் மனத்தையும் வசீகரித்தது. அவருடைய இனிய பேச்சும் பண்புகளும் அவருடன் பழக நேர்ந்தவர்கள் எல்லாருடைய அன்பையும் கவர்ந்தன. ஈழ நாட்டுப் போர்க்களத்துக்கு அவர் சென்றிருந்தபோது அவ்வளவாக வீர தீரச் செயல்கள் புரிவதற்குச் சந்தர்ப்பங்கள் கிட்டவில்லை. ஆயினும் அவருடைய வீரப் பிரதாபங்களைப் பற்றிய கற்பனைச் செய்திகள் பல சோழ நாடெங்கும் பரவி வந்தன. ஒருவரிடம் நாம் அன்பு கொண்டு விட்டால், அவரைப் பற்றிய எவ்வளவு மிகைப் படுத்தப்பட்ட புகழுரைகளையும் எளிதில் நம்புவதற்கு ஆயத்தமாகி விடுகிறோம் அல்லவா?

சுந்தர சோழர் நோய்வாய்ப்பட்டு நடமாடவும் சக்தியில்லாமல் போன

காலத்திலிருந்து, அரசுரிமை சம்பந்தமான குழப்பங்கள் சோழ நாட்டில் ஏற்படக் கூடுமோ என்று மக்கள் கவலைப்பட்டு வந்தார்கள். பழுவேட்டரையர், சம்புவரையர் முதலிய குறுநில மன்னர்களும், பெருந் தரத்து அதிகாரிகளும் சுந்தர சோழரின் புதல்வர்களுக்கு விரோதமாகக் கண்டராதித்தருடைய மகனுக்குப் பட்டம் கட்டச் சதி செய்கிறார்கள் என்னும் வதந்தியும் பரவியிருந்தது.''

கண்டராதித்தருடைய குமாரன் மதுராந்தகனுக்கு விரோதமாகச் சொல்லக் கூடியது எதுவும் மக்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் மதுராந்தகன் மக்களிடையில் வந்து கலந்து பழகியதுமில்லை. தந்தையைப் போல் உலக வாழ்க்கையில் வெறுப்புற்றுச் சிவ பக்தியில் ஆழ்ந்திருக்கிறான் என்பது மட்டும் தெரிந்திருந்தது. விஜயாலய சோழர் காலத்திலிருந்து சோழ ராஜ்யம் விரிந்து பரந்து வந்ததையும், வர்த்தகம் செழித்து மக்களின் வாழ்க்கை உயர்ந்து வந்ததையும், சோழ சைன்யங்கள் வெற்றி கொண்ட நாடுகளிலிருந்து பலவிதச் செல்வங்கள் சோழ நாட்டில் வந்து குவிந்து கொண்டிருந்ததையும் பார்த்துக் களித்துப் பெருமிதம் அடைந்திருந்த மக்கள், சோழப் பேரரசு மேலும்



மேலும் பல்கிப் பரவித் தழைக்க வேண்டுமென்று விரும்பினார்கள். சிவ பக்தியில் முழுக்க முழுக்க ஈடுபட்ட மதுராந்தகர் சிங்காதனம் ஏறினால், சோழ ராஜ்யத்தின் முன்னேற்றம் தொடர்ந்து நடைபெற முடியுமா என்று ஐயுற்றார்கள். அது மட்டுமன்றி, மது ராந்தகர் பட்டத்துக்கு வந்தால் சிற் றரசர்கள் வைத்ததே சட்டமாயிருக்கும் என்று மக்கள் அஞ்சினார்கள்.

ஆதித்த கரிகாலரைப் பற்றி வீராதி வீரர் என்ற பெருமதிப்பு மக்களுக்கு இருந்தாலும் அவர் சிங்காதனம் ஏறுவது பற்றியும் அவ்வளவாக உற் சாகம் கொள்ள இடமில்லாமலிருந்தது. ஆதித்த கரிகாலரிடம் மக்களை வசீகரிக்கும் இனிய சுபாவம் இல்லை; எல்லாருடனும் அவர் சரளமாகக் கலந்து பழகுவதில்லை. இதையன்றி, கரிகாலரைப் பற்றி மர்மமான பல வதந்திகள் உலாவி வந்தன. அவர் ஏதோ பெரிய குற்றம் செய்து விட்டார் என்றும், அவருடைய மனச்சாட்சியே அதற்காக அவரை வருத்திக் கொண் டிருக்கிறதென்றும், அதனாலே தந்தை சுந்தர சோழரின் அபிமானத்தை இழந்து விட்டார் என்றும் வதந்திகள் பரவியிருந்தன. இன்னும் பலவிதமான கற்பனைக் கதைகளும் கட்டிவிடப் பட்டிருந்தன. ஆகையால் அவர் அகால மரணமடைந்தபோது ஒரு மகா வீரனுக் குரிய மரியாதையை மக்கள் செலுத் தினாலும் அதிகமாக துக்கப்பட்டுக் கொண்டிருக்கவில்லை. வால் நட் சத்திரத்தின் பேரில் பழியைப் போட்டு விட்டு ஒருவாறு மனத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டார்கள்.

பெரிய பழுவேட்டரையரின் மரணமும், அது நேர்ந்த விதமும் மக்களுடைய உள்ளத் தில் அவர் பேரில் புதியதொரு அபி மானத்தையும் மரியாதையையும் உண்டாக்கியிருந்தது. அந்த வீரக் கிழவர் முதுமைப் பிராயத்தில் மணந்து கொண்ட மாயமோகினி உண்மையில் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளைச் சேர்ந்தவள் என்றும், அவளுடைய தூண்டுதலினாலேதான் பெரிய பழு வேட்டரையரின் மனம் கெட்டுப் போயிருந்ததென்றும், ஆதித்த கரி காலரின் அகால மரணத்துக்குப் பாண் டிய நாட்டு ஆபத்துதவிகளே காரணம் என்றும், உண்மையை அறிந்து கொண் டதும், பெரிய பழுவேட்டரையர் செய்த குற்றத்துக்குப் பிராயச் சித்த மாகத் தம்மைத் தாமே மாய்த்துக் கொண்டார் என்றும் வதந்திகள் பரவி விட்ட பிறகு, ஜனங்கள் பெரிய பழு வேட்டரையரைக் குறித்து, "ஐயோ! பாவம்!" என்று அனுதாபப்பட்டார்கள். அவர் இறப்பதற்கு முன்னால், "மதுராந் தகருக்குப் பட்டம் கட்டும் எண்ணத்தை விட்டு விடுங்கள். பொன்னியின் செல் வருக்கே முடி சூட்டுங்கள்!" என்று மற்ற குறுநில மன்னர்களுக்குக் கட்டளை யிட்டு விட்டுச் சென்றார் என்பதும் அவரிடம் மக்களின் மரியாதையை அதிகப்படுத்தியது. மக்களின் மனத்தில் உள்ள விருப்பம் நிறைவேறுவதற்கு ஒரு பெரிய தடங்கலை நிவர்த்தி செய்து விட்டல்லவா அந்த மாபெரும் வீரக் கிழவர் உயிரை நீத்தார்? அவருடைய நினைவு வாழ்க! அவருடைய குலம் வாழ்க! - இவ்வாறு ஜனங்கள் நன்றி உணர்ச்சியுடன் அவரைப் பற்றிப் புகழ்ந்து பேசினார்கள்.

மதுராந்தகத் தேவர் விஷயத்தில் ஆள் மாறாட்டம் நடந்திருக்கிறது என் னும் விவரம் பொதுமக்களில் யாருக் குமே தெரிந்திருக்கவில்லை. அரச குடும் பத்தினரையும், அவர்களுடன் நெருங் கிய தொடர்பு கொண்டவர்களையுந் தவிர வேறு யாருக்கும் அந்தச் செய்தி தெரியாது. பழைய மதுராந்தகர் பெரும் பாலும் அரண்மனைக்குள்ளேயே பொழுது கழித்தார். மிக அபூர்வ மாகவே வெளிப் புறப்பட்டார். அந்தச் சந்தர்ப்பங்களிலும் அவர் பொதுமக் களுடன் கலந்து பழகுவதில்லை. அவருக்கு முடிசூட்டு பேச்சு நடந்து கொண்டிருந்தபோது மூடுபல்லக்கில் வைத்து அவரை அழைத்துக் கொண்டு போவது வழக்கமாயிருந்தது. அவரு

டைய அங்க அடையாளங்களைக் கூர்ந்து கவனிக்கப் பொது ஜனங்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. ஆகையால் பழைய மதுராந்தகர் போய், புதிய மதுராந்தகர் வந்துள்ள விவரமே மிகப் பெரும்பாலான மக்களுக்குத் தெரியாமலிருந்தது.

ஆதலின் திருவையாற்றில் நடந்த திருவாதிரைத் திருவிழாவில் புதிய மதுராந்தகரைப் பார்த்தவர்கள் எவரும் ஆள் வேற்றுமை எதுவும் இருப்பதாக அறியவில்லை. அவர் மனைவி பூங்குழலி மட்டும் சிலருடைய கவனத்தைக் கவர்ந்தாள். அந்தப் பெண் 'சின்னப் பழுவேட்டரையருடைய மகள்' என்று சிலர் கூறியதை மற்றும் சிலர் மறுத்துரைத்தார்கள். கடலில் படகு செலுத்தி வந்த ஓடக்காரப் பெண் இவள் என்றும், மதுராந்தகர் சமீபத்தில் இவளை மணந்துகொண்டார் என்றும் சொன்னார்கள்.

அரசு குடும்பத்தினரும் குறுநில மன்னர்களும் பலதார மணம் செய்துகொள்வது அந்நாளில் சாதாரணமாக இருந்தபடியால் யாரும் அதைப் பற்றி வியப்பு அடையவில்லை. சிற்றரசர்கள் பலர் தூண்டியும் மதுராந்தகத் தேவர் தமக்குப் பட்டம் வேண்டாம் என்று சொல்லி விட்டார் என்னும் வதந்தி மக்களுக்குப் பொதுவாகவே அவரிடம் மரியாதையை உண்டு பண்ணியிருந்தது. சிவபக்தியில் திளைத்துப் பரவச நிலையை அடைந்திருந்த அவருடைய தோற்றமும் அந்த மரியாதையை வளர்த்தது. "ஓடக்காரப் பெண்ணாகிய பூங்குழலியை முன்னிட்டே மதுராந்தகர் சோழ சிங்காதனத்தை விரும்பவில்லை" என்ற பேச்க் இன்னும் பலருடைய அபிமானத்தை அவர் கவர்ந்து கொள்ளக் காரணமாயிருந்தது. பொன்னியின் செல்வருக்குப் பட்டாபிஷேகம் நடந்ததும் மதுராந்தகத் தேவருக்கு ஏதேனும் பெரிய பதவி அளிப்பார் என்றும் பேசிக்கொண்டார்கள்.

முடிசூட்டு விழாவுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னாலிருந்து சோழ நாட்டின் நாலா திசைகளிலிருந்தும் ஜனங்கள் தஞ்சையை நோக்கி வரத் தொடங்கி விட்டார்கள். தஞ்சைக் கோட்டைக்கு வெளியே ஒரே ஜன சமுத்திரமாகக் காட்சி அளித்தது. கோட்டையின் வாசற் கதவுகள் திறந்து விடப்பட்டன. கோட்டைக்குள் போவதற்கும் வெளியே வருவதற்கும் முன்னம் இருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

முடி சூட்டு நாளைத் தள்ளி வைத்துக்கொண்டால் சமாளிக்க முடியாத கூட்டம் சேர்ந்து விடும் என்றுதான் தை பிறந்தவுடனே நாள் குறிப்பிட்டிருந்தார்கள். இன்னும் ஜனங்களுடைய சௌரியத்துக்காக வேறு பல ஏற்பாடுகளும் செய்திருந்தார்கள்.

கொடும்பாளூர் வேளார் தம்முடன் அழைத்துக்கொண்டு வந்திருந்த மாபெரும் தென் திசைப் படையில் மிகப் பெரிய பகுதியைப் பொன்னியின் செல்வர் கட்டளையின் பேரில் திருப்பி அனுப்பி விட்டார். தம்முடன் ஆயிரம் வீரர்களை மட்டுமே வைத்துக்கொண்டிருந்தார். அவ்விதமே பழுவேட்டரையர் கட்சியைச் சேர்ந்த சிற்றரசர்கள் குடந்தைக்கு அருகில் கொண்டு வந்து நிறுத்தியிருந்த வீரர்களும் திருப்பி அவரவர்களுடைய இடத்துக்கு அனுப்பப்பட்டார்கள்.

சின்னப் பழுவேட்டரையர் கோட்டைப் பாதுகாப்புக்காக வழக்கமாக வைத்திருந்த வீரர்கள் மட்டுமே இப்பொழுது இருந்தார்கள்.

பழுவூர் வீரர்களும் கொடும்பாளூர் வீரர்களும் வேளக்காரப் படை வீரர்களும் தங்களுடைய பகை மாற்சரியங்களையெல்லாம் மறந்து ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொள்வதும் கேலி செய்வதும் கூத்தாடிக் குதூகலிப்பதுமாக இருந்தார்கள். முடிசூட்டு விழாவைப் பார்ப்பதற்குத் திரள் திரளாக வந்து குவிந்தவண்ணமிருந்த மக்களுக்கு அவர்கள் கூடிய வரையில் உதவியாக இருந்தார்கள். சில சமயம் வேடிக்கைக்காக வான சேஷ்டைகளில் அவ்வீரர்கள் ஈடுபட்ட போதிலும் ஜனங்கள் அவற்றைப் பொருட்படுத்தவில்லை.





தஞ்சைக் கோட்டைக்கு உட்புறமும் புற நகரமும் தேவேந்திரனின் அமராவதி நகரத்தைப் போல் அலங்கரிக்கப்பட்டு விளங்கின. நகரில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் வெளியூரிலிருந்து விருந்தாளிகள் வந்து குவிந்த வண்ணமிருந்தார்கள்.

கடைசியாக, மகுடாபிஷேகத்துக்குக் குறிப்பிட்ட தினத்தன்று சூரியன் உதியமாயிற்று. உதிக்கும்போதே பனித்திரளைப் போக்கிக் கொண்டு பொற் கிரணங்களைப் பரப்பிக் கொண்டு தேஜோ மயமாக உதித்த சூரியனைப் பார்த்த மாந்தர் அனைவரும், ''இன்றைக்குப் பொன்னியின் செல்வருக்கு மகுடாபிஷேகம் அல்லவா? ஆகையால் சூரியனும் பொன்னொளி வீசித் திகழ்கிறான்!'' என்று கூறி மகிழ்ந்தார்கள்.

மகுடாபிஷேகத்துக்குரிய வேளை வருவதற்கு வெகு நேரம் முன்னதாகவே, பட்டாபிஷேக மண்டபத்தின் வாசலில் ஜனத்திரள் சேர ஆரம்பித்து விட்டது. மண்டபத்துக்குள்ளே பொது மக்கள் அனைவரும் இடம் பெறுதல் இயலாத காரியம் அல்லவா? முடிசூட்டு வைபவம் நடந்த பிறகு, பொன்


னியின் செல்வர் மண்டபத்திலிருந்து வெளியில் வந்து பட்டத்து யானை மீதேறி வீதி வலம் தொடங்கும் போதுதான் மக்கள் அனைவரும் அவரைக் கண்டு மகிழ முடியும். அதற்காக நேரங்கழித்து வர முடியுமா, என்ன? முன்னதாக வந்தால், பொன்னியின் செல்வர் பொன்மகுடம் சூடிக் கொண்டு வெளி வரும்போதே அவரைப் பார்க்கலாமே!

மகுடாபிஷேக மண்டபத்துக்குள் அரண்மனையைச் சேர்ந்தவர்கள் வருவதற்குத் தனியான பின்புறப் பாதை இருந்தது. அதன் வழியாகச் சுந்தர சோழரும் வானமா தேவியும் அவர்களைத் தொடர்ந்து செம்பியன் மாதேவி, மதுராந்தகர், பூங்குழலி, குந்தவைப்பிராட்டி, வானதி ஆகியவர்களும் வந்து சேர்ந்தார்கள். முதன் மந்திரி அநிருத்தர், சின்னப் பழுவேட்டரையர், சம்புவரையர், சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி, மலையமான் மிலாடுடையார், மற்றும் சிற்றரசர்கள், சாமந்தர்கள், வர்த்தக கணத் தலைவர்கள், கோட்டத் தலைவர்கள், பெருந்தர அதிகாரிகள், சிவாச்சாரியார்கள், விண்ணகரபட்டர்கள், தமிழ்ப் பெரும் புலவர்கள் ஆகியோர் வாசலில் கூடியிருந்த பெரும் ஜனக்கூட்டத்தில் புகுந்து முண்டியடித்துக் கொண்டு உள்ளே வந்து சேர்ந்தார்கள். கடைசியில், பொன்னியின் செல்வரும் வல்லவரையன் வந்தியத்தேவனும் தாமரை மலர் போல் அமைந்த திறந்த தங்க ரதத்தில் அமர்ந்து மகுடாபிஷேக மண்டபத்தின் வாசலை அடைந்தபோது, பூரண சந்திரனைக் கண்ட அலைகடலைப் போல் அந்த ஜன சமுத்திரம் ஜேகோஷம் முழக்கி ஆரவாரம் செய்தது.

மகுடாபிஷேகத்துக்குரிய வைதிகச் சடங்குகள் எல்லாம் நடந்தேறின. சோழ குலத்து மன்னர்கள் வழிவழியாகப் பட்டாபிஷேக தினத்தன்று சிரஸில் சூட்டிக் கொள்ளும் மணி மகுடம், மார்பில் அணியும் நவரத்ன மாலை, இடையில் தரிக்கும் உடைவாள், கையில் ஏந்தும் செங்கோல் ஆகியவற்றை ஒரு பெரிய சித்திரத் தாம்பாளத்தில் வைத்துச் சபையில் பெரியவர்கள் முன்னாலெல்லாம் கொண்டு போனார்கள். அவர்கள் அத் தாம்பாளத்தைத் தொட்டு ஆசி கூறினார்கள். பின்னர், ஆஸ்தானப் புலவராகிய நல்லன் சாத்தனார் எழுந்து நின்றார். அவருக்குப் பின்னால், கையில் யாழ் பிடித்த மங்கை ஒருத்தி நின்று, யாழின் நரம்புகளை மீட்டி இனிய சுருதியை எழுப்பினாள்.

புலவர் நல்லன் சாத்தனார் சோழ குலத்தின் தொல் பெருமையையும், அக்குலத்தில் பரம்பரையாக வந்து புகழ் பெற்ற வீர மன்னர்களின் வரலாற்றையும் இசையுடன் கலந்த சந்தப் பாடலாகப் பாடலுற்றார். அந்தப் பாடல் மிக நீண்டதாகவும் இந்தக் காலத்தவர் எளிதில் அறிந்து கொள்ள முடியாத அரிய நடையிலும் அமைந்திருந்தபடியால், அதன் சாராம்சத்தை மட்டும் சுருக்கமாக இங்கே குறிப்பிடுகிறோம்:-

"சூரிய வம்சத்திலே தோன்றிய மனுமாந்தாவின் குலத்தில் சிபி என்னும் மன்னர் மன்னன் இருந்தான். அவன் ஒரு புறாவுக்குத் தான் அளித்த வாக்கை நிறைவேற்றி அதன் உயிரைக் காப்பதற்காகத் தன் உடலின் சதையை அறுத்துக் கொடுத்தான். அத்தகைய சிபியின் வம்சத்தில் அவனுக்குப் பின் தோன்றியவர்கள் 'செம்பியன்' என்று குலப் பெயர் சூட்டிக் கொண்டு பெருமையடைந்தார்கள். செம்பியர் குலத்தில் இராஜகேசரி என்று ஒரு பேரரசன் தோன்றினான். அவன் மகன் பரகேசரி என்று புகழ் பெற்றான். இவர்களுக்குப் பின் தோன்றிய மன்னர்கள் கோ இராஜ கேசரி என்றும், கோப் பரகேசரி என்றும் மாற்றி மாற்றிப் பட்டம் சூட்டிக்கொண்டு வந்தார்கள். பசுவுக்கு நீதி வழங்குவதற்குத் தன் அருமைப் புதல்வனைப் பலி கொடுத்த சோழ மன்னன் மனு நீதிச் சோழன் என்று பெயர் பெற்றான். இவனுக்குப் பிற்காலத்தில் பூம்புகார் நகரில் கரிகால் பெருவளத்





தான் என்னும் மன்னன்
மூவுலகங்களிலும் தன்
புகழைப் பரப்பி விளங்
கினான். அவன் சோழ நாட்டுப்
பெரும் படையுடன் வடக்கே
இமயமலை வரையில் படை
யெடுத்துச் சென்று, அம் மலை
யின் பனி மூடிய சிகரத்தில்
சோழ குலத்துப் புலி இலச்சினை
யைப் பொறித்தான். இவன் வழியில்
நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, பெருங்
கிள்ளி, குராப்பள்ளி துஞ்சிய கிள்ளி
வளவன், குளமுற்றத்துத் துஞ்சிய
கிள்ளிவளவன், சிவபெரு
மானுடைய பரம பக்த
னாகிய கோப்பெருஞ்
சோழன் ஆகிய
வர்கள் இப்



புராதன குலத்துக்குப் பெயரும் புகழும் அளித்துச் சிவபதம் அடைந்தார்கள்.

உலகத்துக்கெல்லாம் ஒளி அளிக்கும் சூரிய பகவானைக்கூட மாரி காலத்து மேகங்கள் மறைத்து விடுவது போல், சூரியனுடைய பரம்பரையில் வந்த சோழர் குலத்தைச் சிலகாலம் பல்லவ-பாண்டியப் பகை மேகங்கள் மறைத்திருந்தன. அந்த மேகங்களைச் சிதற அடிக்கும் வஜ்ராயுதம் ஏந்திய தேவேந்திரனுக்கு

இணையாக விஜயாலயச் சோழர் தோன்றினார். அந்தச் சோழர் குலப் புலியைக் கண்டதும் பெரும்பிடுகு முத்தரையன் என்னும் எலி பீதி கொண்டு மாண்டு மறைந்தது. பின்னர் அந்த மகா வீரர் தஞ்சை நகரைக் கைப்பற்றித் துர்க்கா பரமேசுவரிக்குக் கோயில் எடுப்பித்தார். பல்லவர்களும் பாண்டியர்களும் மற்றும் பல அரசர்களும் விஜயாலயச் சோழரின் நட்பைக் கோரி அனுப்பிய தூதுவர்கள் சதாகாலமும் அந்த மன்னரின் அரண்மனை முற்றத்தில் காத்திருந்தார்கள். அவ்விதம் உதவி கோரி வந்த அரசர்களுக்கு அபயம் அளித்து உதவி செய்யும் பொருட்டு விஜயாலய சோழர் பற்பல போர்க்களங்களுக்குச் சென்று போர் புரிந்து தமது திருமேனியில் தொண்ணூற்றாறு புண்களைப் பெற்றவரானார். விஜயலாய சோழரின் திருக்குமாரர் ஆதித்த சோழர் மாற்றார்களுடைய சேனா மேகங்களைச் சிதறி ஓடச் செய்யும் மற்றொரு சுதிரவனாகவே விளங்கினார். திருப்புறம்பயம் போர்க்களத்தில் பல்லவன் அபராஜிதன் பாண்டியனால் முறியடிக்கப்படும் தறுவாயில் இருந்தபோது, ஆதித்த சோழர் முயற் கூட்டத்தில் புலி புகுவதைப் போல் புகுந்து பாண்டிய சைன்யத்தைச் சின்னாபின்னம் செய்தார். பின்னர், தாம் செய்த உதவியை மதிக்காமல் சிநேகத் துரோகம் செய்த பல்லவனுக்குப் புத்தி புகட்டும் பொருட்டுத் தொண்டை நாட்டுக்குப் படையெடுத்துச் சென்று அபராஜிதனை அவன் இருந்த யானைமேல் பாய்ந்து வீர சொர்க்கத்துக்கு அனுப்பினார். தமது முன்னோனாகிய கோச் செங்கணானைப் பின்பற்றி, காவேரி நதி உற்பத்தியாகும் ஸைய பர்வதத்திலிருந்து பூம்புகார் நகரம் வரையில் எண்பத்திரண்டு சிவாலயங்களை எடுப்பித்தார். ஆதித்த சோழரின் புதல்வராகிய பராந்தக சோழர் பிறக்கும்போதே தம்முடைய இரு தோள்களிலும் வீரலக்ஷ்மியையும் விஜயலக்ஷ்மியையும் சுமந்துகொண்டு பிறந்தார். வெள்ளூரில் பாண்டியனைப் புறங்கண்ட அம்மன்னர், மதுரையும் ஈழமும் கொண்டதுடன், சேர நாட்டு வேழப்படைக்கு ஒரு சிங்கமாக விளங்கினார். வடக்கே துங்கபத்திரை நதிக்கு அப்பால் இருந்த சளுக்கர்களும் வேங்கி மண்டலத்தாரும் பராந்தக சோழருடைய பெயரைக் கேட்டுச் சிம்ம சொப்பனம் கண்டவர்கள் போல் நடு நடுங்கினார்கள். அவருடைய புகழைக் கேட்டுப் பொறுக்காமல் பொறாமை கொண்ட இரட்டை மண்டலத்துக் கன்னர தேவன் ஏழு சமுத்திரமும் சேர்ந்தது போன்ற மாபெரும் படையைத் திரட்டிக்கொண்டு பராந்தக சக்கரவர்த்தியைப் போரில் புறங்காண வந்தான். பராந்தகரின் மூத்த புதல்வராகிய இராஜாதித்த தேவர் குருக்ஷேத்திரத்தை யொத்திருந்த தக்கோலப் போர்க் களத்தில் கன்னர தேவனையும் அவனுடைய மாபெருங் கடல் போன்ற சேனையையும் முறியடித்துச் சின்னாபின்னம் செய்த பிறகு ஆனை மேல் துஞ்சி வீர சொர்க்கம் எய்தினார். பராந்தக சோழர் தில்லைச் சிதம்பரத்து நடராஜப் பெருமான் ஆலயத்தில் பொன் மண்டபம் கட்டிய பின்னர் அப்பெருமானுடைய இணையடிகளை அடைந்தார்! அவருடைய புதல்வர் சிவஞான கண்டராதித்த தேவர் சிவாலயப் பணிகள் செய்வதில் ஈடுபட்டிருந்து சிவபதத்தை அடைந்தார். அவருடைய காலத்தில் தொண்டை மண்டலத்தைப் பகைவர்களுடைய ஆதிக்கத்திலிருந்து விடுதலை செய்து சிட்புலி நாடு வரையில் புலிக்கொடியை நிலை நாட்டியவரான அரிஞ்சய தேவரும் தமது தமையனைப் பிரிந்து அதிக காலம் இருக்க மனமின்றி விண்ணுலகம் எய்தினார். அவருடைய திருப் புதல்வர் சுந்தர சோழ சக்கரவர்த்தி பின்னர் சோழ சிங்காதனம் ஏறினார். தான் ஒளிந்திருந்த பொந்திலிருந்து வெளியில் தலை காட்டிய பாண்டிய நரியின் மீது பாய்ந்து அதை மீண்டும் பொந்துக்

குள் ஒளிந்து கொள்ளும்படி செய்தார்! சுந்தர சோழ சக்கரவர்த்தியின் வெண் கொற்றக் குடை நிழலில் மூன்று உலகமும் சிறிதும் கவலையின்றி நிர்ப்பயமாக வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வீரப் புகழ் பெற்று விளங்கும் குலத்தில் வந்த பொன்னியின் செல்வரை எம்மொழிகளால் யாம் போற்ற முடியும்? அவருடைய புகழைச் சொல்வதற்குக் கலை மகளே பிறந்து வந்தால் ஒருவேளை சாத்தியமாகக் கூடும். எம்மைப் போன்ற மிகச் சாதாரண புலவர்களால் இயம்பத் தரமன்று....''

இவ்விதம் நல்லன் சாத்தனார் சோழர் குலப் பெருமையைப் பாடி முடித்தார். அவருக்குப் பிறகு வடமொழிப் புலவர்களும் புத்த பிக்ஷுக்களும் சிவாச்சாரியார்களும் வைஷ்ணவ ஆச்சாரியர்களும் வாழ்த்துக் கூறுவதற்காகக் காத்திருந்தார்கள். இவர்களை எப்படிச் சுருக்கமாக முடிக்கச் செய்வது என்பது பட்டாபிஷேக முகூர்த்தம் வைத்திருந்தவர்களுக்குப் பெரும் கவலையாகப் போய்விட்டது. அப்படிக் கவலைப் பட்டவர்களில் சின்னப் பழுவேட்டரையரும் ஒருவர். அவர் தமது கரத்தினால் சோழர் குலத்துப் புராதன கிரீடத்தை எடுத்துப் பொன்னியின் செல்வரின் சிரஸில் சூடுவதற்கு ஆயத்தமாயிருந்தார். புலவர்களையும் பண்டிதர்களையும் எப்படி விரைவில் பாடி முடிக்கச் செய்வது என்று எண்ணிச் சுற்று முற்றும் பார்த்த சின்னப் பழுவேட்டரையரின் சமீபத்தில் புதிய ஆள் ஒருவன் திடுதிப்பென்று வந்தான். தெருவீதியில் மொய்த்து நின்று கொண்டிருந்த அவ்வளவு ஜனக்கூட்டத்தையும் தாண்டி அவன் எப்படி ஆஸ்தான மண்டபத்துக்குள் வந்தான் என்பது பலருக்கும் வியப்பு அளித்தது. ஆனால் வந்தியத்தேவனுக்கு அது வியப்பு அளிக்கவில்லை. மாறு வேடம் பூண்டிருந்தவன் ஆழ்வார்க்கடியான் தான் என்பதை அறிந்திருந்த வந்தியத்தேவன் பொன்னியின் செல்வரை நோக்கினான். அவரும் அந்த சமிக்ஞையைத் தெரிந்துகொண்டவராகத் தோன்றினார்.

சின்னப் பழுவேட்டரையரின் காதில் ஆழ்வார்க்கடியான் என்ன இரகசியச் செய்தியைச் சொன்னானோ, தெரியாது. உடனே அவருடைய முகத்தில் பெருங் கவலையும் கலக்கமும் குடிகொண்டன. ஒருகணம் தயங்கி நின்றுவிட்டு அவனை அழைத்துக் கொண்டு அச்சபா மண்டபத்தில் அதிக கூட்டமில்லாத ஒரு பக்கத்துக்குச் சென்றார்.

இதைக் கவனித்தார் பொன்னியின் செல்வர். நல்லன் சாத்தான் சோழர் குலப் பெருமையைக் கூறி வந்த போதெல்லாம் கை கூப்பி நின்று வணக்கத்துடன் கேட்டுக் கொண்டு வந்தார். இப்போது அந்தப் புலவரை நோக்கி, ''ஐயா! புலவரே! இத்தனை நேரமும் தாங்கள் கூறி வந்த புகழெல்லாம் என் முன்னோரைப் பற்றியவை அல்லவா? இந்தப் புராதனப் பெருமைவாய்ந்த சிங்காதனத்தில் அமர்ந்து மணி மகுடம் சூட்டிக் கொள்வதற்கு தகுதியுள்ளவனாக நான் என்ன காரியம் செய்திருக்கிறேன்? அதைப் பற்றி கூறுவதற்குக் கலைமகள் இங்கே இப்போது பிரசந்நமாவது சாத்தியமில்லையாதலால் தங்களால் இயன்றவரையில் சற்று எடுத்து இயம்பலாமே?'' என்றார்.

புலவர் திகைத்து நின்றதைப் பார்த்த பொன்னியின் செல்வர், ''ஐயா! தாங்கள் திகைத்து நிற்பது இயல்பே. தங்கள் பேரில் குற்றம் இல்லை. அவ்வாறு என்னுடைய புகழைப் பாட்டில் அமைத்துப் பாடும்படியாக நான் இன்னமும் ஒரு காரியமும் செய்யவில்லை. இன்றுதான் தொடங்கப் போகிறேன்!'' என்றார்.

(தொடரும்)

அட்டை வண்ணப்படம்: பத்மவாசன்



• பொன்னீலன்

எழுத்தாளர் பொன்னீலனின் மணிவிழாவையொட்டி, 'மானுடப் பறவை' என்ற நூலை வெளியிட்டிருக்கிறது திணை வெளியீட்டகம். நாவல்கள் பற்றிய விமர்சனங்கள், புகைப்படங்கள் உட்பட பொன்னீலன், அவர் படைப்புகள் குறித்து நாற்பத்தைந்து கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இப்புத்தகத்தை இரா. இளங் கோவன், பெ. கணபதிசுப்பிரமணியன், நா. ராமச்சந்தின், சி. சொக்கலிங்கம் ஆகிய நால்வர் பதிப்பித்துள்ளனர்.

தமது முதல் கதை குறித்து இப்புத்தகத்தில் பொன்னீலன் எழுதியிருக்கும் கட்டுரையிலிருந்து...

கோடைக் கால விடுமுறை என்றால் எங்களுக்கு ஏக சந்தோசம். புட்டு, ஆப்பம் என்று எதையாவது சாப்பிட்டுவிட்டு காலை ஒன்பது மணிக்கெல்லாம் கிளம்பிடுவோம். கிராமப்புறத்தைப் பணத்தாசை ஆக்கிரமிக்காத இனிய காலம் அது. எந்தத் தோட்டத்திலும் புகுந்து எதை வேண்டுமானாலும் பறித்துச் சாப்பிடலாம். வீட்டிற்கு மட்டும் கொண்டு போகக்கூடாது. அது திருட்டு. யார் தோட்டம் என்றில்லை. மாமரங்களில் ஏறிக் கிளைகளை உலுப்புவோம். தொத்து புத்தென்று மாம்பழம் உதிரும். தோல் கிழிந்து விடாமல் பழங்களைப் பக்குவமாகக் கசக்குவோம். பல்லால முனையில ஓட்ட போட்டு உறிஞ்சிக் குடிச்சா தேனாமிர்தம்தான்!

முந்திரித் தோட்டங்களிலே போய் முந்திரிக் கொட்டைகளைப் பொறுக்கி, குவிச்சு, அதன் மேலே சருகப் போட்டுத் தீ வளர்த்து, கட்டு உடைச்சு முறுமுறுப்பான பருப்பைச் சாப்பிடுறது தனி ருசி. குலைகுலையாய் இளம் நொங்கை அறுத்து, சீவிச் சீவிக் குடிப்போம். எல்லாம் முடிச்சி மத்தியான வேளையில குளத்துக்குப் போவோம். சூரிய ஒளியில தண்ணி தகதகன்னு மின்னும். உள்ள பாய்ஞ்சு தொட்டு விளையாடத் தொடங்கினால் நேரம் இருட்டினாலும் கரையேற மனம் வராது. குளப்பரப்பு பூராவும் தீபம் ஏற்றி மிதக்கவிட்ட மாதிரி தாமரைப் பூ விரிஞ்சி கிடக்கும். காற்றில் பூ மணம், குளத்துத் தண்ணியில அதனோட தேன் மணம், உடம்பு பூராவும் கமகமன்னு வாசம் அடிக்கும்.

நான் பி.எஸ்ஸி., இரண்டாம் ஆண்டு படிச்சிக்கிட்டு இருந்த சமயம். தேர்வு முடிஞ்ச மறுநாள் குளத்துக்கு ஒரு பெரும் படையே கிளம்பிச்சு. எங்க வீட்டுக்கு விருந்தாளியா வந்திருந்த என் மாமன் மகள் ஒருத்தியும் எங்களோடு குளிக்கக் கிளம்பினா. வழக்கம்போல வயித்த நிரப்பிக்கிட்டு, உச்சி வேளையில குளத்துல பாய்ஞ்சோம். தொட்டு விளையாட்டுல நாங்க ஒவ்வொருத்தரும் எங்க சூரத்தனத்த எம் மாமன் பொண்ணுக்கு நிரூபிக்க முண்டி அடிச்சிக்கிட்டு இருந்த நேரம். தண்ணிக்குப் பழக்கமில்லாத அவ முட்டளவு ஆழத்துல பட்டுப் பாவாடை நனைய நின்னுக்கிட்டு கத்தினாள்.

"அத்தான், எனக்கு ஒரு பூ பறிச்சிக் குடு."

காற்றில் ஏறி விண்ணையும் சாடும் இளம் பருவம். நான் முந்தி நீ முந்தி என்று நாங்கள் போட்டி போட்டுக் கொண்டு பூப் பறித்தோம். ஒண்ணுக்கு ஏழு பூவாப் பிடிங்கிக்கிட்டு முதல் ஆளா இவகிட்ட வந்தேன் நான். தூரத்தில் துணி துவைச்சுக்கிட்டிருந்த நடுத்தர வயது மனிதர்



# முதலில்

ஒருவர், கோவணக் குஞ்சம் காற்றில் மிதக்கக் கத்திக் கொண்டே ஓடி வந்தார்.

"யாரைக் கேட்டுப் பூப் பறிச்சே?"

"எங்க குளத்துல பூப் பறிக்

கிறதுக்கு நான் யாரைக் கேக்கணும் ஓய்?" பதிலுக்குக் கத்தினேன் நான்.

அந்த ஆள் என்னைவிட பலசாலி. முற்றி முறுக்கேறிப் போன பெரிய உடம்பு. என் மேலே பாய்ந்து, என் கையிலிருந்த பூக்களைத் திருகிப் பிடுங்கினார். என் தோழர்கள் துணைக்கு வராவிட்டால் என்னை அவர் உதைக்கக் கூடத் தயங்கியிருக்க மாட்டார். எங்கள் வேகத்தைப் பார்த்து மிரண்டு போய் சற்றுப் பின்வாங்கின அவர், நியாயம் பேசத் தொடங்கினார்.

"இந்தக் குளத்தில் பூப் பறிக்கிற உரிமையை அரசாங்கம் குத்தகைக்கி விட்டிருக்குப்பா. எங்க முதலாளிதான் குத்தகைக்கு எடுத்து, என்னைய காவலுக்கு வச்சிருக்காரு. இந்தப் பூவ வேணும்னா கொண்டு போங்க. இனிமே பூக்களைப் பறிக்காதீங்க" என்றார்.

மாமன் மகள் முன்னே அவமானப்பட்டுப் போன ஆத்திரம்



# பறித்த பூ

எனக்கு. பூக்களைக் குளத்திலேயே வீசிவிட்டு அப்படியே வீட்டுக்கு வந்துவிட்டேன். இரவு நடுச்சாமம் ஆகியும் எனக்கு ஆத்திரம் அடங்கவில்லை. நார்க்கட்டில்ல புரண்டு கொண்டே கிடந்தேன். வேறு வழியில்லாம எந்திரிச்சி உட்கார்ந்து, எனக்குத் தெரிஞ்ச பாணியில் அந்தச் சம்பவத்தை எழுதினேன். அப்போது இருந்த மன நிலையில் 'பூ பறித்தல்' என்ற சிறுகதையாக அது வடிவம் பெற்றது. அதுக்குப் பிறகுதான் என் மனம் அடங்கிச்சு.

நானும் உள்ளூர் இளைஞர்களும் நடத்திக்கிட்டிருந்த 'தமிழ்ச் சோலை' என்ற பத்திரிகையில மறுமாசம் அது வெளியாச்சு. நண்பர்கள் கேலி பண்ணினாங்க. ஆனாலும் எனக்கு நிறைவாய் இருந்தது.

இப்போ நினைச்சுப் பார்க்கிறேன். குளங்களைக் குத்தகைக்கி விடுகிறது மட்டுமல்ல; அநேகக் குளங்களை அரசாங்கமே மூடி, வீட்டு மனைகளா மாத்திடுச்சு. இன்னும் அம்பது வருஷம் போனா இந்த மாவட்டத்தில குளமே இல்லாமப் போயிடும் போல இருக்கு. தாமரைப் பூவும் அன்னப் பறவையைப் போல பூமியிலிருந்து மறைஞ்சிரும் போலத் தோணுது. கட்டடங்களுக்காகவும் ரோடுகளுக்காகவும் பெரிய பெரிய மலைகளையே உடைச்சு தடந் தெரியாம அழிச்சுக்கிட்டிருக்காங்க. நான் எழுதின மாதிரி இன்னும் ஒரு கதை எழுத, கொஞ்ச நாளுக்கு அப்பால இந்த மண்ணில ஏதாவது மிஞ்சி இருக்குமா?

**- ஏக்ஜி**

**விலை ரூ. 120.**

விற்பனை உரிமை:
**நாட்டார் வழக்காற்றியியல் ஆய்வு மையம். தூய சவேரியார் கல்லூரி, பாளையங் கோட்டை – 2**



## சப்பாத்தி மாடு!

எப்படியும் பிழைக்கலாம் இப்படியும் பிழைக்கலாம் என்பதை நான் கண்கூடாகப் பார்த்து ரசித்த காட்சி :

மும்பை கோரேகாவ் லக்ஷ்மி நாராயண மந்திர் வாயிலில் ஒரு பெண்மணி, ஒரு பசுமாடு, பெரிய புல்கட்டு சகிதம் உட்கார்ந்திருந்தாள். கோவிலுக்கு வரும் பக்தர்கள் அவளிடம் ஒன்றிரண்டு ரூபாய் கொடுத்து ஒரு பிடி புல் வாங்கிப் பசுவிற்குக் கொடுக்கிறார்கள். பக்தர்களுக்குப் புண்ணியம். இவளுக்கும் நல்ல சம்பாத்தியம். விழாக்காலங்களில் நல்ல வசூல். மாடும், புல்லும் இவளுடையது. சில சமயம் மாட்டை வாடகைக்கும் வாங்கி வருவதுண்டாம். இந்த ஊர் மாடு சப்பாத்தி விரும்பிச் சாப்பிடும் என்பது கூடுதல் விசேஷம்.

- லலிதா பிரபாகர், மும்பை



## காரில் கிரவுண்ட்!

பணக்காரர்களின் விளையாட்டு எனப்படும் 'கோல்ப்'பை அனைவரும் ஆட வர வேண்டும் என்பதற்காக, தன் காரின் மேல், 'மினி கோல்ப்' கிரவுண்டை உருவாக்கியிருக்கிறார் லண்டனைச் சேர்ந்த 'கோல்ப்' வீரர் ஒருவர். இதில், 'எப்படி ஆட வேண்டும்' என்பது உட்பட, ஆட்டம் பற்றி சிறுவர்களுக்கு இலவசப் பயிற்சியும் அளிக்கிறாராம்.

- பாரிஸ் பார்த்தசாரதி

## கோவிந்தா! கோவிந்தா!

பொதுவாக வங்கிகளில் கடைநிலை ஊழியராகச் சேர்வதற்கு உண்டான தகுதி "எட்டாங் கிளாஸ் பெயில்." வங்கிகளில் லெட்ஜர்கள் / பைல்களில் அது என்ன லெட்ஜர் / பைல் என்பதை ஆங்கிலத்தில் தான் குறிப்பிட்டிருப்பார்கள். ஒரு குறிப்பிட்டக் கிளையில் இருந்த கடைநிலை ஊழியருக்கு ஆங்கிலத்தில் எழுதியிருப்பது புரியவில்லை. அந்த ஊழியர் நிறைய ஹிந்தி சினிமாக்கள் பார்ப்பவர். ஆதலால் எல்லா பைல்கள், லெட்ஜர்களின் பின்புறத்திலும் சிறிய அளவில் ஹிந்தி சினிமா நட்சத்திரங்களின் படங்களை ஒட்டி வைத்து விட்டேன். இப்பொழுது யாராவது, "அந்த ஐஸ்வர்யாராய் பைலை எடுத்து வா, ஷாருக்கான் லெட்ஜரை எடுத்து வா" என்றால் அந்த க.நி.ஊ. மறு நிமிஷமே எடுத்து வந்து விடுவார்.

இந்த நிலையில் "வாராக் கடன்கள்" சம்பந்தமாக ஒரு புது ஃபைல் உருவானது. அதில் யார் படத்தை ஒட்டலாம் என்று யோசித்தேன். அந்த ஊழியரிடமே கேட்டேன். அந்த ஊழியர் சற்றும் தாமதிக்காமல் "கோவிந்தா" என்றார். யதார்த்தமாக அந்த ஊழியர் அவ்வாறு கூறினாலும் அந்த ஊழியர் கூறிய பதிலில் புதைந்திருந்த மற்றுமொரு உள் அர்த்தம் என்னைக் குபீரெனச் சிரிக்க வைத்தது.

- எங்கள் வங்கி சார்பில் நடந்த "டிரெயினிங் புரொக்ராம்" ஒன்றில் மேனேஜர் ஒருவர் கூறியது.


- வரதராஜன், சென்னை-33



# தேன் கூடு

## பிணத்திற்கும் தண்டனை!

பாகிஸ்தானில் வாழ்ந்த ஆப்கானிஸ்தானத்துக்காரர் ஒருவர் இறந்து போனார். தாம் இறந்தால் காபூலில் புதைக்கப்பட வேண்டும் என்று அவர் சொல்லியிருந்தார். எனவே, அவர் இறந்த பிறகு உடலைச் சவப் பெட்டியில் வைத்து அவருடைய குடும்பத்தார், ஆப்கானிஸ்தானத்துக்கு எடுத்துச் சென்றார்கள். அங்கே சென்றபின் சவ ஊர்வலம் போகும்பொழுது தாலிபான்காரர்கள் அதைத் தடுத்து நிறுத்தினர். அங்கு கடத்தல் குற்றங்கள் அதிகம் நடைபெறுவதால் சவப் பெட்டியைச் சோதிக்க விரும்புவதாகக் கூறினர். அப்பொழுது இறந்தவருக்கு முகத்தில் தாடி இல்லாதது அவர்கள் கண்ணில் பட்டது. பாகிஸ்தானிலும், ஆப்கானிஸ்தானத்திலும் தாடி வைத்திருக்க வேண்டியது கட்டாயம். தாடி இல்லாததைப் பார்த்துக் கோபமடைந்த அவர்கள் தனியாகக் கூடிப் பேசினர். ஏன் தாடி இல்லை என்று கேட்டுச் சரியான பதில் இல்லாததால் செத்த உடலுக்கு எண்பது கசையடியைத் தண்டனையாகக் கொடுத்தனராம்!



– இராஜு, நீலகிரி. (ஆதாரம் : யுனெஸ்கோ கூரியர்)




## சொகுசாக ஒரு க்யூ!

பெங்களூரில் உள்ள கோரமங்களாவில் ரயில்வே ரிசர்வேஷன் செய்யச் சென்ற எனக்கு இனிய அதிர்ச்சி. ரயில்வே ரிசர்வேஷன் அலுவலகம்தானா அது என்று கண்ணைக் கசக்கிக் கொண்டேன். க்யூவில் நிற்பவர்களுக்கு வரிசை, வரிசையாக பிளாஸ்டிக் நாற்காலிகள்! கீழே கயிற்றுக் கம்பளம். ஆங்காங்கே பூச்செடிகள். இதையெல்லாம் விட 'அட' என்று அதிசயிக்க வைத்த விஷயம்; அமர்ந்திருப்பவர்கள் நாலு, நாலு பேராக வரிசையில் எழுந்து கவுன்டர்களின் அருகே சென்று டிக்கட் வாங்கும்படிச் செய்திருக்கும் வசதி. பேச்சு, சத்தம், சண்டை, சச்சரவு எதுவும் இல்லை. வரிசை நகர நகர நாற்காலிகளில் மாறி மாறி எழுந்து அமர்வதும் மியூசிக்கல் சேர் போல் குஷியாகத்தான் இருக்கிறது. கவுண்டரை அடைத்துக் கொண்டு நிற்கும் நெரிசல் இல்லை என்பதால் டிக்கட் வழங்கும் ரயில்வே பணியாளர்களும் பதற்றமோ, பரபரப்போ இல்லாமல் நிம்மதியாக, அதே சமயம் சுறுசுறுப்பாகச் செயல்படுகிறார்கள். இந்தியர்களான நம்மாலும் இப்படிப்பட்ட சுயகட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க முடியும் என்பதே சந்தோஷமாக இருக்கிறது.

பெங்களூரில் வந்துவிட்ட வசதி சென்னை வந்து சேர்வது எப்போது?

-ஸுஜாதா விஜயராகவன், சென்னை-18

தேவாரம் இஸ் பேக் இன் பிஸினஸ்...! அதனால் ஆதென கீர்த்தனாரம்பத்துல வீ. விஜயராகவன் அனுப்பிச்ச கவிதைக்குத் திரும்பவும் மவுசு வந்திருக்கு...:

## வென்று தழைத்தது காடு!

அன்று
வெட்டுண்ட காடு
வெந்து கூழாகி
வந்தது காகிதம்–
கரைத்துக் குடித்துக்
கிடைத்த படிப்பும், பட்டமும்–
நேரிட்ட பணியில்
நிரப்பி நகர்த்திய கோப்பும்–
எழுந்த எரிச்சலில்
எழுதி நீட்டிய
கால் கடிதாசியும்–
வாய்ப்பாய் வந்த அரசியல்
வேட்பு மனுவும்–
கூப்பிய கையைத் தூக்கி விடப்
பதிவான வாக்கும்–
நீட்டிய கை நீட்டியபடி
ஊட்டி வளர்த்த ஊழலில்
சுட்டிய கரன்ஸி நோட்டும்–
பகல் கொள்ளைகளைப்
பக்கம் நிறைத்து அள்ளிவிடும்
நாளேடும்–
எல்லாமே காகிதம்
நம்மையே சுற்றி வந்தபடி.

காகிதம் தந்த அதே காட்டுக்குள்
கத்தை மீசை, வத்தல் உடம்பு
வத்தாத ஆசை, கொத்தும் கண்
ஒத்தைப் புலியின்
குத்தல் பேச்சு கேட்டு
கிடுகிடுக்கும் நாற்காலியில்

## வந்த சரக்கு!




நடுங்கி விறைக்கும் நாம்,
காடு வளர்த்த
வெறும் காகிதப் புலிகளாய்.

'ரப்பன்'-ஐ, 'ரப்பர்' ஆக்கி
இழுபறிக் கேஸானதும்
எழுகின்ற சந்தேகம்–
அது புலியா, 'ரப்பரா' என்று.

நியதியாகவே நடக்கும் போல.
அழிப்பதற்காகவே 'ரப்பர்',
அழிக்கப்படுவதற்காகவே காகிதம்.

இந்தக் கவிதைக்கு விஜயராகவன் கொடுத்திருந்த தலைப்பு We, rubber! மனுஷன் சிலேடையாலேயே கொன்னுடக் கூடியவர்ன்றதுக்கு உதாரணமா அவரோட இன்னொரு சின்ன கவிதை:



### புரட்டல்

அன்று
ஏரி-குளம் தோண்டினோம்
சாலை மேல கான்க்ரீட்
போட்டோம்

இன்றும்
அதையே செய்கிறோம்-மாத்தி

அம்பது
ஆண்டுகளில்
அப்படி என்ன
புரட்டிப்பிட்டீங்கன்னு
கேட்பாங்க, இல்லையா...?

பேசாம விஜயராக 'pun'னு பேரை மாத்தி வைச்சுக்கலாம்!

இதைக் கவிதை வ்வ்வ்வாரமா கொண்டாடிறதுன்னு முடிவுக்கு வந்துட்டேன். எல்லா கவிதைகளுமே சூப்பர் மார்க்கெட்டுக்கு வந்த சரக்கு! இதோ ஆத்தூர் ஹரியோட காதல் கவிதை. (பயப்படாதீங்க ஹரி! கவிதைக்கு முன்னால எழுதின கதையையெல்லாம் சொல்லப் போறதில்லே..)

### நிகழ்வு

கண்களின் புன்னகையில்
கனவுகள் தித்திக்கும்
மௌனம் போர்புரிய
தென்றல் கைதட்டும்
மனம்
மறதியைக் காவலுக்கு வைத்துவிட்டு
மலருக்குள் ஒளிந்து கொள்ள,
இதழ்கள் திறப்பதற்குள்
என்னென்னவோ நிகழ்ந்திருக்கும்.

அழகான இமேஜரி வந்திருக்கு; கங்கிராட்ஸ் ஹரி!

அடுத்தாற்போலே ஆர். ரத்தினசாமியோட கான்ட்ரிப்யூன்:

### சோளக்காட்டுப் பொம்மை

போவோர் வருவோர் பார்த்து
மகிழும்
சோளக்காட்டுப் பொம்மை-உனக்கு
பேண்ட்டும் ஷர்டும் தச்சதாரு
தெரிந்து நீயும் சொல்லேன்...

இரவும் பகலும் காவல் காக்கும்
சோளக்காட்டுப் பொம்மை-உனக்குப்
பிடித்ததென்ன மழையா வெயிலா
விரைந்து நீயும் சொல்லேன்...

பதில்:
எதுவும் எனக்கு நினைவில் இல்லை
இதுதான் உண்மை கேளுங்க...
எதுக்கும் ஒருதரம் இன்டர்நெட்டில்
சோளா டாட்காம் பாருங்க!

இதைக் குழந்தைகள் கவிதைன்னு சர்டிஃபை பண்றார் ரத்தினசாமி. சந்தம் குழந்தைகளுக்கானது; சிந்தனை பெரியவங்களுக்கும் ஆனது!

— சுமி

## சுமி சூப்பர் மார்க்கெட்

# 24

ராஜேஷ் குமார்

வருணின் பார்வையும் பர்வதாவின் பார்வையும் சரேலென சந்தித்து திகிலில் உரசிக் கொண்டன. பர்வதா நிலைகுலைந்து போய் அந்தப் போலீஸ் அதிகாரியை நடுக்கமாய் ஏறிட்டாள்.

"ம...ம...மர்டர்...எ...எப்படி...ஸார்....?"

"தெரியலை...! சம்பவம் மிட்நைட்ல நடந்து இருக்கணும். காலையில் வேலைக்காரன் வந்து பார்த்த பின்னாடிதான் போலீஸுக்குத் தகவல் வந்தது. ராத்திரியில் வேலைக்காரர்கள் இங்கே தங்கியிருக்க அனுமதி இல்லையாமே உண்மையா...?"

"உண்மைதான்..."

"ஏன் அப்படி...?"

"தயானந்த் ஸார் பல பிஸினஸ்களுக்குச் சொந்தக்காரர். இவருடைய வியாபார வெற்றிக்காக சில முக்கியமான நபர்களை இந்த பங்களாவில்தான் சந்திச்சுப் பேசறது வழக்கம். விஷயம் வேலைக்காரங்க மூலமாக வெளியே போயிடக் கூடாதுங்கிறதுக்காக சாயந்திரம் ஆறுமணிக்கே அவர்களை அனுப்பிடுவார். மறுநாள் காலையில் எட்டு மணிக்குத்தான் ட்யூட்டிக்கு வரணும்."

வருண் போலீஸ் அதிகாரியிடம் குறுக்கிட்டுக் கேட்டான்.

"ஸார்... உள்ளே போய்ப் பார்க்கலாமா?" கேட்ட வருணை ஒரு லேசர் பார்வை பார்த்தார் போலீஸ் அதிகாரி. "நீங்க... யாரு...?"

"என் பேர் வருண் ஸார். தயானந்த் ஸாரோட கம்பெனியில் புதுசா வேலைக்குச் சேர்ந்திருக்கேன்."

"இப்ப இரண்டு பேரும் எதுக்காக அவரைப் பார்க்க வந்திருக்கீங்க...?"

பர்வதா இடைமறித்துச் சொன்னாள்.

"எட்டரைமணி சுமாருக்குத் தயானந்த் ஸார்க்கு நான் ஃபோன் பண்ணி பேசினபோது வருணையும் கூட்டிகிட்டு இந்த பங்களாவுக்கு வரச் சொன்னார்..."

"நீங்க எட்டரை மணிக்குப் ஃபோன் பண்ணினபோது தயானந்த் உங்க கூட பேசினாரா?"

"ஆமா...ஸார்..."

போலீஸ் அதிகாரி அந்த இக்கட்டான சூழ்நிலையிலும் புன்னகை செய்தார்.

"ரெண்டு பேரும் மொதல்ல உள்ளே போய்ப் பாடியைப் பார்த்துட்டு வாங்க..." சொல்லிவிட்டு அவர் ஜீப்பில் கரகரத்துக் கொண்டிருந்த வயர்லஸ்ஸை நோக்கிப் போனார்.



# மூடுபனி நிலவு



வருணும் பார்வதாவும் தயக்கநடை போட்டபடி உள்ளே போனார்கள்.

வேலைக்காரன் ஆறுமுகம் தோளில் போட்டிருந்த அழுக் குத்துண்டால் அழுகையை அடக்கியபடி நின்றிருக்க முன்னறையில் இரண்டு ஃபாரன்ஸிக் ஆட்கள் ப்ரஷ்ஷால் பவுடர் தூவி லென்ஸில் பார்த்து கைரேகைப் பதிவுகளைச் சேகரித்துக் கொண்டிருந்தார்கள். இரண்டாவது அறைக்குள் மார்பிள் தரை பூராவும் ரத்தக் கறைகள் தெரிய சாக்பீஸால் வட்டம் போட்டிருந்தார்கள். எஸ்.ஐ. ஒருவர் டயரியில் ஏதோ குறித்துக் கொண்டிருந்தார். மூன்றாவது அறை தயானந்தின் படுக்கையறை. இரண்டு பேரும் சுவரோரமாய்ப் போய் எட்டிப் பார்த்தார்கள்.

தயானந்த் கட்டிலிலிருந்து தவறி விழுந்தவரைப் போல் மல்லாந்து விழுந்திருந்தார். விலையுயர்ந்த ஃநைட் கவுனில் பார்வை சிக்கிய இடமெல்லாம் இரத்தப் பொத்தல்கள். கழுத்துக்கு வலது பக்கத்தில் சற்று பெரிய சைஸில் உறைந்துபோன ரத்தக்குளம். குளக் கரையில் உடைந்துபோன தங்கபிரேமிட்ட மூக்குக் கண்ணாடி.

வருண், பார்வதா இரண்டு பேரும் அதிர்ச்சியில் சுவாசிக்க மறந்து திகில் பார்வைகளைப் பரிமாறிக் கொண்டார்கள். முதலில் அதிர்ச்சியிலிருந்து மீண்ட பார்வதா, சுற்றும் முற்றும் பார்த்தாள். போலீஸும் ஃபாரன்ஸிக் ஆட்களும் அவரவர் வேலைகளில் மூழ்கிப் போயிருக்க, பார்வதா தலையைத் தாழ்த்திக் கொண்டு மெல்ல கிசுகிசுத்தாள்.

"வருண்...!"

"ம்..."

"நேத்து ராத்திரி நாம இங்கே வந்ததைப் பற்றியோ, தயானந்த் உங்களுக்குப் பணம் கொடுத்தது பற்றியோ தவறிப்போய்க்கூட சொல்லிவிட வேண்டாம்..."

"எனக்குத் தெரியாதா என்ன...? பார்வதா! இந்தக் கொலையை யார் பண்ணியிருப்பாங்கன்னு நினைக்கிறே?"

"தயானந்துக்குப் பிஸினஸ் ரீதியா எட்டு திசைகளிலும் எதிரிகள். இவரோட பிரதான எதிரியான கீர்த்திவாசன் கூட கூலிப் படையை வெச்சு இந்தக் கொலையைப் பண்ணியிருக்கலாம்..."

"மொதல்ல பார்த்த போலீஸ் அதிகாரி

''கெட்ட கெட்ட கனவா வருதுங்க...''

''அப்படி என்ன கனவு?''

''நானே சமைக்கிற மாதிரி, துணி துவைக்கிற மாதிரி...''

– எஸ். மோகன்

வந்துட்டிருக்கார். எதையும் பேச வேண்டாம்."

மௌனமானார்கள்.

எஸ்.கே. மாயக்கண்ணன் அஸிஸ்டண்ட் கமிஷனர் ஆப் போலீஸ் என்ற நேம் பேட்ஜைக் குத்தியிருந்த அந்த போலீஸ் அதிகாரி பக்கத்தில் வந்தார்.

''உங்க ரெண்டு பேரையும் கமிஷனர் கூப்பிடறார்...வாங்க...''

போனார்கள்.

மே ஃப்ளவர் மரத்துக்குக் கீழே ஒரு நாற்காலியில் கால்மேல் கால் போட்டு உட்கார்ந்திருந்த போலீஸ் கமிஷனர் சக்கரபாணி, தன் மெலிதான குளிர் கண்ணாடி வழியே இரண்டு பேரையும் ஒரு அரை நிமிஷம் மாறி மாறி பார்த்தார். பின் பார்வதாவின் மேல் பார்வையை நிறுத்தினார்.

''நீ எட்டரை மணிக்குப் ஃபோன் பண்ணி தயானந்த்கிட்டே பேசினதா ஏ.ஸி.கிட்டே சொல்லியிருக்கே; உண்மையா...?''



"ஆமா...ஸார்."

"தயானந்த உன்கூட பேசினாரா?"

''பேசினார் ஸார். ஆனால் அது அவரோட குரல் மாதிரியே இல்லை. நான் சந்தேகப்பட்டு என்ன ஸார் குரல் ஒரு மாதிரியாயிருக்குன்னு கேட்டேன். அதுக்கு அவர் ஸிவியர் கோல்ட்ன்னு சொன்னார்."

"எட்டரை மணி சுமாருக்குத் தயானந்த் உன்கிட்டே.... தயானந்த் மாதிரி யாரோ பேசியிருக்காங்க. அப்படிப் பேசினது கொலையாளியாகக் கூட இருக்கலாம். தயானந்த் பாடியை பரிசோதித்துப் பார்த்தார் அரசு டாக்டர். நள்ளிரவு ஒரு மணியிலிருந்து இரண்டு மணிக்குள்ளாக தயானந்த் கொலை செய்யப்பட்டு இருக்கலாம்ன்னு ரிப்போர்ட் கொடுத்திருக்கார்..."

''நான் ஃபோன் பண்ணும்போது கொலையாளி இதே இடத்துல இருந்திருக்கணும் ஸார்."

"சரி...! நீங்க ரெண்டு பேரும் தயானந்தை என்ன விஷயமா பார்க்க வந்தீங்க...?"

"ஸார்...! நான் தயானந்துக்கு பி.ஏ. தினசரி. காலை எட்டு மணியிலிருந்து எட்டரை மணிக்குள் அவரை நான் காண்டாக்ட் பண்ணி அன்றைக்கு அவருக்கு என்னென்ன ப்ரோக்ராம்ஸ் இருக்குன்னு ரிமைண்ட் பண்ணுவேன். இன்னிக்கும் அது மாதிரி தான் ஃபோன் பண்ணினேன். நான் என் வீட்டிலிருந்து அவருக்கு ஃபோன் பண்ணும் போது வருணும் பக்கத்தில் இருந்தார்."


கமிஷனர் சக்கரபாணி குறுக்கிட்டு கேட்டார். "வருண் உன்னோட வீட்டுக்கு வர என்ன காரணம்?"

"ஸார்! வருண் நியூலி அப்பாய்ண்ட்டட். செக்யூரிட்டியில் வாட்ச்சர் போஸ்ட். இன்னிக்குக் காலையில் திடீர்ன்னு அவரோட காதலியை ஒரு கோயில்ல வெச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டார். மனைவியோட வெளியூர் போகணும்ன்னு சொல்லி என்கிட்ட ஒரு வாரம் லீவு கேட்கிறதுக்காக வீட்டுக்கு வந்தார். நான் தயானந்துக்கு ஃபோன் பண்ணும்போது வருண் லீவு கேட்கிற விஷயத்தைச் சொன்னேன். வருணை அழைச்சுட்டு வரும்படியா தயானந்த் ஸார் சொன்னார்."

"அதாவது தயானந்த் மாதிரியே எவனோ ஒருத்தன் உன்கிட்டே பேசியிருக்கான்?"

''ஆமா...ஸார்...''பார்வதா சொல்லிக்

# வண்ணாந்துறை...



ஒவ்வொரு முதுகிலும்
அழுக்கு மூட்டை.

என் அழுக்கை
நீ காட்ட
உன் அழுக்கை
நான் காட்ட

தினம் துவைத்தும்
கரையாமல்
தினம் வெளுத்தும்
குறையாமல்
அழுக்கு மூட்டை அவதாரம்.

ஆறுகள் வற்றியதால்
பலர் துவைப்பதேயில்லை.

அழுக்கே ஆபரணம்.
அழுக்கே கிரீடம்!

வெள்ளாவி வைத்து
அழுக்கைப் போக்கக்
கஷ்டம்.

எதைப் போக்க?
உள்அழுக்கா? வெளி அழுக்கா?

— ஆண்டாள் பிரியதர்ஷினி

கொண்டிருக்கும்போதே அஸிஸ்டண்ட் கமிஷனர் மாயக் கண்ணன் கமிஷ்னருக்குப் பக்கத்தில் வந்து குனிந்தார்.

"ஸார்...! தயானந்தோட டெத் ந்யூஸைக் கேள்விப்பட்டு அவரோட ஃப்ரண்ட்ஸ் சர்க்கிள்லயிருந்து ஒவ்வொருத்தரா வர ஆரம்பிச்சுட்டாங்க. அடுத்த ஒரு மணி நேரத்துக்குள்ளே கூட்டம் அதிகமாயிடும். பாடியை இம்மீடியட்டா மார்ச்சுவரிக்குக் கொண்டு போயிடறது பெட்டர் ஸார்."

கமிஷனர், நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தார்.

"ஃபாரன்ஸிக் முடிஞ்சுதா?"

"முடிஞ்சுது ஸார்..."

"ஃபிங்கர் பிரிண்ட்ஸ்?"

"ஓவர் ஸார்..."

வருணையும் பார்வதாவையும் அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு கமிஷனர் ஏ.ஸி. யோடு வீட்டை நோக்கிப் போக, இருவரும் அங்கிருந்த நாற்காலிகளில் தளர்வாய் உட்கார்ந்தார்கள்.

"பார்வதா..."

"ம்...."

"கமிஷனர் கேட்கிற ஒவ்வொரு கேள்வியும் வயித்துக்குள்ளே கொக்கியைப் போட்டு இழுக்குது..."

"இதோ பாருங்க வருண்...! தப்பு பண்ணினவங்கதான் போலீஸைப் பார்த்து பயப்படணும்."

"பத்து லட்சம் பணம் வாங்கின விஷயம் வெளியே வந்துடுமோன்னு பயம்மாயிருக்கு..."

"அதை மறந்துடுங்க... அந்தப் பணம் திருட்டுப் போனதும் ஒருவகையில் நல்லது தான்..."

"எக்ஸ்க்யூஸ்மீ..." பக்கவாட்டில் எழுந்த அந்தப் பெண் குரல் கேட்டு பார்வதாவும் வருணும் திடுக்கிட்டுப் போய்த் திரும்பினார்கள்.

லாயர் மனோன்மணி மார்புக்குக் குறுக்காக கைகளைக் கட்டியபடி இறுகிய முகத்தோடு நின்றிருந்தாள்.

யார் என்று தெரியாமல் வருண் முழிக்க பார்வதா மட்டும் குழப்பமான குரலில் கேட்டாள்.

"நீங்க...நீங்க... லாயர்...?"

"மனோன்மணி....! உன்னோட பாஸ் தயானந்த் சம்பந்தப்பட்ட ரெண்டு மூணு கேஸ்களை அட்டெண்ட் பண்ணியிருக்கேன். இன்னிக்குக் கூட அவரைச் சந்திக்க

## கதையா மூச்!



நடிகை சிம்ரனைத் தமிழ் சினிமாவுக்கு அறிமுகப்படுத்தி புண்ணியம் தேடிக் கொண்ட டைரக்டர் உதயசங்கர் 'பூச்சூடவா' படத்திற்குப் பிறகு தெலுங்கு பக்கம் போனார். அங்கு இரண்டு சக்ஸஸ் படங்களைக் கொடுத்துவிட்டு, மீண்டும் தமிழுக்குத் திரும்பியிருக்கிறார் 'தவசி' படம் மூலம். ஐம்பது கதைகளைக் கேட்ட விஜயகாந்த் இந்தக் கதையைக் கேட்டதும் உடனே ஓ.கே. சொல்லிவிட்டாராம். 'அப்படியென்னங்க கதை?' என்று உதயசங்கரிடம் கேட்டால், 'கதையா மூச்!' என்கிறார் ஆள்காட்டி விரலை உதட்டின் மீது வைத்து.

– ஏக்

படம்: ஜரீஸ்

பேசறதுக்காக அப்பாய்ண்ட்மெண்ட் வாங்கியிருந்தேன். இங்கே வந்து பார்க்கும் போதுதான் இப்படியொரு அசம்பாவிதம். ஒரு நல்ல மனிதர்க்கு இப்படியொரு முடிவா...?''

''மேடம்! பிசினஸ் ரீதியா அவர்க்கு நிறைய எதிரிகள். நான் எத்தனையோ தடவை வார்ன் பண்ணியிருக்கேன்.''

மனோன்மணியின் பார்வை இப்போது வருணின் மேல் விழுந்தது.

''நீ லீலாகிருஷ்ணனோட ஃப்ரண்ட் வருண்தானே?''

''ஆமா...'' வருண் எச்சில் விழுங்கிக் கொண்டு தலையாட்டினான்.

''ஒரு குடும்பப் பொண்ணோட சந்தோஷமான வாழ்க்கையைச் சிதைக்கிறதுல உனக்கு அப்படியென்ன ஒரு சந்தோஷம்...?''

வருண் கண்களில் பெரிதாய்த் திடுக்கிட்டான்.

''ஒரு குடும்பப் பெண்ணோட வாழ்க்கையை நான் சிதைக்கிறேனா... என்ன மேடம் சொல்றீங்க?''

''இதோ பார்...! இந்த பாசாங்கெல்லாம் என்கிட்ட வேண்டாம். யமுனாவை உனக்குத் தெரியாது...?''

''தெரியாது மேடம்...! யமுனாங்கிற அந்தப் பெண்ணை நான் போட்டோவில் தான் பார்த்திருக்கேன். நேர்ல இதுவரைக்கும் பார்த்தது கூட கிடையாது.''

''யமுனாவோட போட்டோவை உனக்குக் காட்டினது யாரு?''

''லீலா கிருஷ்ணன்! தான் காதலிக்கிற பெண் இந்தப் பெண்தான்னு சொல்லி யமுனாவோட போட்டோவைக் காட்டினான்...''

''சரி..! லீலாகிருஷ்ணனும் யமுனாவும் உண்மையிலேயே காதலர்களா?''

''அதைப்பத்தி எனக்குத் தெரியாது.''

''அதென்ன சிவப்பு பனித்துளி?''

''தெரியாது...?''

''இன்ஸ்பெக்டர் பால்பாண்டியன் சொன்ன மாதிரி நீ போலீஸ் லாக்கப்புக்குள்ளே போனபின்தான் உண்மை பேசறதுன்னு முடிவு கட்டியிருக்கியா...?''

''மேடம்! நீங்க பேசறது கொஞ்சம் கூட சரியில்லை.''

மனோன்மணி திடீரென்று ஆவேசமானாள்.

''என்னடா... சரியில்லை...! பூவாட்டம் வீட்ல இருக்கிற ஒரு பெண்ணை தெருப் புழுதிக்குக் கொண்டு வரப் பார்க்கிறியே... நீயெல்லாம் நல்லாயிருப்பியா...? லீலாகிருஷ்ணனைக் கொலை பண்ணிட்டு யமுனா மேல அந்தப் பழியைப் போட்டு ப்ளாக்மெயில் பண்ணி பணம் பறிக்கிறதுதானே உன்னோட திட்டம்?''

''மேடம்! நாக்கை அடக்கிப் பேசுங்க! நான் ஒண்ணும் பணத்துக்காக அலையறவன் கிடையாது...!''

''என்னது... பணத்துக்காக அலையறவன் கிடையாதா... அப்பஉன்னா கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீ பர்வதாகிட்ட பத்து லட்சம் பணம் வாங்கின விஷயம் வெளியே வந்துடுமோன்னு பயமாயிருக்குன்னு நீ சொன்னதுக்கு என்ன அர்த்தம். பத்து லட்சம் உனக்குக் கொடுத்தது யாரு...?''

மனோன்மணி போட்ட சத்தலில் போர்டிகோவில் ஃபாரன்ஸிக் அதிகாரியோடு பேசிக் கொண்டிருந்த போலீஸ் கமிஷனர் ஸ்லோமோஷனில் திரும்பிப் பார்த்தார்.

(தொடரும்)

# “தீதெல்லாம் நலிக!”

✉ ‘அறம்’ சிறுகதைப் படித்தேன்; “அறன் வலியுறுத்தும் சிறுகதையை - கருத்துச் சிறப்பு வாய்ந்த ஒன்றை - கலை நயத்துடன் மாலன் வழங்கியுள்ளார். பாராட்டுக்கள். மகாகவி பாரதியின் பாடல் வரிகள் நினைவுக்கு வருகின்றன:

“அறம் வளர்ந்திடுக; மறம் மடிவுறுக!”

“நன்மை வந்து எய்துக; தீதெல்லாம் நலிக!”

இங்கு மட்டுமல்ல; உலகுளங்கும்!

நெல்லை, திக. சிவசங்கரன்.

✉ முடிந்த மட்டும் முன் விரோதத்தை, வெறுப்புகளை மறந்து, இந்திய பாக் நல்லுறவுக்கு ஆதரவுக்கரம் நீட்டினால் இரு நாடுகளுக்கும் மிக நல்ல பெருமை. சர்வதேச அளவில் மதிப்பும் உயரும் என்ற தலையங்க எதிர்பார்ப்பு தலைவர்கள் மனத்தில் பதிய வேண்டும்.

திருவண்ணாமலை, இலெமூரியன்.

✉ வெள்ளையர்கள் ஆண்ட காலத்தில் அவர்களுக்கு இந்துச்சட்டம், புரியாத புதிரா கவே இருந்தபோது, அதைப் புரியும்படி நீதி மன்ற மொழியில் முதலில் எழுதிப் பதிப் பிக்கச் செய்த ‘இந்து சட்டமேதை’ ராகவாச் சார்யார் இளையதலைமுறையினருக்கு ஓர் எடுத்துக்காட்டு.

சென்னை-73, கே.வி. ராமன்.

✉ முதலாளி - தொழிலாளி உறவு மேம் படும் வகையில் ‘வெள்ளிக்கிழமை விருந்து’ நடத்தி வரும் ஸ்ரீராமலிங்கா நூற்பாலையின் உரிமையாளர் டி.ஆர். தினகரன் உண்மை யிலேயே ஒரு வித்தியாசமான முதலாளி தான்.

மதுரை, என். பாலகிருஷ்ணன்.

✉ நாசரின் பேட்டி படித்தேன். சினிமாவை சினிமாவா எடுத்தா மக்கள் தியேட்டர் பக்கம் நிச்சயம் வருவாங்க என்று அவர் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை.

மணியக்காரன்பாளையம், ஏ.ஜி. கல்யாணசுந்தரம்.

✉ 2008-ஆம் ஆண்டு நடத்தவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளுக்காக இப்போதே மூன்று தீவுகளை ஒதுக்கி, பிரம்மாண்டமாக தயார் செய்து வரும் ஜப்பானின் செயல்பாடு வியப்பில் ஆழ்த்தியது. கூடவே நாளை வரவிருக்கும் முதல்வருக்காக இன்றைய நாளில் அவசர, அவசரமாக தார் ரோடு அமைக்கும் நமது நாட்டின் ‘ரெடி மேட் கலாசாரம்’ நினைவுக்கு வந்து மனத்தை நோகடிக்கவும் செய்தது.




திருநெல்வேலி, வீ. முத்தையா.

✉ ‘தங்கச்சி கல்யாணம்’ சிறுகதையின் நிகழ்வுகள் மனத்தைத் தொட்டன. ‘சிவசு’ பாத்திரப் படைப்பும் கதையின் முடிவும் நினைவில் நின்றது...

போடிநாயக்கனூர், எஸ்.எம். பாலசுப்ரமணியன்.

✉ ‘வாக்காளர் பட்டியல் தில்லுமுல்லு’ படித்தேன். மேற்பார்வைக்குத் தேர்தல் கமிஷன் பொறுப்பு. அரசியல் சார்ந்த மாநில பணியாளர்களைத் தவிர்த்து, தனி நபர் மூலம் வாக்காளர் அடையாள அட்டை சரி பார்க்கும் பணியைச் செய்வதே தீர்வு.

நாக்பூர், நாகபாரதி.

✉ மாலனின் ‘அறம்’, பொறுப்பில்லாமல் உணர்ச்சிகளால் தூண்டப்பட்டு வாக்களித் தவர்களையும் அவர்களுக்குத் தவறான பாதைக் காட்டியவர்களையும் கண்டிப்பாக உறுத்தும்; உறுத்த வேண்டும்.

சுதந்தர பாரதத்தின் ஓர் அரசியல் அவலம், காலப் போக்கில் வெறும் செய்தியாகித் தேய்ந்து மறைந்து விடும். ஆனால் அந்த நிகழ்வே இலக்கிய வடிவம் பெற்று விடுகிறபோது அமரத்துவம் பெற்று விடுகிறது.

சென்னை - 45, சுப்ர. பாலன்.

# பயமுறுத்தும் பா.ம.க!

ஒவ்வொரு ஆண்டும் சித்ரா பௌர்ணமி அன்று மாமல்லபுரம் கடற்கரையில் பா.ம.க. இளைஞர் திருவிழா கொண்டாடுவது வழக்கம். இந்த வருடம் அந்த விழாவை "எம்.எல்.ஏ.க்களுக்குப் பாராட்டு விழா என்று கொண்டாடினார் டாக்டர் ராமதாஸ். பா.ம.க.வின் தேர்தல் சின்னமான மாம்பழத்தைக் கொண்டு மேடையை அலங்கரித்து வைத்திருந்தார்கள்! (இரண்டு லாரி மாம்பழம் தேவைப்பட்டதாம்!) கூட்டம் முடிந்ததும் தொண்டர்கள் மேடையை ''மொட்டையடித்து'' விட்டார்கள்.

''1996ம் ஆண்டிலேயே கலைஞர் எங்களுக்கு 25 ஸீட்டுகள் கொடுத்தார். அதை ஏற்றுக் கொண்டிருந்தால் 25 தொகுதியிலும் அப்போது வெற்றி பெற்றிருப்போம். எனவே அதை ஒப்பிடும் போது இப்போது வெற்றி பெற்றிருக்கும் 20 தொகுதிகள் என்பது மிகவும் குறைவுதான். எங்களுக்கு அப்போது அரசியல் கணக்குத் தெரியவில்லை. இனிமேல் எங்களை ஏமாற்ற முடியாது. ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள், இருபது சட்டமன்ற உறுப்பினர்களோடு இருக்கும் பா.ம.க., மூன்றாவது பெரிய கட்சி" என்றார் விழாவில் பேசிய டாக்டர் ராமதாஸ்.

டாக்டர் இப்படி சொன்னது வரும் ராஜ்யசபைத் தேர்தலை மனத்தில் வைத்துத்தான் என்கிறார்கள். ஆறு காலியிடங்களுள் நான்கு இடங்களில் அ.தி.மு.க.வும், ஒரு இடத்தில் தி.மு.க.வும் வெற்றி பெறும் வாய்ப்பு இருக்கிறது. மீதம் உள்ள ஓர் இடத்தை அ.தி.மு.க. ஆதரவு இருந்தால்தான் த.மா.க.வோ பா.ம.க.வோ கைப்பற்ற முடியும். அம்மாவுடன் கூட்டணி அமைக்கும் போதே ஜெயந்தி நடராஜனை மனத்தில் வைத்துக் கொண்டு அதற்கான ஒப்பந்தத்தை மூப்பனார் போட்டுவிட்டார் என்று ஒரு தகவல். ஆனால் டாக்டருக்கோ, அந்த ஒரு இடத்தைப் பா.ம.க.வுக்குப் பெற்றுத் தந்துவிட வேண்டும் என்று ஆசை. அந்த ஆசை, மகன் அன்புமணிக்காகத்தான் உருவானதாம். பா.ம.க.விலேயே, தேர்தலில் சீட்டுக் கிடைக்காத பிரமுகர்களும் ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தேர்தலுக்குப் பிறகு அம்மாவுக்கும் டாக்டருக்கும் ஒரு தகவல் இடைவெளி உண்டாகியிருப்பதாகவும் சொல்கிறார்கள். அம்மா நல்லாட்சி கொடுப்பதில் பிஸியாக இருக்கிறார். மூப்பனார் கொடுத்த விருந்திலும் டாக்டர் ஆப்சென்ட்.

* மாநாட்டில்



ராஜ்யசபா தேர்தலில் அம்மாவின் தயவு த.மா.கா. பக்கம் சாயும் பட்சத்தில் பா.ம.க. தரப்பில் சூடு பிடிக்கும். இதற்கிடையில் வாஜ்பாயுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதில் டாக்டர் பிஸியாக இருக்கிறார். மீண்டும் அமைச்சர் பதவிகளைப் பெறுவதில் குறியாக இருக்கிறது பா.ம.க.

விழாவில் "புதிய பா.ம.க. எம்.எல்.ஏ.க்கள் திருக்குறள் நெறிப்படி நடக்க வேண்டும்" என்ற டாக்டர், ஆளும் கட்சியினரே வெட்கப்படும் அளவுக்குப் பா.ம.க. உறுப்பினர்கள் ஜால்ரா அடிக்கக் கூடாது என்றும் வலியுறுத்தியிருக்கிறார். வரும் மாதங்களில் சட்டமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பா.ம.க.வின் வாண வேடிக்கைகளை நிறையவே பார்க்கும் வாய்ப்பும் இருக்கிறது!

**- தில்லப்பா**

படம் : **ராஜன்**

# குறையொன்றுமில்லை

பகவானின் பதினான்கு குணங்களுள் மற்றொன்று விஜ்வரத்வம். நமக்குச் சரீரத்தில் ஜுரம் வருகிறது. அந்த மாதிரி பகவானுக்கு உண்டோ?... கிடையாது! ம்ருத்யுவுக்கு ம்ருத்யுவானவன் அவன். ஆதலால், நிம்ருத்யுத்வம் என்ற குணமும் அவனுடையது.

ம்ருத்யுவே அவனைக் கண்டால் ஓடி விடும் – அதைத்தான் பிரஹலாதன் சொல்கிறான். அப்பா ஹிரண்ய கசிபு கேட்கிறான் பிரஹலாதனை நோக்கி: "நான் இவ்வளவு மிரட்டுகிறேனே, உனக்குப் பயமில்லையா...? இவ்வளவு பண்ணுகிறேன். உனக்குத் துளிக்கூட அச்சமில்லையா..?"

"நான் எதற்காக பயப்பட வேண்டும்?" என்று கேட்டான் அவன். "பயத்துக்கே பயமானவன் என்னுள்ளே இருக்கிறபோது நான் யாரிடத்திலே பயப்பட வேண்டும்?"

'அபயங்கரன்' என்றல்லவா பெயர் அவனுக்கு!

'என்னிடத்திலிருக்கிற பாபங்களையெல்லாம் அந்த எம்பெருமான் அபயங்கரன் போக்கட்டும். ம்ருத்யு பயத்தைப் போக்கட்டும்...' என்றெல்லாம் மந்திரம் பிரார்த்திக்கிறது. இந்த மந்திரத்தை உதக சாந்தியில்கூட ஜபிப்பார்கள். ம்ருத்யு பயத்தைப் போக்க வல்ல மந்திரம் இது. இப்படிப்பட்ட ஏற்றமுடைய எம்பெருமானுக்கு ம்ருத்யு பயம் என்பது உண்டா...?

சர்வக்ஞத்வம் என்கிற உயர்ந்த குணம். அதுவும் இந்த விஷ்ணு சப்தத்தினால் காட்டப்படுகிறது. குயுக்தியாக ஒருத்தர் கேட்டார். "அவன் சர்வக்ஞன், எல்லாவற்றையும் உணர்பவன், உணர்ந்தவன் என்று அர்த்தம். அப்படியானால், பகவான் மாண்டு போய், தான் மாண்டு போன நிலையையும் உணர்ந்திருக்கிறானா...?"

– இப்படியொரு கேள்வி அவன் கேட்பதாக சாஸ்திரங்களிலே வருகிறது. அதற்கான பதிலும் வருகிறது.

அப்படி அவன் மாண்டு போன நிலையை உணர்ந்தவனில்லை என்று சொன்னால் அவனுடைய சர்வக்ஞத்துக்கு இழுக்கு.

ஆனால், எது உண்டோ, அது தான் சர்வக்ஞத்வமே தவிர, இல்லாத ஒரு நிலையை உணர்வது அல்ல! பகவானுக்கு ம்ருத்யுவே இல்லை. நிம்ருத்யுவான அவன் மாண்டு போய் எப்படி அந்த நிலையை உணர்வான்! இல்லாததை எடுத்துரைத்து, அதை அவன் உணர்ந்திருக்கிறானா என்று கேட்டால் சாஸ்திரம் பதில் சொல்லாது. எது உண்டோ அதை வைத்துக் கொண்டுதான் கேட்க வேண்டும்.

சர்வநியம்க்ருத்வம் – நிலை தந்த தாரகனாய் எல்லாவற்றையும் நியமிக்கிறான் அவன். 'நியம்தா! சாந்தா!' – சாந்தா என்றால் எல்லாவற்றையும் ஆக்ஞாபிப்பவன் என்று பொருள். எல்லாவற்றிலும் உட்புகுந்து இருக்கிற அந்த பரமாத்மா இதைப் பண்ணு அதைப் பண்ணாதே என்று நியமிக்கிறான்.

உபநிஷத் சொல்கிறது – போக்தா, போக்யம், பிரேரிதா – இவை மூன்றையும் நிர்ணயிப்பவன் நியம்தா.

போக்தா என்றால்...? நாமெல்லாம் ஜீவாத்மாக்களெல்லாம் – சேதனங்களெல்லாம் – அறிவை உடையவையெல்லாம் போக்தா.

'போக்யம்' என்றால் அவற்றால் அனுபவிக்கப்படுகிற அசேதனமான பொருட்கள். அதற்கு போக்யம் என்று பெயர். இவை இரண்டையும் நியமிப்பவன் பிரேரிதா – பகவான்! ஈச்வரன்! இதைத்தான் சிதசிதீச்வர தத்வம் என்று சொல்வார்கள்.

சித் – போக்தா. அசித் – போக்கியம் ஈச்வரன் – பிரேரிதா.

ஒரு மாந்தோப்பு இருக்கிறது... அல்லது ஒரு வாழைத் தோப்பு – அது மொத்தத்தையும் அனுபவிக்க வேண்டியவன் உட்கார்ந்திருக்கிறான். போக்யமான வாழைப் பழம் எதிரிலே வைத்திருக்கிறது. ஆனால்,

பகவான் இருக்கிறான் பாருங்கள், அவன் நியமிப்பவன் - இந்த வாழைப்பழத்தை அவன் அனுபவிக்க வேண்டும், சாப்பிட வேண்டும் என்று பகவான் நினைத்தால்தான் அது நடக்கும்.

ஒருத்தர் கொண்டு வந்து என்னிடம் அரை டஜன் பழத்தைக் கொடுத்து, ''நீங்களே சாப்பிட வேண்டும்'' என்று ரொம்ப ஜாக்கிரதையாகத் தருகிறார். உபன்யாஸம் முடிந்தவுடனே எதிரே வரும்படியான அந்த மகானைப் பார்த்து, அந்த வாழைப்பழத்தைக் கொடுக்க வேண்டும் என்று தோன்றுகிறது. எடுத்துக் கொடுத்து விடுகிறேன்.

பகவான் யாரை வரித்திருக்கிறான்...? இந்த வாழைப்பழத்துக்கு இவர்தான் அதிகாரி என்று முன்பே நியமித்து விட்டான். ஆகையினாலே, ஒருத்தருக்கு உத்தேசிக்கப் பட்டாலும் இன்னொருத்தரை பகவான் நினைத்தாரென்றால் அது அவரிடம்தான் போய்ச் சேரும்.

போக்தாவையும் நியமிப்பவன் அவன்;



17

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

## அருள்வாக்கு

**ப**ணக்காரனுக்கு தன்னைவிட பணம் படைத்த ஒருத்தனைப் போல் தானும் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது; ஆடம்பரத்துக்கும், டாம்பீகத்துக்கும் ஊதாரித்தனமாகச் செலவழித்துக் கடன் படுகிறான். உலகத்தில் பணக்காரனுக்குத்தான் ஜாஸ்திக் கடன் இருக்கிறது. இது விசித்திரமாக, வேடிக்கையாகத் தோன்றினாலும் வாஸ்தவ நிலை இதுதான் - ஏழைகள் எத்தனையோ பேர் கடன் இல்லாமல் இருக்கிறார்கள்! பணக்காரர்களில் கடன் இல்லாமலிருப்பவர்கள் துர்லபமாகத்தான் இருப்பார்கள். போலி அந்தஸ்தை விட்டால் அவனுக்கு இத்தனை செலவு, கடன் இருக்கவே இருக்காது. லோகத்தில் எத்தனையோ பேர் கஷ்டப்படுகிறபோது நாம் இத்தனை டாம்பீகங்கள் செய்வது நியாயமா என்று அவரவரும் கேட்டுக் கொண்டு, செலவை தர்ம நியாயமாகக் கட்டுப்படுத்திக் கொண்டால் எத்தனையோ தான தர்மம், பரோபகாரம் செய்யலாம். லோகத்தில் ஒருத்தருக்குச் சாப்பாடு இல்லை, துணி

போக்யத்தையும் நியமிப்பவன் அவன். அசேதனங்களையும் சேதனங்களையும் நியமிப்பவன்.

**சித் பதி:** சித்துக்குப் பதியாயிருக்கிறான் அவன் - மனசுக்குப் பதியாக இருப்பவன் விஷ்ணு என்கிறது வேதம்! அதைத்தான் வித்யாரண்யர் எடுத்துக் காட்டுகிறார்; அதையேதான் ஆழ்வாரும் சொல்கிறார்.

*மனத்துள்ளான் மா கடல் ஆழ்*
*நீருள்ளான்*
*மலரான் தனத்துள்ளான்; தண்துழாய்*
*மார்பன்*

இன்னொரு இடத்தில் உபநிஷத்தில் ஆத்மாவானது சித்; இதுவும் அவனுக்குச் சரீரமாக இருக்கிறது. ஒருவருடைய சரீரம் அந்த ஆத்மாவினாலே நியமிக்கப்படுகிறது. ஆத்மா என்ன சொல்கிறதோ அதைச் செய்கிறது. ஆத்மாவாக பகவானே இருக்கிறான் என்றால் அவன் நியமிக்கிறபடிதானே இந்த சரீரம் நடக்கும்!

இப்படி, தனக்கொரு நியாமகன் இல்லாமல் எல்லாவற்றையும் நியமிப்பவன் அவன் என்பதை நியம்க்ருத்வம் என்கிற உயர்ந்த குணம் காட்டுகிறது.

**சே**ஷித்வம் என்கிற குணம் - பகவான் சர்வசேஷி; நாமெல்லாம் சேஷபூதர்கள் சேஷன், ஆதிசேஷன் என்று பெயர் அந்தப் பெரிய பாம்புக்கு. திருவனந்தாழ்வான். பெரிய படுக்கையாகப் படுத்துக் கொண்டிருக்கிறான்.

'சென்றால் குடையாம், இருந்தால் சிங்காதனமாம், நின்றால் மரவடியாம்....' முதல் சேஷன் அவன். பகவானுக்குப் பணிவிடை செய்பவர்களுள் முதன்மையானவன்.


சேஷ சேஷி - சேவையினால் ஆனந்தத்தை அடைகிறான் சேஷி. நாம் பண்ணக்கூடிய சேவையை பகவான் ஏற்க வேண்டும். உகந்து, 'நீ இதைப் பண்ணு' என்று பகவான் ஏற்றுக் கொண்டானானால் இவன் சேஷன் ஆவான். இல்லாவிட்டால் ஒருவன் சேஷன் ஆக முடியாது! லக்ஷ்மணனுடைய கைங்கர்யத்தை பகவான் ஏற்றான். அதனால் தான் அவன் சேஷன். அதேமாதிரி ஆதிசேஷன்.

பகவான் ஏற்காத கைங்கர்யத்தை ஆயிரம் நாம் பண்ணினாலும் பகவான் ஒத்துக் கொள்ள மாட்டான்; ஏற்றுக் கொள்ள மாட்டான்; சேஷி ஆக மாட்டான். நாம் பண்ணக்கூடிய கர்மாவினால் பகவான் சந்தோஷத்தை அடைய வேண்டும். - சேஷித்வம் என்பது அவனுடைய மற்றொரு குணம்.

**ப**தித்வம் - எல்லோருக்கும் பதியாய் இருத்தல்.

ஒரு ஸ்த்ரீயைப் பார்த்து பதிவ்ரதையாய் இரு என்று சொல்கிறோம். புருஷர்களைப் பார்த்தும் அவ்வாறு சாஸ்திர ரீதியாய்ச் சொல்ல வேண்டும். ஏன் என்றால், உலகிலே புருஷன் என்று சொன்னாலே அது விஷ்ணுவைத்தான் குறிக்கும். மற்றதெல்லாம் ஸ்த்ரீதான்! பகவான் புருஷன் - நாமெல்லாருமே அவனுக்கு தர்மபத்னி என்கிற சம்பந்தம் இருக்கிற காரணத்தினாலே நாம் அவனைப் பற்றி நிற்க வேண்டும். 'முழுவேழுலகுக்கும் நாதன் நாரணன்' என்றார் ஆழ்வார்;

நாராயணன் இருக்கிறானே, அவன் எல்லோருக்கும் நாதன். மட்டபல்லிநாதன் என்கிறோம். மட்டபல்லி என்பது இந்த பூமண்டலத்திலே ஒரு பிரதேசம். மட்டபல்லிக்கு மாத்திரமா அவன் நாதன்? சமஸ்தத்துக்கும் நாதன். அவன் மட்டபல்லியிலே



இல்லை என்கிற குறையில்லாமல் செய்து விடலாம். இப்போது செய்கிற டாம்பீகத்தால் ஒருநாளும் பெற முடியாத ஈசுவரானுக்கிரகத்தையும் இந்தப் பரோபகாரத்தினால் பெற்று விட முடியும். ஏழைதான் என்றில்லை, பணக்காரனும்கூட, 'இந்த வஸ்து நமக்குத் தேவைதானா? இது இல்லாவிட்டால் பிராணன் போய் விடுமா? இது இல்லாமல் ஜீவிக்க முடியதா? நம் அப்பாவும் தாத்தாவும் இது இல்லாமலே சௌக்கியமாக இல்லையா?' என்று அவ்வப்போதும் கேட்டுக் கொண்டு செலவழிப்பதில் கணக்காயிருக்கணும். இப்படிச் செய்தால் கொடுப்பதில் கணக்கில்லாமலிருக்க முடியும். எடுக்க எடுக்க ஊற்றில் ஜலம் வருகிறமாதிரி, கொடுக்கக் கொடுக்க மகாலக்ஷ்மியின் அநுக்கிரகம் மேலும் வளரும்.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**

இப்போது உறைந்து நம் கண்ணுக்கு இலக்காக இருக்கிறான் என்று அர்த்தம். 'இவ்வாறு அவன் எல்லோருக்குமே நாதனாய், பதியாய் இருக்கிறான்.'

ஆசார்யனாக இருப்பவனும் அவனே. எம் பெருமான் நாராயணன் நமக்கு குரு! 'துவமேவ பந்துஸ்ச குருஸ்துவமேவ', 'ஆசார்யம் பிதரம் குரும்' என்றெல்லாம் சாஸ்திரம் சொல்கிறது. அந்த எம்பெருமான்தான் நமக்கு குரு - ஆசார்யன் ஆன காரணத்தினாலே நாமெல்லாருமே அவனுக்கு சிஷ்யர்கள்.

அதனால்தான் நரனாகவும் நாராயணனாகவும் அவனே தோன்றி ஆசார்யர்கள் இருக்க வேண்டிய லக்ஷணத்தையும் தானே காட்டினான்; சிஷ்யன் இருக்க வேண்டிய லக்ஷணத்தையும் தானே காட்டினான் பரமாத்மா, நர நாராயணனாக பதரிகாசிரம க்ஷேத்திரத்திலே.

அர்ஜுனன் நரன்; கிருஷ்ணன் நாராயணன். இங்கேயும் நர - நாராயணன் - குரு - சிஷ்ய பாவம். கீதையை உபதேசம் பண்ணினான்.

ஆகையினால், ஆசார்ய - சிஷ்ய பாவமானதை அந்த எம்பெருமான் தானே உலகுக்குக் காட்டினான் என்றால், ஆசார்யர்களுக்கெல்லாம் ஆசார்யனாய் பிரதம குருவாய் பகவான்தான் இருக்கிறான்.

- இந்த உயர்ந்த நிலையும் விஷ்ணு சப்தத்தினால்தான் நமக்குத் தெரிகிறது.

இதற்கும் மேல் அவனுக்கும் நமக்கும் இருக்கும்படியான உயர்ந்ததான மற்றொரு சம்பந்தமானது விசேஷமாக அமைந்திருக்கிறது. அவன் எஜமான் நாமெல்லாம் கிங்கரர்கள். எல்லாவற்றையும் ஏவும்படியான யஜமானன். அவனுக்கு, நாம் நித்ய பணிவிடை செய்பவர்கள். அதனால் தான் இந்த ஆத்மாவுக்கு, அவனுக்குப் பரதந்த்ரனாய் இருத்தல். அடிமையாய் இருத்தல் என்பது ஸ்வரூப குணமாக அமைந்திருக்கிறது.

எங்கு சென்றாலும் இந்த ஆத்மா சுவநந்திரன் இல்லை. பரதந்த்ரன்தான் மோக்ஷத்தை அடைந்தவன்கூட பரதந்த்ரன் தான் - பகவானுக்கு அடிமைதான்; அந்த எம்பெருமானுக்குக் கைங்கர்யம் பண்ண வேண்டியவன்.

பண்டு ரீதி கொலுவீய வைய்ய ராமா - என்ற கிருதியிலே தியாக பிரும்மம், 'ராமனிடத்திலே பண்டுவாய், வேலைக்காரனாகக் கைங்கர்யம் பண்ண வேண்டும் என்று பிரார்த்திக்கிறார். அந்தக் கைங்கரியம் தான் சிறந்து விளங்கும். இது இளமையிலேயே லக்ஷ்மணனுக்கு வாய்த்தது.

இவ்வாறு பதினான்கு குணங்களும் விஷ்ணுவினிடத்திலே விசேஷமாக அமைந்திருப்பதால்தான் வேதமானது அதை விவரமாக எடுத்துக் காட்டுகிறது.

ஓம் விஷ்ணவே நம: என்று நாமாவைச் சொல்லி, புஷ்பத்தால் அர்ச்சனை பண்ணுகிறபோது இவையெல்லாவற்றையும் நினைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு நினைத்துக் கொண்டு யார் அர்ச்சனை பண்ணுகிறார்களோ அவர்களிடத்திலே பகவானுடைய அனுக்கிரஹம் பூரணமாக இருக்கும்.

புஷ்பத்தை எடுத்து, நாமாவைச் சொல்லி அர்ச்சனை பண்ணுவதற்கு ஒரு கிரமம் இருக்கிறது. எப்படி அர்ச்சனை பண்ண வேண்டும் என்றொரு முறை இருக்கிறது. அதையும் விளக்கமாகச் சொல்கிறேன்...

(வளரும்)

# ஐஸ்க்ரீம் குரலில் அதட்டல்!

இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை. கே.கே. நகரை ஒட்டியிருக்கும் ஓம் சக்தி நகரின் மூன்றாவது தெரு. கலையழகுக் கொட்டிக் கிடக்கும் அந்த காஸ்ட்லி பங்களா முன்பு மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு, அழைப்பு மணியை அழுத்தினோம்.



“வாக்... வாக்...” என்று குரைத்தபடி ஓடி வந்தது இரண்டு கிலோ எடையுள்ள பொமரேனியன் நாய்க்குட்டி. “ஆரம்பமே ஆபாயகரமாய் இருக்கிறதே” என்று இரண்டடி பின் வைத்தபோது, வீட்டின் விசாலமானக் கதவைத் திறந்துகொண்டு ‘ஏய்... ஸ்வீட்டி ஸ்டாப்பிட்!'' என்று ஐஸ்க்ரீம் குரலில் அதட்டியபடி, அலைபாயும் கூந்தலோடு ஸ்லோமோஷனில் ஓடி வந்த அந்தச் சின்னப்பெண், நாம் தேடி வந்த சினேகா!

நாய்க்குட்டியைத் தூக்கி அணைத்துக் கொண்டு “வெல்கம் சார்... வாங்க, இது குரைக்கும். கடிக்காது'' என உத்தரவாதம் கொடுத்தும் நமக்கு நம்பிக்கையில்லை.

''இப்போ பாருங்க... ஸ்வீட்டி உங்களுக்குக் கிஸ் கொடுப்பா” என்றபடி நம் அனுமதிக்குக் காத்திராமல், கன்னத்திற்கு நேராய் நாய்க்குட்டியை நீட்டினார். அது நாலைந்து முறை, நம்மைப்

'ப்ளச்... ப்ளச்' என்று எக்ஸ்பிரஸ் வேகத்தில் எச்சில் படுத்திய பொமரேனியனைச் சிரித்தபடியே ரசித்த சினேகா, 'நடிகைகளைப் பேட்டியெடுப்பதில் எதிர்ப்படும் சங்கடங்கள் குறித்துத் தனிப்புத்தகம் எழுத உத்தேசித்திருக்கும் எழுத்தாளர்கள் கவனிக்க...)

"கவலைப்படாதீங்க... ராபீஸ் இன்ஜெக்ஷன் போட்டாச்சு"



என்று தைரியமூட்டினார். 'சில்'லென்று ஒரு குளிர் ப்ளஸ் குபீர் சிரிப்பு.

"உங்களுக்குச் சொந்த ஊர் துபாய் என்று கேள்விப்பட்டோம்?"

"தாத்தாவுக்கும் பாட்டிக்கும் தமிழ்நாடுதான் பூர்வீகம். தாய்மொழி தெலுங்குன்னாலும் வீட்லே தமிழ்தான் பேசுவோம். நான் பிறந்தது, வளர்ந்தது எல்லாம் மும்பையிலே. வளர்ந்தது துபாயிலே... அங்கே ஷார்ஜா கிரிக்கெட் ஸ்டேடியத்தில் அப்பா சீஃப் அக்கவுண்ட்ஸ் ஆபீசர். அம்மா ஹவுஸ் ஒஃய்ப். இரண்டு அண்ணன்கள். ஒருத்தர் கிராஃபிக் டிசைனர், இன்னொருத்தர் சாஃப்ட்வேர் எஞ்ஜினியர். அக்கா லவ் மேரேஜ் செய்துகொண்டு, சென்னையில் செட்டில் ஆகிட்டாங்க. நான் தான் கடைக்குட்டிப் பெண். நான் ஷார்ஜா இன்

டியன் ஸ்கூலில் பிளஸ் டூ வரைக்கும் படிச்சிருக்கேன். பரதம் முறையாப் படிச்சு அரங்கேற்றம் செய்திருக்கேன்'' என்று சொல்லிக்கொண்டே போனவரை இடைமறித்து...

**''ரொம்பக் கட்டுப்பாடான குடும்பம் மாதிரி தெரியுதே, எப்படி சினிமாவில் நடிக்க அனுமதி கொடுத்தாங்க...''** என்றோம்.

''நான் படிச்சது சிபிஎஸ்சி சிஸ்டம் ஸ்கூல். ஒவ்வொரு மாதமும் கல்சுரல் புரோகிராம்ஸை கம்பல்சரியா நடத்துவாங்க... ஸ்கூல்லே டான்ஸ், பரதம்னா என்னைத்தான் கூப்பிடுவாங்க... மில்லேனியம் பொறந்தப்போ 1999 டிசம்பர் முப்பத்து ஒண்ணாம் தேதி துபாய்ல மில்லேனியம் ஷோ நடந்தது. அதை டைரக்டர் பாசில் நடத்தினார். டான்ஸ் மாஸ்டர் கலாவும் வந்திருந்தாங்க... எங்க ஸ்கூல் சார்பா நான் ஆடினேன். அதைப் பார்த்துட்டு பாசில் சாரும், கலா மாஸ்டரும், நீ சினிமாவில் நடிக்கலாமே, உனக்கு டான்ஸ் பேக் ரவுண்ட் வேற இருக்கேன்னாங்க... வீட்டில் வந்து சொன்னப்போ... அப்பா கழுத்தை நெரிச்சுக் கொன்னுடுவேன்னு சொல்லிட்டார். என்னோட ஆர்வத்தை ஏன் கெடுக்கணும்னு அம்மாதான் எனக்கு ஆதரவு கொடுத்தாங்க... ஒருவழியா 'இங்ஙனே ஒரு நிலா பக்ஷி'ன்னு முதல்முதல்லே மலையாளத்துல நடிச்சேன்... அது ஒரு கலைப் படம். அதில் நடிச்சிட்டிருக்கும் போதுதான் 'விரும்புகிறேன்' படத்தில் நடிக்கக் கூப்பிட்டாங்க...'' என்கிறார் சினேகா.



சினிமா பற்றி பிறகு கேட்டுக் கொள்ளலாம் என்ற முடிவோடு, துபாய் வாழ் இந்தியர்கள் லைஃப் ஸ்டைல் பற்றிக் கேட்டோம்.

''துபாய்ல மலையாளிகளும், தமிழர்களும்தான் அதிகமாக இருக்காங்க. குடும்பத்தை இந்தியாவில் விட்டுட்டு, பணம் சம்பாதிக்கிறது ஒன்றுதான் லட்சியம்கிற வெறியோட நிறைய பேரைப் பார்க்கலாம். அதேமாதிரி பணம் மட்டும் முக்கியமில்லேன்னு எங்களை மாதிரி குடும்பத்தோடு செட்டிலானவங்களும் நிறைய இருக்காங்க. தாய்நாட்டை விட்டுத் தூரத்துல இருக்கிறதாலே, நம்ம கலாசாரத்தின் மேல் ரொம்ப பற்று வெச்சிருக்காங்க... இந்தியாலேர்ந்து ஏதாவது கல்சுரல் புரோகிராம்ன்னா லீவு போட்டுட்டு, கெட்டு கெதர் மாதிரி கூடிடுவாங்க. அங்கே இந்து முஸ்லீம் வித்தியாசமெல்லாம் கிடையாது. துபாய் பெரிய மஸ்ஜித் பக்கத்திலேயே கிருஷ்ணன் கோவில் இருக்கு. இரண்டுக்கும் பத்தடிதான் இடைவெளி. இன்னும் சிவன் கோவில், அய்யப்பன் கோவில் எல்லாம் இருக்கு. மகரஜோதி டைம்ல அங்கே மாலை போடும்போது ரொம்ப விசேஷமாக இருக்கும். தீபாவளி, பொங்கல், நவராத்திரி டைம்ல, சென்னையிலே இருக்கிற மாதிரியே இருக்கும்'' என்று துபாய் வாழ்க்கையைப் புகழ்ந்து தள்ளிக் கொண்டிருந்த சினேகாவிடம்...

**''இங்கிருந்து வேலைக்கு வரும் தமிழர்களை அரேபியர்கள் கொடுமைப் படுத்துவதாக அடிக்கடி செய்தி வருதே... அதெல்லாம் பொய்யா''** என்றோம்.

''தமிழ்நாட்டில் இருக்கிற ஏஜெண்ட்டுகள்கிட்டே ஒரு லட்ச ரூபாயைக்

கொடுத்துட்டு ஏமாந்துடுறாங்க. அவங்க தொண்ணூறு நாட்களுக்கு எடுத்துக் கொடுக்கிற விசிட் விசாவை வேலைக்கான விசான்னு நம்பி, விவரம் தெரியாமல் வந்து இறங்கிட்டு, நிறைய பேர் கஷ்டப்படுறது உண்மைதான். இங்கே வந்து நிறையச் சம்பாதிக்கனும்னு ஆசைப்படுறதை விட்டுட்டு, அந்த ஒரு லட்ச ரூபாய்க்குத் தமிழ் நாட்டிலேயே பெட்டிக் கடை வெச்சாகூட நல்லா சம்பாதிக்கலாம். விவரம் தெரிஞ்சவங்க யாரும் இப்படி ஏமாற மாட்டாங்க...'' என்ற சினேகாவைச் சினிமா பக்கம் இழுத்தோம்.

**''விரும்புகிறேன் படத்திற்கு, கதாநாயகி தேர்வு செய்ய, ஒரு பிரபல வார இதழில் போட்டி வைத்தார்கள். அதில் தானே நீங்கள் தேர்வு பெற்றீர்கள்?''** - கேட்டு முடித்தவுடன் உஷ்ணம் தலைக்கேறுகிறது சினேகாவுக்கு.

''இது வடிகட்டினப் பொய். தயாரிப்பாளரும், டைரக்டரும் எனது போட்டோவை முதலில் பார்த்துவிட்டு, பிறகு நேரில் பார்த்து ஓ.கே செய்தார்கள். வெளியே இருந்து நிறையப் பேர் பத்திரிகைக்கு எழுதிப் போட்டிருப்பாங்க. அவங்கெல்லாம் ஏமாந்து போய்விடக் கூடாது, மேகசின் வழியா நான் செலக்ட் ஆனேன்னு பொய் சொல்லச் சொன்னாங்க... ஆனால் நான் ஒத்துக்கலை... அப்படிச் சொல்லியிருந்தா என் நிலமை என்ன ஆகியிருக்கும் நினைச்சுப் பாருங்க'' என்று மூச்சிரைத்த சினேகாவை **''விரும்புகிறேன் படத்திற்குக் கால்ஷீட் தராமல் இழுத்தடிக்கிறீர்களாமே?''** என்று மறுபடியும் கோபப்படுத்தினோம்.

''அறிமுகமாகிற தமிழ்ப் படமாச்சேன்னு போன வருடம் மே, ஜூன், ஜூலை மூன்று மாதம் கால்ஷீட் கொடுத்தேன். அந்த மூணு மாதமும் வேறு படத்தில் நடிக்கக் கூடாதுன்னு கையெழுத்து வாங்கிட்டாங்க. ஆனால் ஹீரோ பிரசாந்த் இந்த மூன்று மாதமும், மலேசியா, சிங்கப்பூர், ஜெர்மனின்னு ஜாலியா டான்ஸ்புரோகிராம் நடத்தப் போய்ட்டார். நான் வீட்லே வெட்டியா சும்மா இருந்தேன்... படம் லேட்டா ஆனதுக்குக் காரணம் யாருன்னு இப்போ தெரியுதா?'' என்றார்.



**''தலைவரைப் பார்த்துதான் நான் புளுகவே கத்துக்கிட்டேன்!''**

**''உனக்கு அவர்தான் 'ரீல் மாடல்'னு சொல்லு!''**

**— அம்பை தேவா**

''ரசிகர்கள் என்ன சொல்கிறார்கள்'' என்றால்.... ''என்னோட கண் ரொம்ப பவர்ஃபுல்லா இருக்காம்... தயவு செஞ்சு கிளாமரஸா நடிக்காதீங்க... உங்களுக்கு அது ஒத்து வராதுன்னு லெட்டர் போடுறாங்க... அதனால் பேமிலி ரோல்ஸ், காலேஜ் கேர்ள்; இதுமாதிரி நடிப்புக்கு ஸ்கோப் இருக்கிற ரோல் மட்டும் செய்யலாம்னு இருக்கேன்'' என்று சொல்லும் சினேகா... பாலச்சந்தரின் 'பார்த்தாலே பரவசம்'; கமலோடு 'பம்மல் கே சம்பந்தம்' என்று முன்னேறிக் கொண்டிருக்கிறார்.

''விரும்புகிறேன் படத்திற்காக மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கோபுரத்தில் ஏறி ஒரு கையால் கோபுர கலசத்தைப் பிடிச்சுக்கிட்டு, இன்னொரு கையால் பிரசாந்துக்கு டாட்டா காட்டுவேன்... அந்தக் காட்சி முடிந்து கீழே இறங்கியதும் கோவில் தர்மகர்த்தா எங்கிட்டே வந்து அந்தக் கோபுர கலசத்தைத் தொட்ட முதல் பெண் நான்தான் என்று சொன்னார். எனக்குச் சந்தோஷத்திலே அழுகையே வந்துடுச்சு...'' என்ற சினேகாவுக்கு, இப்போது இன்னொரு ஆசை, ஸ்ரீரங்கம் கோபுர கலசத்தையும் தொட்டுப் பார்க்க வேண்டுமாம்...!

சந்திப்பு: **விஷுவல்தாசன்**

படங்கள்: **ஐரிஸ்**

# செல்லாத் காசு

மெலட்டூர் இரா. நடராஜன்

தெரு முனையில் என்றும் இல்லாத அளவுக்கு ஏகமாய்க் கூட்டம். சாதாரணமாக சிவராமன், தான் உண்டு தன் வேலையுண்டு என்று மாலை வாக்கிங்கை முடித்தோமா, வீட்டுக்குள் சென்று அடைந்தோமா, என்றடைப்தான். ஆனால் கூட்டத்திலிருந்து வந்த சப்தமும் மக்களின் பரபரப்பும் அவரைச் சலனமடையச் செய்தன. ஏழரை மணிக்குத் தான் டீ.வி. சீரியல். அது வரை என்ன செய்ய? கொஞ்ச நேரம் வேடிக்கை பார்த்துவிட்டு வந்தால் என்ன?

கூட்டம் அடர்த்தியாக இருந்தது. இலேசில் உள்ளே நுழைய முடியவில்லை. கொஞ்சம் இங்கே அங்கே சுற்றி இண்டு இடுக்கை ஆராய்ந்து ஒரு வழியாக உள்ளே நுழைந்து விட்டார். எட்டிப் பார்த்ததில்,

ஒரு சோனிக் கிழவன் சைக்கிளில் சுற்றிக் கொண்டிருந்தான். மத்தியில் ஒரு அழுக்குத் துணி விரிந்து கிடக்க, அங்கும் இங்குமாகச் சில்லறைகள். ஒரு பெண் தண்ணீர்க் குடம் ஒன்றை வட்டத்துக்குள் வைத்தாள். இரண்டு முறை சாதாரணமாகச் சுற்றி வந்த கிழவன் திடீரெனக் குனிந்து தண்ணீர்க் குடத்தை எடுத்து தலைமீது வைத்துக் கொண்டான். கைகளை விட்டுவிட்டான். கூட்டத்தினர் கைதட்டி ஆர்ப்பரிக்க, சில்லறைகள் விழுந்த



வண்ணம் இருந்தன.

மக்கள் என்னவோ ஆர்ப்பரித்து மகிழ்ந்தாலும் சிவராமனால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. கிழவனுக்கு அறுபது வயது இருக்கலாம். வித்தை காட்டுகிற வயசா இது? எழுபத்து மூன்று வயதில் இரண்டு முறை இரண்டாவது மாடி ஏறவே சிவராமனுக்கு மூச்சு வாங்குகிறது. கிழவன் இந்த வயதில் தன்னை இப்படி வருத்திக் கொண்டு வீதி வீதியாகப் போய் வித்தை காட்டிப் பிழைக்க வேண்டிய அளவுக்கு என்ன கஷ்டமோ?

சிவராமனுக்கு மனசு பொறுக்கவில்லை. வெளியே வந்துவிட்டார். விடுவிடுவென நடையைப் போட்டார். மனசெல்லாம் சங்கடம். ஏன் போய்ப் பார்த்



தோம் என்றாகிவிட்டது. அது சரி. கிழவன் பிழைப்புக்காகத் தன்னை வருத்திக் கொள்கிறான். இதில் சிவராமனுக்கு வருத்தப்பட என்ன இருக்கிறது? கிழவனில் தன்னைப் பொருத்திப் பார்த்ததில் வந்த விளைவோ?

சிவராமன் ரிடையர் ஆகி பதினைந்து வருடங்கள் ஆகிவிட்டன. ரிடையர் ஆனபோது பிர்ராவிடண்ட் ஃபண்ட் பணம்தான் கிடைத்தது. பென்ஷன் இல்லை. கிராஜுவிட்டி எல்லாம் சேர்த்து மொத்தமாக ஒரு லட்சத்து இருபத்தி எட்டாயிரம் கொடுத்தார்கள். நல்ல வேளையாக ரிடையர் ஆவதற்கு முன்பே மூன்று பெண்களுக்கும் திருமணம் செய்து விட்டார். அடித்துப் பிடித்து எண்பதினாயிரத்தில் அறுநூறு சதுர அடியில் இரண்டாவது மாடியில் தண்ணீருக்கு ஆலாய்ப் பறக்கும் மேற்கு மாம்பலத்தில் பிளாட்தான் வாங்க முடிந்தது. அதை அவர் ஆத்மா பெயரில் வாங்கியது எவ்வளவு பிசகு என்பதை பிறகுதான் உணர முடிந்தது.

ஆத்மா ஒரே மகன். இன்னமும் நிலையான வேலையில்லை. நாற்பது வயதிலும் கம்பெனிக்குக் கம்பெனி மாறிக் கொண்டிருக்கிறான். பையன் துரதிர்ஷ்டம் என்றால் வாய்த்த மருமகள் அதிர்ஷ்டம். சாந்தியின் சப்போர்ட் மட்டும் இல்லையென்றால் இன்னேரம் இந்தக் கிழவன் மாதிரி வீதிக்கு வந்திருப்பாரோ என்னவோ?

பி. எஃப் பணத்தின் மிச்சத்திலிருந்து சில ஆயிரங்களுக்குத் தன் மூன்று பெண்களுக்கும் கிரைண்டர், பீரோ மாதிரி சிலவற்றை வாங்கிக் கொடுத்தார். அது ஆத்மாவுக்குப் பிடிக்கவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக உரசல்கள் அதிகமாகி ஒரு வழியாக இருவருக்கும் பேச்சுவார்த்தை நின்றே போனது. அதன் பிறகு எல்லாம் சாந்தி மூலமாகத்தான்.

ரிடையர் ஆனதில் கசண்டு போல மிச்சமிருந்த இருபதினாயிரம் ரூபாய்க்கும் பிறகு கேடு வந்தது. சாந்தியின் இரண்டாவது பிரசவத்தில் ஏகப்பட்ட சிக்கல். என்ன ஏது என்று புரியாமலே தொடர்ச்சியாய்ச் சில ஆபரேஷன்கள்.

சிவராமன் கையில் சுத்தமாக சல்லிக் காசில்லை. புகையிலைக்கும் புளிப்பு மிட்டாய்க்கும் சாந்தி மூலமாகக் கேட்டுப் பெற வேண்டியிருக்கிறது. சாந்தி அவ்வப்போது கொஞ்சம் அதிகமாகவே கொடுத்தாலும் ஆத்மா கணக்கு எழுதுகிறேன் பேர்வழி என்று சிவராமனை நோகடிப்பான். ஒரு முறை பேரன் ராகவ், மூன்று சக்கர சைக்கிள் வேண்டும் என்று தாத்தாவை நச்சரிக்க, 'அப்பாவிடமிருந்து என் பணத்தை வாங்கி சைக்கிள் வாங்கித் தருகிறேன்' என்று சொல்லிவிட்டார். சாந்தி மூலமாக சொன்னதற்கு ராகவுக்கு எப்போது சைக்கிள் வாங்கித்தர வேண்டும் என்று எனக்குத் தெரியும். அப்பாவை வம்பு செய்யாமல், சும்மாயிருக்கச் சொல் என்று அவன் கத்த, என் பணம் உன் பணம் என்று வீடே ரகளையானது.

சிவராமன் செல்லாக் காசாய்ப் போய் விட்டார்.

சரி. இங்கே இருந்தால்தான் மனஸ்தாபம் என்று சில நாட்களுக்குத் தன் பெண்களைப் பார்க்கச் சென்றால், எனக்குச் செலவு வைக்க வேண்டுமென்றே அப்பா அடிக்கடி அக்காக்களைப் பார்க்க போய்விடுகிறாரா?' என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு கத்துவான். இத்தனைக்கும் மூன்று டஜன் வாழைப்பழங்களும் சில பிஸ்கட் பாக்கெட்டுகளும்தான்.

ஆத்மா ஒன்றைப் புரிந்து கொள்ளவில்லை. தாம் பணத்தைத் திருப்பிக் கேட்பது ஏதோ தொடர்ச்சியாகச் செலவு செய்வதற்கு என நினைத்துக் கொண்டிருக்கிறான். தன்னிடம் பணம் இருப்பது ஒரு பாதுகாப்புக்கும் ஒரு மரியாதைக்கும் என்பதை எப்படிப் புரிய வைப்பது? சாந்தியும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாயிற்று. அவனுக்குத் தன்னால்தான் அப்பாவுக்கு அவஸ்தை என்ற சுயபச்சாதாபம் வேறு.

---

**"கௌரவ நடிகர்னு டைட்டில் போடாம கௌரவக் குறைவு நடிகர்னு போடுறாங்களே... ஏன்?"**

**"படத்தை முடிச்சுக் குடுக்காம கடைசி நேரத்துல சம்பளம் கேட்டு ரொம்பத் தொந்தரவு பண்ணினாராம்!"**

**- அம்பை தேவா**



போன வாரம் ஒரு வழியாகச் சொல்லி முடித்து விட்டான். அவனுக்கு ஆபீஸில் ஏகப்பட்ட டென்ஷனாம். தன்னைத்தான் சரியாகப் படிக்க வைக்கவில்லை. நல்ல வேலையில் சேர்த்து விடவில்லை. தன் அக்காக்களைக் கவனித்துக் கொண்ட மாதிரி தன்னைக் கவனிக்கவில்லை. இனி மேல் கொண்டாவது தனக்கு மனக் கஷ்டங்களை கொடுக்காமல் சும்மாயிருக்க சொல் என்று வழக்கம் போல சாந்தி மூலமாகச் சொல்லி விட்டான். பாவம் அந்தப் பெண். ஸ்விட்ச் போட்ட மாதிரி அழுகிறது. எங்கே இந்தப் பிரச்னையால் மீண்டும் ஏதாவது அவள் உடம்புக்கு வந்துவிடக் கூடாதே என்று சிவராமன் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். செல்லாக் காசாய், சொச்ச காலத்தைத் தள்ள வேண்டும் என்பது தலையெழுத்து என்பதை மனசளவில் ஏற்றுக் கொண்டு விட்டார். எல்லாவற்றுக்கும் மரணம்தான் சரியான தீர்வு. ஆனால் அது வர மாட்டேன் என்கிறதே!

**வா**சலில் இருந்த வாட்ச்மேன் சாந்தி வெளியே போயிருப்பதாகச் சொன்னான். சாவி வாங்கிக் கொண்டு, தானே கதவைத் திறந்து தனியாக வீட்டில் இருக்க சிவ ராமனுக்கு அலுப்பாக இருந்தது. அந்தக் கிழவனை மீண்டும் ஒரு முறை போய்ப் பார்த்துப் பேசிவிட்டு வந்தாலென்ன? சைக்கிள் கூத்தும் இந்நேரம் முடிந்திருக்கும்.

சிவராமன் எதிர்பார்த்த மாதிரியே கிழவன் சில்லரை காசுகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தான். சைக்கிள் ஓரமாக சாத்தப்பட்டு இருந்தது. அதுவும் அவனை மாதிரியே நோஞ்சானாய் இருந்தது.

அப்போதுதான் சிவரமனுக்கு ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. எல்லோரும் சில்லறை போட்டார்களே. தான் ஒன்றுமே அவனுக்குக் கொடுக்கவில்லையே. வேடிக்கை மட்டும் பார்த்துவிட்டு ஒன்றும் கொடுக்காமல் போவது பிசகல்லவா?

சட்டைப் பையைத் துழாவினார். ஒரே ஒரு ஐம்பது ரூபாய் நோட்டு இருந்தது. தனக்குப் பாதுகாப்பும் மரியாதையும்தான் பிரச்னை என்றால் இவனுக்குச் சோறு கிடைப்பதே பெரிய பிரச்னை.

ஏதோ ஒரு வேகத்தில் ஐம்பது ரூபாயை அவன் அழுக்குத் துணியில் போட்டார். குனிந்து சில்லறைகளை எண்ணிக் கொண்டிருந்தவன் ஐம்பது ரூபாய்த் தாளை



"இது கிராமத்துக் கதைதானே. எதுக்கு பாரீஸ்லே ஷூட்டிங் வைக்கணும்?"

"ஹீரோ இன்னும் அதைப் பார்த்ததே இல்லையாம்!"

*- தஞ்சை தாமு*

பார்த்ததும் திடுக்கிட்டு நிமிர்ந்தான். அவன் பார்வையில் மிரட்சி இருந்தது.

"ஐயா ரொம்ப நன்றிங்க."

"ஏம்பா. இந்த வயசுல சைக்கிள் மிதிச்சு வித்தை காட்டறயே. கஷ்டமாயில்லை? உடம்பு தாங்குமா?"

"என்னங்க செய்யறது. மூன்று பசங்க இருக்காங்க. இருந்தும் சரியில்லை. ஒரே ஒரு பொட்டை புள்ளே. அதுவும் சீக்காளியா போகச் சொல்ல அவ வூட்டுகாரன் வுட்டுட்டுப் போயிட்டான். கொஞ்ச நாள் பிச்சை எடுத்துப் பார்த்தேன். ரொம்ப அவமானமா இருந்திச்சு. சரி, எனக்குத் தெரிஞ்சது இது ஒண்ணுதான். ஏதோ மருவாதையோட சம்பாதிக்கறேன். தெம்பு இருக்கங் காட்டிப் பொழப்பு ஓடுது. அப்பால. அவன் பார்த்துப்பான்."

கிழவன் மேலே காட்டினான்.

"சரிப்பா. உடம்பு வலுவுக்கேத்த வேல செஞ்சு பொழைச்சுக்கோ. வருமானம் கம்மியா இருந்தாக்கூட பரவாயில்லை. ஏடாகூடமா நாம ஏதாவது செஞ்சுட்டு மத்தவங்களுக்குப் பாரமா போயிடக் கூடாதில்லையா? அந்த ஆதங்கத்துல சொல்லறேன்."

"ஒங்க நல்ல சொல்லுக்கு எனக்கு அது மாதிரி எதுவும் வாராதுங்க. ரொம்ப நன்றிங்க."

சிவராமனுக்கு ரொம்பத் திருப்தியாக இருந்தது. மனசு ஒப்பிக் கொடுக்கும்போது தான் எவ்வளவு மகிழ்ச்சி.

## டி.வி. கம்ப்யூட்டர்!

இனி கம்ப்யூட்டர்களுக்கென தனி ஸ்கிரீன் தேவையில்லை. வீட்டிலுள்ள



டி.வி. திரையைப் பயன்படுத்தி கம்பியில்லா கீ-போர்டு மூலம் இன்டர்நெட், ஈமெயில் தொடர்பு கொள்ளலாம். டி.வி., கம்ப்யூட்டர் இரண்டுமிணைந்த இந்த வகை டி.வி.க்களே இப்போது ஐரோப்பாவில் பிரபலம்.

*- பாரீஸ் பார்த்தசாரதி*

திரும்பி பாதி தூரம் வந்தவருக்குச் சொரேலென்றது. சாயந்திரம்தான் சாந்தி அந்த ஐம்பது ரூபாயைக் கொடுத்தாள். ராகவுக்கு நாளை ஸ்கூல் திறக்கிறது. பிரட்டும் பட்டரும் வாங்கிவிட்டு மிச்சப் பணத்தைக் கைச்செலவுக்கு வைத்துக் கொள்ளச் சொல்லியிருந்தாள்.

ஐயையோ! இப்போது என்ன செய்ய? சாந்தியிடம் போய் விஷயத்தைச் சொல்லி மேலும் இருபது ரூபாய் கேட்பதா? கேட்டால் என்ன நினைப்பாள்? ஆத்மாவை எப்படிச் சமாளிப்பது? நானே ஒரு செல்லாக் காசு. இதில் கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தாயிற்று.

சிவராமன் செய்வதறியாமல் தவித்தார். கிழவனிடம் மீண்டும் போய் இருபது ரூபாயை மட்டும் கேட்டால் என்ன? ஆனால் அதை உடனே நிராகரித்தார். சே, தானம் கொடுத்ததைத் திருப்பிக் கேட்பது கேவலம். வேண்டாம். சாந்தியிடமே... சாந்தி வேறு வீட்டில் இல்லையே. இரண்டு தப்படி முன்னே போவதும், திரும்பி வருவதுமாக சிவராமன் திண்டாடினார். கடைசியில் கிழவனிடம் வெட்கத்தை விட்டுக் கேட்டு விடுவது என்று தீர்மானித்துவிட்டார்.

கிழவன் சைக்கிள் அருகில் நின்று கொண்டிருந்தான். தயங்கி தயங்கி அவன் அருகில் போய்த் தலையைச் சொறிந்தவாறே நின்றார். எப்படி கேட்பது? பேச்சு வரவில்லை.

"என்னங்கய்யா?"

"அது வந்துப்பா. எங்கிட்ட சில்லறை இல்லே. உன் கஷ்டத்தைப் பார்த்தபோது சில்லறை மாத்தறது பெரிசாப் படலை. அதான் ஐம்பது ரூபாயையும் அப்படியே போட்டுட்டேன். அப்புறந்தான் என் மண்டைக்கு ஒறைச்சது. இருபது ரூபாய்க்கு இப்போ உடனடியா செலவு இருக்கு. அதனால நீ முப்பது ரூபா எடுத்திட்டு..."

"என்னாங்க சாமி. என்னென்னவோ பேசிக் கிட்டு. உங்களோட பெரிய மனசே போதுங்க. இந்தாங்க இருபது ரூபா."

கிழவன் கொடுத்த அந்த இருபது ரூபாயை லட்ச ரூபாய் மாதிரி பத்திரமாக பாக்கெட்டுக்குள் வைத்துக் கொண்டு மிகுந்த தளர்வோடு திரும்பினார். சே. என்ன முட்டாள்தனம். செல்லாக் காசுக்குத் தான தர்மம் ஒரு கேடா?

கொஞ்ச தூரம்கூட தாண்டியிருக்க மாட்டார். பின்னாலிருந்து அவர் தோளை யாரோ தொட்டார்கள். திரும்பியதில் கிழவன் சைக்கிளோடு நின்று கொண்டிருந்தான்.

"ஐயா. மன்னிக்கனும். என் பேச்சுக்கு கோவிச்சுக்கக் கூடாது. எனக்குள்ள எவ்வளவு துக்கமிருக்குதுன்னு நீங்க எப்படி உணர்ந்தீங்களோ அந்த மாதிரி உங்களுக்குள்ளேயும் ஏதோ நோவு இருக்குதுன்னு எனக்குத் தோணுதுங்கய்யா. என்னோட கஷ்டத்தை விட்டுத் தள்ளுங்க. அது என்னோட விதி. என் கூடவே பொறந்தது. அதை நாந்தான் கவனிக்கோணும். உங்களைக் கஷ்டப்படுத்தறது ரொம்ப பாவங்க. அதனால் தயவு செஞ்சி தப்பா எடுத்துக்காம இந்த முப்பது ரூபாயையும் வாங்கிக்குங்க. உங்களைகாட்டியும் எனக்குக் கொஞ்சம் வலு இருக்குது. உங்க நல்ல மனசுக்கு நீங்க சொகமா இருந்தா அது போதுங்க. இந்தாங்க."

சட்டைப்பையில் மூன்று பத்து ரூபாய்த் தாள்களைத் திணித்துவிட்டு சைக்கிளை மிதித்துப் போய்விட்டான் கிழவன். ●

Be an insurance agent
(Part-time/ full-time) for
**L.I.C. of India**

## LOOK FORWARD TO A BRIGHT FUTURE

**WALK IN INTERVIEW 20.6.01 To 2.6.01**
**between 10.00 a.m.to 5 p.m**

If you are above 18 years of age, male or female, and want more out of life, here's your big chance. We at LIC, are looking for agents in chennai. We offer you Attractive Commission, Excellent Training, Interest free Loans for purchase of Two-wheeler/Car, Telephone Installation and Rent, Computer, Housing loans at 5.25%, Grautity, Group Insurance etc., depending on performance and more.

For further Information:

Call:2455669
B. SWAMINATHAN
Development
Officer,

Life Insurance
Corporation of India
City Branch II,
Mamatha Complex,
25, Whites Road,
Royapettah,
Chennai - 14.


## மூளை, மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு கிருபாலயா சிறப்பு பள்ளி

கிருபாலயாவில் படிப்பில் பின் தங்கிய, சிறிது உடல் ஊனமுற்ற கண், காது, வாய் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு (3 மாதம் முதல் 20 வயது வரை) பாட்டு, நடனம் பயிற்சி, யோகா, நீச்சல், தற்காப்பு கலைகளோடு நிரந்தர தொழிற்பயிற்சி மற்றும் சிறப்பு கல்வி பயிற்சியும் உண்டு.

குறிப்பு: தினம் 6 மணி முதல் 8 மணிவரை படுக்கை வாதம், பக்கவாதம், திக்கல், திணறல், சிறப்பு மருத்துவ பகுதி செயல் படும்.

ஆசிரியர்கள் தேவை.

**KRUBALAYA EDUCATIONAL TRUST**
**57, Ariya Gowder Road,**
**West Mambalam, Chennai-33**
**Ph: 4710019, 4780691**



## "இந்த மழைக்காலத்தில் பாதுகாப்பீர் உங்கள் வீட்டை தூசுகள் நுழையாமல்"

மழைக்காலம் என்றாலே வீட்டில் சகதியும், அழுக்கும் படிவது இயல்பு. ஆனால், இந்த பிரச்சினைக்கு இதோ ஓர் தீர்வு. டியூரோடர்ஃப் டோர்மேட். சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ள இதன் குச்சங்கள் மிக அடர்த்தியான தூசுகளையும் கண்களுக்கு தட்டுப்படாமல் அகற்றி வெளியில் நிறுத்தி விடுகின்றன. கண்களை கவரும் வண்ணங்களில் வசதியான அளவுகளில் கிடைக்கின்றன. உங்கள் வீடு தூசுகளின்றி எப்போதும் சுத்தமாக விளங்கும் என்பதை டியூரோடர்ஃப் உறுதி செய்கிறது.



அம்சங்கள்:

**DuroTurf**
DOOR MATS

Shalimar Lifestyles, B-4 (1), Todi Complex, 35, Saki Vihar Road, Andheri (E), Mumbai - 400 072. Tel- 857 0860 / 62. Fax: 857 5672. E-mail- mil@timemauser.com Bangalore: Tel-5295702/5274386, Baroda: Tel- 344410/320668, Chandigarh: Tel 646542/666357, Chennai: Tel-6411396/735, Hyderabad: Telefax-3410003/1283, Kolkata: Tel-4140117/18, Sahibabad: Tel 4778340/41 MindWare/Jcpl



'கடவுளே!' என்று வேண்டிக் கொள்கிறபோது எல்லோருமே வானத்தை நோக்கித்தான் வேண்டிக் கொள்கிறார்கள். மேலே சூரியன் இருப்பது மட்டும் காரணமில்லை. நம்மைவிடவும் அறிவுஜீவிகள் வானத்தில் எங்கோ இருக்கிறார்கள் என்கிற நம்பிக்கை எப்படியோ எல்லா மதங்களிலும், நாடுகளிலும் ஏற்பட்டுவிட்டது. 'அறிவுஜீவிகள் என்று சொல்லாமல், கடவுள் பரமபிதா, பரம்பொருள், தேவன் என்றெல்லாம் குறிப்பிடுகிறார்கள், அவ்வளவுதான்' என்பது ஒரு சாராரின் சிந்தனை!

சூரியன் என்பது நம்முடைய குடும்பத்தின் தலைவன் மாதிரியான ஒரு நட்சத்திரம்தான் என்பது தெரியும். இதுபோல் எண்பது ஒளி ஆண்டுத் தொலைவுக்குள் உள்ள 773 நட்சத்திரங்களை ஆராய்ந்து அங்கேயுள்ள புத்திசாலிகள் எவராவது தென்படக்கூடுமா என்று ஆராயும் ஒரு திட்டம் வகுத்தார்கள். மிக நீண்டகால ஆராய்ச்சியின் தொடக்கமான இந்தத் திட்டம் SETI (Search for Extra Terrestrial Intelligence) என்று வழங்கப்படுகிறது. 'பூமிக்கு அப்பாலுள்ள புத்திசாலிகளைத் தேடுதல்' என்று தமிழ்ப் படுத்தலாம்.

இதற்காக, ஐந்தாண்டுகளுக்கு மட்டும் யுஎஸ். பட்ஜெட்டில் 1983ல் ஒதுக்கிய தொகை பதினைந்து லட்சம் டாலர்கள். ஒரு கட்டத்தில் இது மிகவும் அசாத்தியமான திட்டம் என்பதாகப் பத்திரிகைகள் எழுதி, ஏறக்குறையக் கைவிடப்பட்டேவிட்டது. 'நாஸாவின் முட்டாள்தனமான கூட்டம்' என்ற தலைப்பிட்டே ஒரு பத்திரிகை கட்டுரை எழுதியது.

ஆனாலும், பன்னிரண்டு நாடுகளைச் சேர்ந்த அறுபத்தொன்பது விஞ்ஞானிகள் கூட்டாகக் கையொப்பமிட்டு 'ஸயன்ஸ்' இதழில் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்கள். "பூமிக்கு அப்பால் உள்ள புத்திசாலி உயிரினங்களைப் பற்றி ஆராய்வதில் நன்கு திட்டமிடப்பட்ட உலகளாவிய ஈடுபாடு அவசியம்தான்" என்று வலியுறுத்திய அந்த அறிக்கையில், நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள் ஏழு பேரும் கையொப்பமிட்டிருந்தார்கள்.

சூரியன், நம்முடைய பூமிக்கு வெகு அருகில், பதினைந்து கோடி கி.மீ. தொலைவில் உள்ள ஒரு நட்சத்திரம். இந்தச் சூரியனை நீண்ட இட்லி வடிவில் அமைந்த பால் வழி என்னும் 'மில்கி வே' நட்சத்திரக் கூட்டத்தின் ஓரத்தில் ஒட்டிச் சுழன்று வருகிற ஒன்றுதான். இந்தப் பால் வழியை 'நம்முடைய' பிரபஞ்ச நகரம் என்று வைத்துக் கொள்ளலாம். இதன் விட்டம் எண்பதாயிரம் ஒளி ஆண்டுகள்

# பூமிக்கு அப்பாலும் புத்திசாலிகள்!

என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஒளி ஓர் ஆண்டில் பயணம் செய்யக் கூடிய தொலைவு ஓர் ஒளி ஆண்டு எனப்படுகிறது. (ஓர் ஒளி ஆண்டுத் தொலைவு என்பது 9,40,800 கிலோ மீட்டர்கள்.)

இதில், சூரியன் சுற்று வட்டாரத்தில் எண்பது ஒளி ஆண்டுத் தொலைவு வரை ஆராயவே திட்டமிட்டது அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான நாஸா. இந்த ஆய்வின் எதிர்ப்பாளர்கள், அவ்வளவு தூரத்திலிருந்து நாம் தகவல்கள் பெறுவது சாத்தியமில்லை என்று சுட்டிக் காட்டினார்கள். வெளிமண்டலவாசிகளின் ஒலியைத் தொடர்புகொள்ள முடிந்தாலும் அவை நம்மை வந்தடைய பல நூறு ஆண்டுகள் ஆகும் என்றார்கள். ஆனால் கணினி யுகத்தில் இது ஒரு பிரச்னையே இல்லை. இது ஒரு நீண்ட காலத் திட்டம். நான்கு தலைமுறை கள், பத்து தலைமுறைகள் சென்ற பிறகு பலன் கிடைத்தாலும் நல்லது தான். சக்தி வாய்ந்த ஆண்டனாக் களை நிறுவி இதைச் செயல் படுத்த வேண்டும். இதற்காக பத்து கி.மீ. விட்டமுடைய ஆண்டனாவை நிறுவ வேண்டியிருக்கும் என்று கூடச் சொல்லப்பட்டது. எனினும், இது இன்றைக்கு நினைத்து நாளைக்கு முடிக்கிற காரியமில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்னால் பெங்களூரில் நடைபெற்ற உலக விண்வெளி ஆய்வு மாநாடு ஒன்றில் கலந்து கொண்ட இத்தாலி நாட்டு அறிஞர் டாக்டர் ரொபெர்ட்டோ பினோட்டி என்பவர், விமானங்கள் என்று ஹிந்து சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ள பல விவரங்களைத் தொகுத்து ஒரு பிரமிப்பூட்டுகிற கட்டுரையை வழங்கினார். 'விமானி சாஸ்த்ரா', 'ஸமாரங்கண சூத்ரதாரா' போன்ற பண்டைய இலக்கியங்களிலிருந்து சான்றுகள் காட்டி, நம்முடைய முன்னோர்கள் அயல் கிரகங்களின் அறிவுஜீவிகளோடு தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதை விளக்கினார். விமானங்களில் லாஸர் ராடார் போன்றவை உட்பட முப்பத்திரண்டு விதமான அறிவியல் நுட்பங்கள் சொல்லப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டினார். சூரிய மண்டலத்துக்கும் நட்சத்திர மண்டலங்களுக்கும் பயணம் போகக் கூடிய விண் ஊர்திகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் தொழில் நுட்ப அறிவை ஒதுக்கிவிட முடியாது என்று சொன்ன டாக்டர் பினோட்டி, பாரதத்தில் வாழ்ந்த அறிஞர்கள் மிகவும் உயர்தரமானவர்கள். ஆனால் அவர்களுடைய அறிவியல் நுட்பம் மறக்கடிக்கப்பட்டுவிட்டது" என்று குறிப்பிடுகிறார். ஹிந்து சாஸ்திரங்களை அறிவியல் கண்ணோட்டத்தில் மிகவும் நுட்பமாக ஆராய்ந்தாக வேண்டும் என்றும் டாக்டர் பினோட்டி வலியுறுத்துகிறார்.

அவ்வப்போது, பெரும் பொருட் செலவில் தயாராகி வெளிவருகிற, அயல் கிரகவாசிகளின் வருகை பற்றிய கற்பனைக் கதைத் திரைப்படங்கள் அயல் கிரகவாசிகள் பற்றிய சிந்தனைகளைத் தூண்டிவிடக் கூடும்.

ஆனால் பூமிக்கு அப்பாலும் புத்திசாலி உயிரினங்கள் வாழ்கின்றன என்பது இன்னும் சில நூறு ஆண்டுகளிலேயே நிருபணமாகி விடலாம்.

மகாகவி பாரதியின் பாடல் வரி ஒன்று நினைவுக்கு வருகிறது. - 'பூமிக்கெனை அனுப்பினான்; அந்தப் புத மண்டலத்தில் என் தம்பிகளுண்டு' பூமிக்கு 'அனுப்பியவனைத்' தேடுவதுதான் SETI.

— சுப்ர. பாலன்

நன்றி : நாஸா

# கிருஷ்ண கிருஷ்ணா

கணவன், மனைவிக்கு இடையில் சின்னச் சின்னச் சண்டைகள், சந்தேகமும்கூட சகஜம். அதற்கெல்லாம் விவாகரத்து என்று போய் விடக் கூடாது. போனால் சரிப் படாது என்பதே படத்தின் மையக்கரு.

தவறே செய்யாத கணவன் எஸ்.வி.சேகர், சூழ்நிலைக் கைதியாக மனைவி சுகன்யாவின் கண்களுக்கு மெகா சைஸ் தவறுகளைச் செய்யும் தறுதலையாகத் தெரிகிறார். கொதித்தெழும் சுகன்யா விவாகரத்துவரை போய் விட, கிளைமாக்சுக்கு முன்பாக அவருடைய சந்தேகங்களைத் தீர்த்து வைக்க, சினிமாவுக்குள்ளேயே ஒரு டிராமா போட வேண்டிய கட்டாயம் எஸ்.வி. சேகருக்கு!

போலீஸ் ஸ்டேஷனில் திருட்டுக் கல்யாணம் செய்து கொண்டு, அம்மா மனோரமாவுக்கு அதிர்ச்சி தருவதில் தொடங்கி... காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதையாக ஒவ்வொரு முறையும், மனைவி சுகன்யாவிடம் மாட்டிக் கொண்டு கெஞ்சுவது வரை, எஸ்.வி. சேகர் தமக்கே உரிய பாணியால், ஜெட் வேகத்தில் கிச்சு கிச்சு மூட்டி விடுகிறார்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு பெரிய திரைக்கு வந்திருக்கும் சுகன்யாவின் நடிப்பு ஓ.கே என்றாலும் பழைய துடிப்பும் துள்ளலும் மிஸ்ஸிங்.

சட்ட விதிகளை நம்பாமல் சமாதானத்தை நம்பும்,

# சிட்டிசன்



ஒரு சின்னஞ்சிறு மீன வக்குப்பத்தைக் கூண்டோடு ஜலசமாதி செய்துவிடும் ஒரு நீதிபதி உள்ளிட்ட, இரண்டு ஊழல் அதிகாரிகளை, சர்வைவர் அஜித் கடத்தி, நீதிமன்றத்தில் நிறுத்துவதுதான் கதை.

மூன்று வி.ஐ.பிகளையும் கடத்த,

அனுபவ வக்கீலாக விசுவும், ஆஸ்திக்கு ஆசைப்பட்டு மகளைத் திருமணச் சந்தையில் விற்க நினைக்கும் அம்மாவாக ஆச்சி மனோரமாவும் அசத்துகிறார்கள்.



வடிவேலுவுக்குப் பதிலாக கோவை சரளாவிடம் அடி வாங்குகிறார் ரமேஷ் கண்ணா. சரளா, அடி தடி ஆக்ஷன் மனைவி பாத்திரங்களை, இனி வில(ள)க்கி பரணில் கவிழ்த்து வைப்பது நல்லது. அத்தனை அபத்தம்!

பாமர ரசிகர்கள் மேல் பழியைப் போட்டு, வெண்ணிற ஆடை மூர்த்தியை விரசமூர்த்தியாகக் காட்டியிருப்பதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை.

எஸ்.ஏ. ராஜ்குமாரின் இசை பரவாயில்லை ரகம்.

இது மேடை நாடகம் இல்லை... சினிமாவாக்கும்...! என்பதை நினைவு படுத்தக் கேமரா கோணங்களையும், பேக்டிராப்புகளையும் அடிக்கடி மாற்றுகிறார்கள் ஆனாலும் எஸ்.வி. சேகரின் இயக்கத்தில் காமெடி நாடகம் பார்க்கிற உணர்வைத் தவிர்க்க முடியவில்லை.

● ஆவரெஜ்

## விஷுவல்தாசன்

விதவிதமாய் வேஷம் போட்டிருக்கிறார் அஜித். கெட் அப்புகளில் இருந்த பெப், கடத்தலில் சப்! ஆனாலும் அஜித்தின் அபார நடிப்பு முதல் பாதி படத்தைத் தூக்கி நிறுத்தி விடுகிறது. இடையிடையே படத்தின் வேகத்திற்கு முட்டுக்கட்டையாய் வந்து விடுகிறது வசுந்தராவின் டூயட் காதல்.

தமிழகத்தின் வரைபடத்திலிருந்து தொலைந்துபோய்விட்ட அத்திப்பட்டியைப் பற்றித் துப்புத் துலக்க வரும் சி.பி.ஐ அதிகாரி நக்மாவின் நடிப்பில் நூறு சதவீத மிடுக்கு. அதற்குக் கை கொடுத்திருக்கிறது அனுராதாவின் ஆண்மை தெறிக்கும் குரல். ஆனால் அஜித்தோடு தப்பிய, அவரின் வளர்ப்பு வாப்பா பாண்டியனை விட்டுவிட்டு, அஜித்தை மட்டும், நக்மா தேடுவது எந்த ஊர் லாஜிக்?

இப்படி இடிக்கும் லாஜிக் பட்டியலில் இருந்து நம்மைக் காப்பாற்றுகிறது, இரண்டாவது பாதியில் வரும் அத்திப்பட்டி ப்ளாஷ்பேக். அந்த முப்பது நிமிடமும் மீனவ அஜித்தைப் போல மூர்க்கத்தனமாய்க் கோபம் வருகிறது நமக்கும்! அத்தனை தத்ரூபம்.


பரட்டைத் தலை, கறை படிந்த பற்கள் சகிதம் அசல் மீனவனாக, கொட்டும் மழையில், கொச்சைத் தமிழில் அதிகாரிகளிடம் ஆவேசப்படும் மீனவன் அஜித், இலக்கணத் தமிழில், மேற்கத்திய இசை மெட்டில், 'மேற்கே உதித்த சூரியனே' என்று எழுச்சிப் பாடல் பாடுவதில் யதார்த்தம் துளியும் இல்லை. தேவாவின் இசையில் ஆல்பங்களின் வாசனை அதிகம். பாலகுமாரனின் உரையாடல் படத்திற்குப் பலம். ஊழல் அதிகாரிகளின் குடியுரிமை, பாஸ்போர்ட் இரண்டையும் பறிக்க வேண்டும் என்ற கிளைமாக்ஸைப் பாராட்டலாம் என்றாலும் ஒரு கண்ணிற்கு வெண்ணெய்; ஒரு கண்ணிற்குச் சுண்ணாம்பாய் அரசியல்வாதியை மன்னித்து விடுவது அபத்தம்.

ஒப்பனை நுட்பத்தில் ஒரு கை பார்ப்பது என்ற அஜித்தின் கனவு மெய்ப்பட்டிருக்கிறது. ஆனால் இயக்குநரின் செல்லுல்லாய்டு கனவு செல்லுபடியாகவில்லை. காரணம் பலவீனமான திரைக்கதை, பதற்றமான இயக்கம்.

● ஆவரெஜ்.

**சின்னத்திரை ஹீரோ விஜய் ஆதிராஜ் அண்மையில் திருமணம் செய்து கொண்டார். "எனக்கு இரண்டு திருமணம் நடந்தது. ஆனால் மணப் பெண் ஒருவர்தான்'' என்று சொல்லி சிரிக்கிறார் புதுமாப் பிள்ளை.**

இதென்ன கலாட்டா? என்றால் - 'ரசனா!' என்று அழைத்து, தம் புதுமனைவியை அறிமுகம் செய்து வைக்கிறார். ''எங்கள் திருமணம் காதல் திருமணம். இவள் வங்காளப் பெண். சென்னையில் பிறந்து வளர்ந்தவர். நான் தெலுங்கு. நான் பிறந்து வளர்ந்ததும் சென்னையில்தான். இருவருக்கும் நீண்ட நாள் காதல். இரு தரப்பிலும் பெரிய அளவில் எதிர்ப்பு ஏதுமில்லை. ஆனாலும் நான் நிரந்தரமாக இருந்த ஆபீஸ் வேலையை விட்டு விட்டு, டி.வி. சீரியல்களில் நடிக்க ஆரம்பித்து விட்டதால், வாழ்க்கையில் செட்டில் ஆனபின் திருமணம் செய்து கொள்ளுவது என்று முடிவு செய்தோம். அதன்படி, மே மாதம் எங்கள் திருமணம், இருதரப்பு பெற்றோர்களும் வாழ்த்த, நடந்தது" என்கிறார்.



ரசனா, அவளுடைய பெற்றோருக்கு ஒரே பெண். எனவே, பெங்காலி முறைப்படி அவளுக்குத் திருமணம் செய்து பார்க்க ஆசைப்பட்டனர். இருவீட்டாரும் கலந்து பேசி, மே மாதம் இருபத்தி மூன்றாம் தேதி மாலை, அவங்க முறைப்படித் திருமணம் செய்து கொண்டோம். அன்றே திருமண வரவேற்பும் முடிந்தது. மறுநாள் காலை தெலுங்கு வைதீகப்படி இரண்டாம் தடவையாக நானும் ரசனாவும் திருமணம் செய்து கொண்டோம்."

"இரண்டுக்கும் ஏதாவது முக்கியமான வித்தியாசம் உண்டா?"

"பெங்காலி திருமணத்தில், மணப்பெண்ணின் வகிட்டில் மணமகன் குங்குமம் இடுவதுதான் முக்கியமான சம்பிரதாயம். தெலுங்கு கல்யாணத்தில், தாலிக்குத்தான் முக்கியத்துவம். மற்றபடி, இரண்டிலுமே அக்னி சாட்சியாகத் திருமணம் செய்து கொள்ளுவது, சப்தபதி எல்லாம் உண்டு.

"சரி; ஹனிமூன் போகாமல், ஷூட்டிங் போய்க் கொண்டிருக்கிறீர்களே!"

"ஜூலை கடைசியில் ஃபாரின் போகலாம் என்றுபிளான். எங்கே என்று இன்னும் முடிவு செய்யவில்லை."

ஒரு ஹனிமூனோடு நிறுத்திக் கொள்வார்களா?...

— எஸ். சந்திரமௌலி

**திடீர்ப் பரிசுப் போட்டி – 12**

தலைப்பே வைக்காமல் ஒரு கட்டுரையான்னு நினைக்காதீங்க. தலைப்பு வைக்கிற பொறுப்பை வாசகர்கள்ட்ட விட்டுட்டோம். சிறந்த தலைப்புக்கு ரூ. 100 பரிசு உண்டு. ஜூலை 1ம் தேதிக்குள் அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்புதான் இறுதி. ஓகேவா?...

# மரண வாசனை

**மு.சித்தநாத பூபதி**

**யா**ரும் நம்புகின்றார்களோ, இல்லையோ... இறப்பிற்கு ஒரு வாசனை இருப்பதாகவே நான் உணர்கின்றேன். இது இறப்பிற்குப் பிந்தைய கெட்டவாடை இல்லை. ஒருவரின் மரணத்திற்குச் சிலகாலம் முன்பிருந்தே இஃது வெளிப்பட ஆரம்பித்து விடுகிறது. இப்படித்தான் ஒரு நாள் ஓவிய வாத்தியார் பாடம் எடுத்துக் கொண்டிருந்தபோது, திடீரென மூளையில் ஒரு மின்னல் வெட்டியது. அவரது சிரிப்பு விலங்கியல் ஆய்வகத்தில் வைக்கப்பட்டிருந்த எலும்புக்கூடு சிரிப்பது போன்றிருந்தது. மெல்ல மெல்ல அந்தச் சிரிப்பிலிருந்து ஒரு வாசனை பரவியது. அது அருவருக்கத்தக்கதாகவும் இல்லை; நுகர விருப்பம் உள்ளதாகவும் இல்லை. ஆனால் சகித்துக் கொள்ள முடிந்தது. நான் பக்கத்துப் பையனிடம் இந்த வாடை எங்கிருந்து வருகிறது எனக் கேட்டேன். அவன் பல நாள் குளிக்காமல் இருந்த தன்னைப் பற்றித்தான் நான் கேட்டு விட்டதாக நினைத்துக் கொண்டு "ஆடு மாடெல்லாம் குளிக்கவா செய்யுது. யானை பல் வௌக்கவா செய்யுது" எனத் தன்னையும் ஐந்தறிவாக்கி கூடவே "ஃபாரின்ல எல்லாம் ஒரு மாசத்துக்கு ஒருக்கா தான் குளிக்கிறானுக - அவனுக முன்னேறவில்லையா?" என அவர்களைத் தன்னுடன் ஒப்பிடுகின்றானா? அல்லது ஆடு, மாடுகளுடன் ஒப்பிடுகின்றானா? எனப் பிரித்தறிய முடியாதபடி ஒரு ஒப்பிலக்கணமே ஒப்பித்து முடித்தான். எனக்கு அந்த வாசனை பற்றிய நினைப்பே மறந்து விட்டது. ஆனால் பள்ளிக்கூடத்தில் ஓவிய சாரைப் பார்க்கும்போது மீண்டும் அதே வாசனை நுகர்வு.

இரண்டு வாரம் தான். ஹார்ட் அட்டாக்கில் ஓவிய வாத்தியார் காலமானார். பலருக்கு அதிர்ச்சி. நாற்பது வயதில் போய்ச் சேர்வது எத்தனை வடுக்களை விட்டுச் செல்லும் என்பதில் சோகம் சிலருக்கு. ச... மாணவர்களுக்கு ஏற்பட்ட சோகமோ வருத்தமோ, திகைப்போ, எதுவும் எனக்குத் தோன்றவில்லை. எனக்கு அது முன்னரே குறியீடுகளில் தெரிவிக்கப்பட்டுவிட்டதால் எனது பயமெல்லாம் அந்த வாசனையைச் சுற்றித்தான் இருந்தது. அந்த ஒரு மரணப் மட்டுமல்ல. எனக்குத் தெரிந்த பலருக்கும் இதே கதிதான். எண்பது வயதுப்பாட்டி இழுத்துக் கொண்டிருந்தபோது அந்த வாசனையும் சிரிப்பும் தோன்றவில்லை. மனம் சாவு இல்லையென நிச்சயம் சொல்லிவிட்டது. அது போலவே கிழவி நாலாம் நாள் டீக்கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தார். சாவுகளும், சாகாமையும் என்னைப் பயமுறுத்தின. எப்பொழுதும் உதறல். யாரைப் பார்த்தாலும் அந்த அதிர்வுள்ள வாசனை வருகிறதா இல்லையா எனச் சிந்திப்பதே வேலையாகிவிட்டது. புதையல் எடுத்த ராகக்கோனார், செல்வ ராஜேஸ்வரியின் பாட்டி என எனது கணிப் பிற்குப் பின் செத்தவர்களின் பட்டியல் நீண்டு கொண்டே இருந்தது.

இது எப்படி சாத்தியம்? மனிதனால் எதிர்காலத்தில் நடக்கப்போவதை யூகிக்க முடியுமேயன்றி எப்படித் திட்டவட்டமாக கணிக்க முடியும். ஐரோப்பாவில் ஒரு தையல்காரி சாவு நடக்கும் வீட்டிற்கு ஒரு நாள் முன்னதாகவே சென்று பிண உடை தைப்பாளாமே? அதுபோல எனக்கும் அமானுஷ்ய சக்தியா? இது கடவுளின் கிருபையா? சைத்தானின் கைவரிசையா ஏன்? ஏன்? எனக்கு மட்டும் ஏன் இப்படி

...ான் மட்டும் ஏன் ...ாவைப்பற்றி முன்னரே அறிந்து கொள்ள வேண்டும். எனக்கு எதிர்பாராத மரணச் செய்தி என்பதே கிடையாதா? தூரத்தில் உள்ள உறவினர்களின் மரண வாசனை கூட கனவில் வந்து விடுகின்றதே நான் தனிமையில் உடைந்து அழுகின்றேன். வெளியே சொல்ல பயமாக இருக்கின்றது. யார் என்ன சொல்வார்களோ? மாமியார் பிடிக்காத மருமகள் வந்து மரணத் தேதி கேட்பாளோ? பேப்பர்க்காரன் கட்டம் கட்டிச் செய்தி போடுவானோ? எல்லாம் குழப்பம்.



இன்றும் அதே வாசனை - புரிகிறது. அடுத்து ஒரு மரணம் நிச்சயிக்கப்பட்டுவிட்டது. எல்லாம் என் தலையெழுத்து. நான் அனுபவித்துத் தானே ஆக வேண்டும். யாராக இருக்கும்? கடவுளே வீட்டிக்குள்ளிருந்தே வருகின்றதே. அப்பாவுக்கா?

அப்பா பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். ஒரு சிரிப்பு போதும், கண்டுபிடித்துவிடலாம். மரண அலை வரிசையை உணர்ந்து கொள்ளலாம். பயமும் சோகமும் என்னைக் கவ்விக் கொள்ள, இந்த மரணமுன்னறிவிப்பு எனக்கு அவசியம் தானா? திடீரென அந்த அதிசயம் நிகழ்ந்தது. அப்பா திடீரெனச் சிரித்தார். இல்லை. அப்பாவுக்கு இல்லை. அப்பாவின் ஜீவிதம் உறுதியாக்கப்பட்டு விட்டது. ஆனால்...

வாசனை தொடர்கின்றதே. அம்மாவாக இருக்குமோ? அய்யோ இது என்ன சோதனை. இந்த வாசனை என்னை அலைக்கழிக்கின்றதே. ஒரு வாரத்தில் அம்மா, தம்பி ...ான் இறப்புக்கணிப்பிலிருந்துத் தப்பித்தார்கள்.

அப்புறம் யார், யாருக்குச் சிவலோகப் பதவி? யாருக்குச் சீட்டு கிழியப் போகிறதோ? எனக்குத் தெரியாமல் யார் சாக முடியும்? இயல்பு வாழ்க்கை இயல்பில்லாமல் நடந்து கொண்டிருந்தது. பாத்ரூமில் குளித்து விட்டு இதே சிந்தனையோடு தலை சீவிக் கொண்டிருந்தேன். டக்கென்று "பார்த்தேன். சிரித்தேன்" கண்ணாடி ஜோக் நினைவுக்கு வந்தது. சிரித்தேன்.

சிரிக்கும்போது கண்ணாடி பிம்பத்தின் வழியே மரண வாசனையின் தோழன் வந்துவிட்டான். கையெழவில்லை. கால்கள் செயலற்றுப் போகின்றன. அம்மா கதவைத் தட்டுகிறார்...

"அம்மா..." நான் அழைப்பது எனக்குக் கேட்கிறது... ஆனால் அம்மாவுக்கு...?

# அசோக் வழங்கும் அல்வாத் துண்டு!

ஸ்பிக் நிறுவனம் தனது ஊழியர்கள் முன் வி.ஆர்.எஸ். திட்டமொன்றைக் கடை விரித்தது... திட்டத்தை ஏற்று, பலர் வெளியேறினார்கள். இதனால் ஸ்பிக் நிறுவனத்துக்கு நன்மை விளைந்ததோ என்னவோ தெரியாது, ஆனால் கர்நாடக சங்கீத ரசிகர்களுக்கு ஓர் அருமையான அல்வாத்துண்டு கிடைத்திருக்கிறது - சி.டி. ரோம் வடிவில்!






உர நிறுவனத்துக்கும் சுவர நிறுவனத்துக்குமிடையே (அதாங்க சங்கீதம்) கல்லா மண்ணா ஆடிக் கொண்டிருந்த எஞ்சினியர் வித்வான் அசோக் ரமணி, வி.ஆர்.எஸ். திட்டத்தில் வெளியேறி, அதன் மூலம் கிடைத்த பணத்தையும் நேரத்தையும் முதலீடு செய்து, தமது தாத்தா பாபனாசம் சிவன் பற்றி ஓர் அருமையான சி.டி. ரோம் தயாரித்திருக்கிறார்.

'சங்கீத மாலா – தமிழ்த் தியாகய்யர் பாபனாசம் சிவன்' என்ற தலைப்பிலான இந்த சி.டி. ரோம் ஆங்கிலத்திலேயே அமைந்திருப்பதுதான் முதலும் முடிவுமான குறை. (மற்ற எல்லாமே நிறை!) சர்வதேச மார்க்கெட்டை உத்தேசித்து ஆங்கிலத்தை வரித்திருந்தாலும், இணைப்பு உரையைக் கடந்து வந்து, சிவனின் தமிழை சங்கீத சிம்மங்களின் குரலில் கேட்கும் போது சிலிர்க்கிறது.

இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த வாக்கேயக்காரர்களுள் ஒருவர் பாபநாசம் சிவன்.

வாக்கேயக்காரர் என்றால்...? மெட்டுக்குப் பாட்டோ பாட்டுக்கு மெட்டோ அமைக்காமல், சொல்லும் சங்கீதமும் சேர்த்துப் படைக்கிற அசாதாரண கலைஞரை வாக்கேயக்காரர் என்பார்கள். இதிலும் பாபனாசம் சிவனின் தனிச்சிறப்பு என்னவெனில் வெள்ளித் திரையிலும் சரி, வித்வத் சபையிலும் சரி அங்கீகாரமும் புகழும் பெற்றவர்.

ஆனால், இன்றைய தலைமுறைக்கு 'மன்மத லீலையை வென்றார்' பாடிய பாகவதரைத் தெரிந்த அளவுக்கு, அதை இசையுடன் இயற்றிய பாபநாசம் சிவனைத் தெரியாது. கண்ணதாசனின் புலமையும் எம்.எஸ்.வியின் திறமையும் ஒருத்தருக்குள்ளேயே புதைந்திருந்து பொங்கிப் பொங்கி வெளிப்பட முடியும் என்பதும் தெரியாது. ஒரே நபர், கனமான, சம்பிரதாயம் பிசகாத சாஸ்த்ரீய இசையிலும் மனோரஞ்சகமான மெல்லிசை மெட்டுகளிலும் சமமான லாகவத்துடன் தமிழைத் தொடுத்துப் பாமாலைகள் புனையக் கூடும் என்பதும் தெரியாது.

அசோக் ரமணியின் சி.டி. ரோம் இதைத் தெரிவிக்கிறது. இது மட்டுமின்றி, பாபநாசம் சிவனின் வாழ்க்கை, இசைப் பணி, தமிழார்வம், திரையுலகப் பணி (சில படங்களில் நடித்துமிருக்கிறார்), ஓர் இசையாசிரியராக அவர் ஆற்றிய பணி, பஜனை – ஹரிகதை சம்பிரதாயங்களில் அவருக்கிருந்த ஈடுபாடு, புலமை என்று விஷயச் செறிவுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.

எல்லாவற்றுக்கும் சிகரமாக, செம்மங்குடி முதல் கே.வி.என். வரை மூத்த தலைமுறை பாடகர்களின் குரலில் அங்கங்கே இசைத் தெறிப்பும் சஞ்சய் முதல் விஜய் வரை இளைய தலைமுறை கலைஞர்கள் பாடிய பாபநாசம் சிவனின் 36 முழுப் பாடல்களும் இதில் அடங்கியுள்ளன. திரைப்பாடல்கள் பலவும் திரைப்படக் காட்சிகள் சிலவும் இடம்பெற்றுள்ளன.

அமெரிக்காவில் ஏற்கெனவே அறிமுகமாகி சிறப்பான வரவேற்பைப் பெற்றிருக்கும் இந்த சி.டி. ரோம் இப்போது இந்தியாவில் விற்பனைக்கு வந்திருக்கிறது.

- மலர்

# பரிசு பெற்ற ஆயுள் கைதி!



• விழாவில்...

வேலூர் மத்திய சிறை. மிகப் பிரம்மாண்டமாகப் பரந்து கிடந்த சிறையின் நச்சுக் கூடத்தில் சிறைவாசிகள் சாரி சாரியாய் அமர்ந்து மேடையை ஆச்சர்யமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். காரணம் ஆயுள் சிறைக் கைதி திருஞானத்திற்குப் பரிசு வழங்கும் விழா அது.

இந்து மிஷன் ஏற்பாடு செய்திருந்த 'பெரிய புராணத்தில் வாழ்க்கை நெறி' என்ற இலக்கிய ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், தமிழ்படிக்கும் மாணவர்கள் என்று எண்ணூறு பேர் கலந்து கொண்டதில் ப. திருஞானம் தனிப் பரிசுபெற்ற பத்து பேரில் ஒருவர். "ஆயுள் கைதியாக இருக்கும் ஒருவரின் அரிய சாதனை இது..."என்று ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகளே மனமுவந்து பாராட்டியதோடு, அவரை காஞ்சி மடத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு அழைத்துவர ஏற்பாடு செய்திருக்கிறார். ஆனால் சிறை விதிகள் இடம் கொடுக்காமல் போக, "பரிசளிப்பு விழாவைச் சிறையிலேயே வைத்துக் கொள்ளுங்களேன்" என்று வேலூர் மத்திய சிறையின் கண்காணிப்பாளர் நா.பாலச்சந்திரா அனுமதி அளித்ததைத் தொடர்ந்துதான் சிறையிலேயே இந்தப் பரிசளிப்பு விழா!

இந்து மிஷன் அமைப்பின் செயலாளரும், மூத்தபத்திரிகையாளருமான கே.சி. லட்சுமிநாராயணன், தமது துணைவியாருடன் பரிசளிக்க வந்திருந்தார். பெரிய புராணம் குறித்து, எளிய தமிழில், இவர் ஆற்றிய உரையில் அந்த அரங்கமே ஆழ்ந்து போனது. "நமக்கு வழி காட்ட யாருமே இல்லை... ரோல்மாடல் இல்லை என்று வருந்துகிறோம். ஆனால் கிட்டதட்ட எண்ணூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த அறுபத்து மூன்று நாயன்மார்களின் முன்மாதிரி வாழ்க்கையை எந்தக் காலத்திற்கும் முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்" என்றவர், நாயன்மார்களின் வாழ்க்கையைச் சுருக்கமாக விளக்கியபோது கரவொலியில் சிறைவளாகமே அதிர்ந்தது.

சிறை கண்காணிப்பாளர் பாலச்சந்திரா பேசும்போது, "நீங்கள் இன்றோ நேற்றோதான் சிறைவாசி. நான் முப்பத்து இரண்டு வருடமாகச் சிறையில் இருக்கிறேன்" என்றதும் சிரிப்பொலி.



• திருஞானம்

சான்றிதழ், சால்வை, பரிசுப் பணம் பெற்ற திருஞானத்தை, மேடையில் பேசவும் அனுமதித்தார்கள்.

"சிறை கொடூரமானது என வெளியில் இருந்து சொல்பவர்களுக்கு, அத்தகையது அல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பாலச்சந்திரா போன்ற கனிவானக் கண்காணிப்பாளரும், நூலகமும் இருந்துவிட்டால் சிறை, பூங்குயில் கூவிடும் பூஞ்சோலை. இங்கிருக்கும் புத்தகங்களை வைத்துக் கொண்டுதான் நான் இந்த ஆய்வுக் கட்டுரையை எழுதினேன். பெரிய புராணத்தைத் திரும்பத் திரும்ப படிக்கிறபோது புதியபுதிய அர்த்தங்கள் விரிகின்றன. சிறை நூலகத்திற்குப் புதிய புத்தகங்களை அரசு வழங்கினால் என்போன்ற ஆயுள் சிறைவாசிகளுக்குச் சிறை என்ற சிந்தனையே எழாது" என்றார். பழனிபாபா கொலை வழக்கில் தண்டனை பெற்றவர் இந்த திருஞானம். சிறையில் இப்போது இவர் படித்து வருவது புனித குரான்!

— வெற்றித்திருமகன்

படம்: ஸ்ரீஹரி

'சித்தி' முடிவை நோக்கி விரைந்து கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஈரமுள்ள இதயத்தை ஈரமான குரலில் வெளிப்படுத்தி வந்த சிவகுமாரை அரைச் சன்னியாசியாக்கி ஓரம் கட்டியிருப்பதைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது. The hero is an ordinary person with an extraordinary level of commitment என்றபடி அவர் அலாதி ரகம்.

தலைக்கு மேல் வெள்ளம் வந்தாலும் தன்னம்பிக்கை குலையாமல் இருக்கும் ராதிகா, பழக்கமான பாத்திரமாகி விட்டார். ஆனால் சமீப வாரங்களில் அதிகம் ஜொலிப்பவர்கள் இரண்டு பேர்.

முன்னாள் தாதாவாக இருந்து இந்நாள் சாதுவாகியிருந்த ராதிகாவின் அப்பா ஒருவர். அநியாயமாகத் திருடப்பட்டுவிட்ட உயிலைக் கைப்பற்றுவதற்காகத் திரும்பவும் தாதா அவதாரம் எடுக்கிறார் இவர். எதிரியின் பங்



களாவுக்குள் அதிரடியாக ஆட்டோவில் இறங்கி, அலறும் வேலைக்காரியை அலட்சியம் செய்து, 'பிடிச்சுக் கட்டுங்கடா அவனை!' என்று அடியாட்களுக்கு ஆணையிட்டுவிட்டு, வேட்டி நுனியைத் தூக்கிப் பிடித்தபடி உள்ளே செல்லும் மிடுக்கு அபாரம்.

மற்றவர் 'வில்லி' யுவராணி ரவீந்திரன். அதர்மம் வெற்றி பெறும்போதெல்லாம், மூக்குக் கண்ணாடி வழியே ஏளனப் பார்வையை வீசும் கண்கள்; மமதையைக் காட்டும் உதட்டோரப் புன்னகை. நான் ஜெயித்துக் கொண்டிருக்கிறேன், நீ தோற்றுக் கொண்டிருக்கிறாய் என்பதைச் சொல்லும் மௌன நடை.

A magic that transcends logic.

'அரிசி விலையா! உயர்ந்திருக்கிறதா? இல்லையே!' என்று முதல்வர் செல்வி ஜெயலலிதா சொன்னபோது (ராஜ் நியூஸ்)





யார் இவருக்கு இந்தத் தப்பான தகவலைத் தந்தார்கள் என்ற திகைப்பு ஏற்பட்டது. போயஸ்தோட்டத்துக் காவல்காரரின் மனைவியைக் கூப்பிட்டுக் கேட்டிருந்தால்கூட 'ஆமாம்மா, கிலோவுக்கு ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் போல உசந்திருக்குது' என்று சொல்லியிருப்பாரே? (பிறகு ஒருவேளை குறைந்ததோ என்னவோ; முதல்வர் சொன்ன தினத்தன்று உயர்ந்துதான் இருந்தது. There are still people who live in ivory towers என்று தெரிகிறது.)

அறிஞர் அண்ணா ஒருமுறை, "முன் காலத்
தில் ராஜாக்கள் அமைச்சரைக் கூப்பிட்டு,
'மந்திரி! நாட்டில் மும்மாரி பெய்கிறதா?'
என்று கேட்பார்கள். அரண்மனை உப்பரி
கைக்கு வெளியே கையை நீட்டிப் பார்த்தாலே
மழை பெய்கிறதா இல்லையா என்று தெரிந்து
கொள்ளலாமே? இதற்கு ஏன் மந்திரியைக்
கேட்க வேண்டும்?" என்று பரிகாசம் பண்ணி
னார். அன்று அண்ணா சொன்னது இன்று
ஏனோ ஞாபகம் வந்து தொலைக்கிறது!

குழந்தைகளுக்குக் கதை சொல்லும் கலை
யில் தேர்ச்சி பெற்றுள்ள மங்களா ஐயரை



நையாண்டி தர்பாரில் பார்த்தபோது இப்படிப் பட்ட வித்தியாச வித்தியாசமானப் புள்ளிகளை எங்கிருந்துதான் இந்த யூகிசேது பிடிக்கிறாரோ

# மனசில் நிற்கும் இரண்டு பேர்!

என்ற வியப்பு உண்டாயிற்று.

'ஒரு ஊரிலே ஒரு காக்கா...' என்று ஆரம்பித்து, இரண்டாவது வரியின்போது, 'ஏய்! இங்கே கவனி!' என்றும், மூன்றாவது வரியின்போது 'ஏய்! நிமிர்ந்து உட்கார்!' என்றும் அதட்டியபடியே கதை சொல்லக் கூடாது என்று கூறியவர், அவர்கள் ஆர்வத்துடன் கவனிக்க வேண்டுமானால் கதையை எப்படிச் சொல்ல வேண்டும் என்று குரலின் ஏற்ற இறக்கங்கள் மூலமும் கைகளின் அதிசய அபிநயங்களின் மூலமும் அபாரமாக விளக்கினார். கூடவே பாட்டு வேறே! இங்கிலீஷ் பாட்டைத் தமிழில் பாடுகிறாரா, தமிழ்ப் பாட்டை இங்கிலீஷில் பாடுகிறாரா என்பதுதான் சட்டென்று புரியவில்லை. அதனாலென்ன? If you can dream it, you can do it என்று வால்ட் டிஸ்னி சொன்னது உண்மை.

சேதுவுக்கு ஒரு யோசனை: பேட்டி காணப்படுகிறவர் யார், என்ன செய்கிறார், அவருடைய சிறப்பு என்ன என்ற குறிப்புகளை எழுத்தாகவும் சில வரிகள் தனியே காட்டினால் என்ன? நிகழ்ச்சியின் அசுர வேகம் பல விஷயங்களை அடித்துக் கொண்டு போய் விடுகிறது.

**வினோத்**

'நானும் பொம்மை நீயும் பொம்மை, நினைத்துப் பார்த்தால் எல்லாம் பொம்மை' என்ற பாட்டைப் பாடியபோது, டைரக்டர் எஸ். பாலசந்தர் எவ்வளவு ஸ்லோவாகக் கையை மேலிருந்து கீழே இறக்குகிறாரோ அதே அளவு ஸ்லோவாக இருந்து இழுத்துப் பாட வேண்டியிருந்ததாம். இந்தப் பாட்டு ஒரு போதும் பாபுலராகாது. நமது சினிமா உலகக் கனவு அவ்வளவுதான்' என்று நினைத்து விட்டாராம் ஜேசுதாஸ். ஏனெனில் அதுதான் அவருடைய முதல் சினிமாப் பாட்டு.

'ஆனால் படத்தில் அந்தக் காட்சியைப் பார்த்தபோதுதான் எஸ். பாலசந்தரின் மேதை எனக்குப் புரிந்தது' என்றார் ஏசுவின் தாசர். ஒரு பிச்சைக்காரனின் மனத்தில் உள்ள சோகத்தை அந்த மகா ஸ்லோவான பாட்டு வெளிப்படுத்திய மாதிரி எதுவும் வெளிப்படுத்தியிருக்காது என்றார். உண்மையிலேயே, The music was so sensitively powerful.

பொதிகையில் அவரைப் பேட்டி கண்ட ஒய்.ஜி. மகேந்திரா 'இன்று தமிழர் திருநாள் - பொங்கல் பண்டிகை' என்று சொன்னதைக் கேட்டதும் தூக்கி வாரிப் போட்டது. அட, கற்பகாம்பாள் சமேத கபாலீசுவரப் பெருமானே! ஜனவரி மாத நிகழ்ச்சியின் மறு ஒளிபரப்பா இது!

பாரசீகத்தை ஆண்ட மன்னனொருவன் சிறந்த வேதாந்தியாக இருந்தான். நிலையானது என்று எதுவும் உலகத்தில் கிடையாது என்று சொல்பவன். தனது மோதிரத்தில் even this shall pass away என்று பொறித்து வைத்திருந்தான்.

ஆனால் இன்று அவன் உயிரோடு இருந்து, சென்னை முதல் இத்தாலி வரை கொசு சாம்ராஜ்யம் கொடி கட்டிப் பறப்பதைக் கண்டிருந்தால், 'உலகத்தில் கொசு ஒன்றுதான் நிலையானது' என்று கூறியிருப்பான். சன் நியூஸ் தெரிவித்த ஒரு செய்தியின்படி, இத்தாலியில் ஓர் ஊரில் கொசுத் தொல்லை சகிக்க முடியவில்லையாம். கொசுவை ஒழிப்பதற்காக ஒரு போட்டி வைத்தார்களாம். பத்தே நிமிடத்தில் முப்பத்து நாலு கொசுவைப் பிடித்த ஒரு வீராங்கனைக்கு ஐந்து கழுதைகள் பரிசளிக்கப்பட்டதை ஒளிபரப்பினார்கள்! (ஐந்து கழுதைக்குப் பதில் ஐந்து கொசு வலை கொடுத்திருந்தால் பொருத்தமாயிருந்திருக்குமே?)


# நடக்குமென்பார்; நடக்கும்!



**மேஷம்:** வீரப்பனைப் பிடிப்பதில் புதிய தீவிரம் காட்டப்படுவது போல, உங்கள் முயற்சிகளிலும் புதிய உத்வேகம் காணப்படும். கூட்டுத் தொழில் ஜோராக நடக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு 'கிராஃப்' ஷீட்டில் ஏறுமுகமான வளர்ச்சி. 'குரு' பகவான் மிதுன ராசிக்குப் பிரவேசம் என்பதால், பண விஷயம் அப்படி யொண்ணும் ஆஹா, ஓஹோன்னு இருக்காது. எப்போதாவது சரியான நேரத்துக்கு வந்து சேரும் ரயில்கள் போல, ஓரிரு அதிர்ஷ்ட வாய்ப்புகள் தற்செயலாக வந்து சேரும்.



**ரிஷபம்:** இந்த வாரம் ரொம்ப நல்ல பலனெல்லாம் எதிர்பார்க்காதீங்க. ஏன்னா குரு 2ல் இருந்தாலும் சூரியனுடன் தோஸ்தாக இருப்பதால் முழு பலன் கிடைக்காது. குரங்கு மனிதன் நிஜமா? கற்பனையா? என குழம்பும் டெல்லிவாசிகள் போல உங்களுக்கும் மனத்தில் ஏதேனும் குழப்பம் தார்ப்பாய்க் கூடாரம் அடித்துக் குடி கொண்டிருக்கும். கொடுக்கல் - வாங்கலில் ரொம்ப உஷாராக இருக்கணும்.



**மிதுனம்:** ராசியில் ராகு, குரு, சூரியன்னு பலமான கூட்டணி இருக்கிறதனால, ஸாரி... அனுகூலமானப் பலன்கள் சொல்ல முடியாது ... வாழ்க்கைத் துணை விஷயத்தில் ரொம்ப கவனமா இருக்கணும். ஐஸ்வர்யாராய் - சல்மான்கான் உறவு போல விரிசல் விட்டுப் பிரிந்து போக நேரிடலாம். வீண் சண்டை சச்சரவுன்னா உடனே காணாமப் போயிடுங்க. வார இறுதியில் நல்ல செய்திகள் வந்து வயிற்றில் கஸாட்டா மில்க் ஷேக் வார்க்கும்!




**கடகம்:** சனி, நல்லது செஞ்சாலே அம்சமான வாரமா இருக்கும். கூடவே சுக்ரன், கேது இரண்டு பேரும் செம மூடுல இருக்கறதனால டும்... டும்... டும் மாதவன் போல 'கிருஷ்ணா கிருஷ்ணா'ன்னு ஜாலியா பாடலாம். முட்டை விலை கிடுகிடுன்னு உயர்ந்தது போல, உங்கள் வாழ்க்கையிலும் வசதிகள் திடீர்னு உயரும். விவசாயிகள், வியாபாரிகளுக்கு 'நேரந்தேன்!'




**சிம்மம்:** குற்றாலத்தில் சீஸனுக்கு அடிக்கிற குளு குளு சாரல் மாதிரி உங்கள் வாழ்க்கையிலும் ஜில் சமாசாரங்கள் நடக்கப் போகுது. பிரபு, தனவான்கள் முக்கியஸ்தர்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருந்து உதவுவார்கள். மாணவர்களுக்கு விசேஷமான வாரம். மைதாஸ் ராசி வந்து ஒட்டிக்கும். தொட்டதெல்லாம் கே.டி.எம் தங்கமாகும்.



**மேஷ ராசிக்காரரான டி.வி. தொகுப்பாளினி மீனாட்சிக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்து சேருமாம்.**



**கன்னி:** மேட்டூர் அணையில் தண்ணீர் வரத்து நாளுக்கு நாள் அதிகரித்து வருவது போல உங்கள் பொருளாதார நிலையிலும் கண்கூடாக உயர்வு ஏற்படும். விருந்து உபசாரம், கேளிக்கை, விளையாட்டு என்று வித்தியாசமான ரசனைகளில் ஈடுபாடு ஏற்படும். கலைத்துறை ஆட்களுக்கு, கலக்கலான வாரம். பாங்க் - பாலன்ஸ் கணிசமாக ஏறும்.




**துலாம்:-** குருபகவான் பெரிய மனசு பண்ணி, 9ம் இடம் மாறியிருக்காரு... அவருக்கு முதல்ல 'தேங்க்ஸ்' சொல்லிடுங்க. நம்பிக்கையோட நிறைய விஷயங்களைச் செஞ்சு 'உன்னைப் போல உண்டோ இப்பாரினில்?' அப்படின்னு பாராட்டெல்லாம் பெறுவீங்க. பொருளாதார நிலை அபிவிருத்தி அடையும். பழைய பாக்கி, கடன், வட்டி, அது.. இதுன்னு என்னென்ன இருந்ததோ எல்லாத்


தையும் ஒரே செட்டில்மெண்ட்ல முடிச்சுடு வீங்க.



**விருச்சிகம்:** புழுத்த அரிசியா, புது அரிசியான்னு வாக்குவாதம் நடக்கற மாதிரி, உங்க மனசுக்குள்ளேயும்'செய்யலாமா, வேணாமா'ன்னு நிறைய வாக்குவாதம் நடந்துக்கிட்டிருக்கும். இப்ப கிரக சஞ்சாரம் சாதகமா திரும்பியிருக்கறதால, சில நல்ல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கு... துணிச்சலா முடிவெடுங்க. 'வெற்றி... வெற்றி'னு குரல் கொடுக்கலாம். உடல் நலம் சீராக இருக்கும். குடும்பத்துல சின்ன சலசலப்பு இருக்கத்தான் செய்யும். பொறுமையா கையாளுங்க...




**தனுசு:** புத்தம் புதிய க்ரீன் ஆப்பிள் மிராண்டா போல, சூப்பரா, சுவையா இருக்கப் போகுது உங்க வாழ்க்கை... செயல்ல முன்னேற்றம், திறமையில வேகம், முகத்துல வசீகரம், பேச்சுல புத்திசாலித்தனம்னு அடுக்கிக்கிட்டே போகலாம். ஆனா பாருங்க, ஜென்ம ராசியில கேது, செவ்வாய் வக்கிரமா இருக்கறதால, கொஞ்சம் ஸ்பீடு பிரேக்கர் போட்ட மாதிரி இருக்கும். நிதானமா போங்க... அடிகிடி பட்டாலும் சின்ன பிளாஸ்திரியோடு நிறுத்திக்கலாம்.



**மகரம்:** மனம் போன போக்கில் மாற்றல் செய்யப்படும் அரசு அதிகாரிகள் போல அல்லாமல், உங்கள் கிரகங்கள் தத்தம் இடங்களில் அனுகூலமாக உலவுவதால், நல்ல பலன்களாகத்தான் நடக்கப் போகுது. குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும் 'என்ன ஸ்வீட் போடலாம்'னு யோசிச்சு வெச்சுக்கோங்க. புதிய பொருள், வாகனம், மனை சேர்க்கை நடக்கும். ஏற்றுமதி, இறக்குமதி விஷயத்தில் வெகுமதி கிடைக்கும். வெளிநாட்டுப் பேச்சு வார்த்தைகள் 'சுபம்' என்ற கார்டுடன் மங்களகரமாக முடியும்.



**கும்பம்:** லாரி தண்ணீர் போய், ரயில் தண்ணீர் காலம் வந்திருக்கு... உங்களுக்கும் குரு பெயர்ச்சியால நல்ல காலம் வந்திருக்கு... துணிச்சலா, நம்பிக்கையா எடுத்த காரியங்களைத் திறமையா சாதிச்சுப்பீங்க. 'சீனா பொருட்கள் வருமா, வருமா'னு காத்திருப்பது போல, நீங்களும் 'வெளிநாட்டிலிருந்து ஏதாவது நல்ல தகவல் வருமா'ன்னு காத்துக்கிட்டிருக்கீங்க இல்லையா...? கவலையேப் படாதீங்க... அது இறக்கைக் கட்டிக்கிட்டு வந்து சேரும்!



**மீனம்:** அடேயப்பா! ரொம்ப அதிர்ஷ்டக்காரர் நீங்க... சனி, செவ்வாய், கேது, சுக்ரன்னு எல்லாருமே உங்களுக்கு சந்தோஷ 'பொக்கே' கொடுக்கறாங்க. ஜெயலலிதா, வாஜ்பாயிக்குக் கொடுத்ததை விட வெயிட்டான மலர்ச் செண்டு... அதனால தூள் பரத்துவீங்க. எதிர்ப்பு குறையும். எதிரிங்க 'ஐயோ, சாமி'னு ஓடிடுவாங்க. உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரிகளோட ஆசீர்வாதம் கிடைக்கும். கணவன் - மனைவி உறவில் உற்சாகம் ஊற்றெடுக்கும்.

## திடீர்ப் பரிசுப் போட்டி முடிவு- 9



ரஜினிகாந்தும் முதல்வர் ஜெயலலிதாவும் சந்தித்துக் கொண்டால் என்ன பேசிக் கொள்வார்கள் என்று கேட்டிருந்தோம். வந்து குவிந்த வாசகர் கமெண்ட்களில் ரூ.100 பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது கள்ளக்குறிச்சி வாசகர் வே. ஆறுமுகத்தின் கமெண்ட்:



ஜெயலலிதா : (பாடுகிறார்) ''ஜெயலலிதாவின் ராஜ்ஜியத்தில் உய்யலாலா! - பாட்டு எப்படி?''

ரஜினி : ''நீலாம்பரி ராகம்னு நினைக்கிறேன்!''

# முப்பத்திரண்டில் மரணம்!



**சா**லை விபத்தில் இறந்து போனார் முப்பத்திரண்டு வயது திரைப்பட இயக்குனர் ப. திருப்பதிசாமி. எதிர்படுபவர்களை எளிதில் அரவணைத்துக் கொள்ளும் சுபாவம் கொண்ட திருப்பதிசாமிக்கு நண்பர்கள் வட்டம் பெரியது. இன்னமும் மீள முடியாத துக்கத்திலிருக்கிறார்கள் அவரது பெற்றோரும் நண்பர்களும்.

"நல்ல திறமைசாலி, சட்டம் படிச்சிருக்கான். எந்த சப்ஜெக்ட் எடுத்துக்கிட்டு அவன்கிட்டே பேசினாலும் அவன் சொல்றதைக் கேட்டுக்கிட்டே இருக்கலாம். விவாதம்தான் அவனுக்குப் பிடிச்ச விஷயம். நாம நினைச்சுப் பார்க்க முடியாத அளவுக்குப் புதுமையான விஷயங்களைச் சொல்லிட்டிருப்பான். சினிமாவைப் பொறுத்தவரை அவனோட எண்ணமும் சிந்தனைகளும் வேற. தமிழ்ல ஜெயிச்சுடலாம். ஹாலிவுட்ல என்ன பண்ணப் போறோம்ங்கறதுதான் அவன் கவலை. தெலுங்கில் மூணு படம் பண்ணியிருக்கான். மூணும் ஹிட். அவனோட திறமையைப் பார்த்துட்டுத்தான் விஜய்காந்த் சார் 'நரசிம்மா' படத்தை அவன்கிட்ட கொடுத்தார். படத்தைப் பார்த்துட்டு 'அசத்திட்டீங்க திருப்பதி'ன்னு அவரே புகழ்ந்திருக்காரு. இதையெல்லாம் சொல்லி ரொம்ப சந்தோஷப் பட்டான். இவனோட அடுத்த படத்துக்குச் சம்பளம் மட்டும் ஐம்பது லட்ச ரூபாய் பேசி புக் பண்ணிட்டுப் போயிருக்கிறார் ஒரு தயாரிப்பாளர். பாரதின்னா அவனுக்கு உயிர். 'முப்பத்தொன்பது வயசுக்குள்ள இப்படி சாதிச்சுட்டானே' என்பான் அடிக்கடி.... ஆனா முப்பத்திரண்டு வயசுல சாதிக்க இருந்தவன்...." சொல்லும்போதே கண் கலங்குகிறார் அவருடன் பதினைந்து வருடங்களுக்கும் மேலாக பழகிய மின்பிம்பங்கள் சுபா வெங்கட்.

தலைமைச் செயலகம் எதிரில் இருக்கும் ஒரு மரம் பற்றி தம் நண்பர்களிடம் அடிக்கடி சிலாகித்திருக்கிறார் திருப்பதிசாமி.

"இந்த மரம் எனக்கு ரொம்ப பிடிச்ச மரம். ஒரு படத்திலயாவது இந்த மரத்துக்கு உயிர் கொடுக்கப் போறேன்" என்று சொல்லியிருக்கிறார். ஆனால் அந்த மரத்துக்கு எதிரிலேயே விபத்து நேர்ந்து அவர் பலியான சோகத்தை நினைத்து விம்முகிறார்கள் நண்பர்கள்!

— அப்பு

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

வீட்டின் அழகு **கதவில்** தெரியும் !

Now Flat Buyers insist on

# MAYURAM

## TIMBER DOORS



because




Contact:

**MAYURAM TIMBER & GENERAL TRADING CORPN.**

H.O.: 83, G.S.T.Road, Chennai - 45. ☎:236 8297/238 1281.

Showroom: 13, Rameswaram Road, T.Nagar, Chennai - 600 017. ☎: 434 5207

Registered with the Registrar of Newspaper of India under
No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2001 *
Licensed to post without prepayment under PMG's Licence
No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka.

